

பேரறிஞர் அண்ணாவின்

# இரு

பூம்புகார் வெளியீடு

XA 192

# இரு பரம்பரைகள்

x03198

# இரு பரம்பரைகள்

பேரறிஞர்
டாக்டர் சி. என். அண்ணாதுரை,
எம். ஏ.,

சென்னை-1

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே,
சென்னை - 600 001.

விலை ரூ. 5-90

37109

பூம்புகார் வெளியீடு எண்: 155
முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1980
உரிமை: திருமதி ராணி அண்ணாதுரை

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பப்ளிகேஷன்ஸ் பிரஸ், சென்னை-600 001.

## பதிப்புரை

சமூகத்தின் மூலை முடுக்குகளில் 'ஒளிந்து கிடக்கும் உயிர்த் துடிப்புள்ள பிரச்னைகளில் ஏதாவது ஒன்றை எடுத்து, வெளிப்படுத்தி, அதற்குப் பரிகாரம் காண முயல்வது எதுவோ அதுவே சிறுகதை.

இதில் வெற்றி கண்டவர் விரல்விட்டு எண்ணத்தக்க அளவிலேதான் இன்றளவும் இருந்து வருகிறார்கள்.

ரசனைக்காக எழுதுவதை, கவலையை மறப்பதற்காக கற்பனையில் சிறகடித்துப் பறப்பதையெல்லாம் சிறுகதையாக ஒருக்காலமும் அங்கீகரிக்க முடியாது.

படிப்பதற்காக மட்டுமல்ல, படிப்பினை பெறுவதற்காகவும் அந்தச் சிறுகதை இருக்க வேண்டும்.

துவண்டு போயிருக்கும் மனத்தைத் தூக்கி நிறுத்தும் வல்லமை கவிதைக்கு எந்த அளவுக்கு உண்டோ, அதே அளவுக்கு சிறுகதைக்கும் உண்டு.

இதிலே கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை பலிக்காது.

கதைக்கென்று சிருஷ்டிக்கப்படும் ஒரே ஒரு பாத்திரத்தின் நேர்முக தரிசனமே இதற்குத் தேவை.

புறப்படும் இடத்திலிருந்து அந்தப் பயணம் முடியும் கட்டத்திற்குள்ளே வந்து போகும் கிளைவழிகளுக்கெல்லாம் இதிலே இடமில்லை.

பயணத்தின் குறிக்கோளே இதற்குப் பிடித்த நைவேத்தியம்.

உணர்ச்சி மயமான சொற்களால் படிப்போர் நெஞ்சை உருகிடச் செய்யும் யுக்தியே கதைக்குரிய சிறந்த ஆராதனை.

மனித சமுதாயத்தில் இன்னமும் ஜடமாகவும் முடமாகவும் இருக்கின்ற விகாரங்களை— விவஸ்தை கெட்ட வ்ஸ்வரூபங்களை அளந்து காட்டும் அடையாளச் சீட்டாக இது அமைய வேண்டும்.

மனித மனத்தை நிறைவு படுத்தும் வேலையை, கொஞ்சம் அழகாக எழுதத் தெரிந்த யாராலும் செய்து காட்ட முடியும். அதுவல்ல, சிறுகதை.

ஒரு மனத்தின் சேஷ்டையை மற்றொரு மனத்துக்கு எடுத்துக் காட்டுவது மட்டுமல்ல;

அந்த மனத்தின் கசிவைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் அது பொருந்தி இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட கதையைத்தான் 'சிறுகதை' யாகக் கொள்ள முடியும்.

காலத்துக்கேற்ற மாதிரி —சூழ்நிலைக்குத் தகுந்த விதத்தில் எந்த ஒரு பூவும் தன் நிறத்தை மாற்றிக் கொள்வதில்லை. ஆனால் மனிதருக்கு புத்தி சொல்லக் கிளம்பும் சில புஸ்வாண எழுத்தாளர்கள் மட்டும் உடையை மாற்றிக்கொள்வது போல மனத்தை மாற்றிக் கொண்டு எழுதுவதையெல்லாம் 'கதை' என்று கதைக்கின்ற இந்தக் காலகட்டத்தில், உங்கள் கரங்களில், உண்மையான -உயிருள்ள கதைகளைச் சிருஷ்டித்த பெருமைக்குரிய பேரறிஞர் அண்ணா அவர்களின் சிறுகதைத் தொகுப்பை, 'இரு பரம்பரைகள்' என்னும் தலைப்பில் தவழவிட்டிருக்கிறோம்.

மனித சமுதாயத்துக்கு அவசியமாகத் தேவைப்படும் ஒன்றை, அது எங்கு பிறந்திருந்தாலும் அதைச் சுவீகாரம் கொள்வதில் எந்த ஒரு தவறும் கிடையாது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'சிறுகதை' என்பது சுவீகாரக் குழந்தைதான். அதுவும் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட குழந்தை அது.

அந்தக் குழந்தையை அமரர் அண்ணா அவர்கள், தம் கரத்தில் ஏந்தித் தவழவிட்டி

ருக்கும் பாங்கை இதில் நீங்கள் பரவலாகக் காண லாம். அந்தக் குழந்தையின் மூலமாக அவர் வெளிப்படுத்தியிருக்கும் ஒவ்வொரு விஷயமும் விழிப்பை மட்டுமா, நல்ல வெளிச்சத்தையும் கொடுக்கக் கூடிய ஒன்றாகும்.

அத்தகு சிறப்புள்ள —உயிர்த் துடிப்புள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் கதைகளை நாங்கள் வெளியிட்டுக் கொள்ளும் உரிமையைப் பூரணமாக வழங்கி இருக்கும் திருமதி ராணி அண்ணாதுரை அவர்கட்கு எங்களின் இதய பூர்வமான நன்றி.

**பூம்புகார் பிரசுரத்தார்**

# 1
# இரு பரம்பரைகள்

''ஜூலியா! என்ன கண்ணு, கோபம்? ஜிம்மி! துஷ்டன் நீ. போ! போய்ச் சமாதானம் செய் ஜூலியாவை.''

''ஜூலி! ஜூலி! இதோ பார் இப்படி. அடடா! புருஷன் மேலே கோபம் வந்துவிட்டால் நம்ம ஜூலியா செய்கிற அட்டகாசம் இருக்கே, சொல்லி முடியாது. எப்படி முறைத்துப் பார்க்கிறாள் பார்! ஜிம்மி, பாவம் கெஞ்சிப் பார்த்துத் தோற்றுப்போய், ஜூலியாவின் கோபம் தானாகத் தணியட்டும்'' என்று போய்விட்டான்.

''என்ன இருந்தாலும், ஜூலி! உனக்கு இவ்வளவு கோபம் ஆகாது.''

''உங்களுக்கும் நாளைக்கு ஒரு புருஷன் வந்தால்...'' என்று கேலி செய்ய ஆரம்பித்தாள் மாரி. தேவா, அவள் காதைத் திருகிக் கொண்டே, ''பேசாதே! எப்போது பார்த்தாலும், இந்தக் கல்யாணப் பேச்சே பேசிக் கேலி செய்வது தானா வேலை?'' என்று வேடிக்கையாகக் கண்டித்தாள். மாரி, இதுபோல் கல்யாணப் பேச்சைக் கேட்டுக் கேலி செய்த எத்தனையோ ''தேவா''க்கள், தொட்டிலாட்டிவிட்டுத் தூங்கிய குழந்தைக்கு முத்தமிட்டதைப் பார்த்தவள். தேவா, கல்யாணப் பேச்சைக் கேட்டுக் கோபித்தால், மாரி அடங்கிவிடுவாளா, என்ன!

''ஜூலியா எவ்வளவு ரோஷக்காரியோ அவ்வளவு ரோஷக்காரிதானேம்மா நீயும்!'' என்று மாரி மேலும், கேலி செய்து கொண்டிருந்தாள். ஜூலியாவைச் சாந்தப்படுத்த முடியாமல், சோகமடைந்த ஜிம்மியின் பரிதாபப் பார்வையைக் கண்டு, தேவா, ஓடிச்சென்று, பிஸ்கட் துண்டுகளைக் கொண்டு வந்து போட்டாள். ஜிம்மிக்கு, ஜூலியாவிடம

சரசமாடுவதிலே இருக்கிற சுவை, பிஸ்கட் தின்பதிலே ஏற்படுமா? தின்னவில்லை! ஜூலியாவும் ஒருமுறை ஜிம்மியின் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு மறுபடியும் அலட்சியமாக வேறு பக்கம் திரும்பிக் கொண்டது.

''அப்பா! அந்தக் குச்சு நாய்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன பார்த்தாயா? நேற்று, ஜூலியாவைத் தொட்டுத் தடவிக் கொடுத்தேன். பட்டு மெத்தை மேலே கை வைப்பதுபோல இருந்ததப்பா!''

''அழகான நாய்கள்தான்! ஜூலியா, ஜிம்மி இரண்டையும், பெங்களூரில் வாங்கினாராம்! விலை என்ன தெரியுமா? போன மாதம், நமது கம்பங்கொல்லையை விற்றோமே, என்ன விலைக்கு?''

''250க்கு''

''ஜூலியா ஜிம்மியின் விலையும் 250—தான்.''

சுகானந்த முதலியாரும் அவர் மகன் சிங்காரமும், மார்வாடியிடம் அடமானத்திலிருந்த தங்கள் ஓட்டு வீட்டிலே உட்கார்ந்து கொண்டு, தனபாலச் செட்டியாருடைய பங்களாவிலே, 'தர்பார்' நடத்திக் கொண்டு வந்த ஜூலியா, ஜிம்மி எனும் குச்சு நாய்களைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள் இதுபோல—வீடு, ஈடு காட்டப்பட்டது. கம்பங்கொல்லை விற்றாயிற்று! அந்தக் கொல்லையின் விலையும், குலைக்கும் போதும் நாகக்காகக் குலைக்கும் நாய்களின் விலையும் ஒன்று. அங்கே 250—ரூபாயில் நாய் வாங்கினார்கள். இங்கே இரண்டு தலைமுறையாகக் குடும்பச் சொத்தாக இருந்த கம்பங்கொல்லையை 250 ரூபாய்க்கு விற்றுவிட்டார்கள். இந்த நிலையிலே, பெயர் சுகானந்தம் என்று இருந்து பயன்? சுகமும் கிடையாது: ஆனந்தமும் கிடையாது!

தனபாலச் செட்டியார், ஒரு காலத்தில், சுகானந்தத்தோடு சேர்ந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர். சுகானந்தம் இன்னமும், அந்தச் 'சுவல்ப' வியாபாரத்திலேதான் இருந்து வருகிறார். தனபாலச் செட்டியாரோ, எப்படியோ

இலட்சாதிபதியாகிவிட்டார்! என்றாலும், பழைய சினே கத்தை மட்டும் விட்டுவிடவில்லை. வீட்டிலே நடைபெறும் எந்தக் காரியத்துக்கும் சுகானந்த முதலியாரை அழைப்பார். 'சிலதுகள், அதிர்ஷ்டம் வந்ததும் தலைகால் தெரியாமல் ஆடும். நம்ம தனபாலு, அப்படிப்பட்டவனல்ல' என்று சுகா னந்தம் தன் நண்பர்களிடமெல்லாம் கூறுவார்.

'ஏம்பா தனபாலு!' என்றுதான் சுகானந்தம் அழைப் பது வழக்கம். நேரிலே பேசும்போதும், தன் நண்பர்களிடம் பேசும்போதும், 'தனபாலு' என்று அழைத்த அதே சுகா னந்தமே, சில சமயங்களில் 'செட்டியார்' என்று அழைக்க நேரிட்டுவிடும்! பங்களாவுக்கு ஒரு காவல்காரன் ஏற்பட்டு விட்டான். அவன் யார் உள்ளே போவதானாலும், 'யார்? என்ன வேலையாக வந்தீர்கள்?' என்று கேட்டுவிட்டுத்தான் அனுப்புவான். சுகானந்தமும் தனபாலும் ஒரே வியாபாரம் செய்தவர்கள்; நண்பர்கள் என்று அவன கண்டானா? தெரிந் தாலுந்தானென்ன! தனபாலச் செட்டியார், அவனுக்கு எஜமான். சுகானந்தம், யாரோ ஒரு ஆசாமிதானே! அப் படித்தானே அவன் கொள்ள முடியும? ஒருநாள் சுகானந்தத் தையும் அவன் வாயிற்படியண்டை நிற்க வைத்துவிட்டான்.

''யார் நீங்கள்?''

''நானா! நீ யாரடாப்பா? புதுசோ? ஏற்பாடே புது சாகத்தான் இருக்கு. நான் அவருக்குச் சினேகிதன்.'' என்று சுகானந்தம் பதில் கூறினார். கூறிவிட்ட பிறகு யோசித்தார். 'அவர், இவர்' என்றல்லவா கூறவேண்டி வந்துவிட்டது, நம்ம தனபாலுவை என்று கொஞ்சம் கோபமும் அடைந் தார்.

''நீங்க யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று மீண்டும் கேட்டான் காவற்காரன். என்ன சொல்ல முடியும்? 'தன பாலுவை', என்று சொல்வதா? மரியாதையாக இருக்குமா? உடனே, சுகானந்தம், ''நான் தனபாலச் செட்டியாரைப் பார்க்க வேண்டும்.'' என்று கூறினார். கூறிவிட்டு மறுவிநாடி யோசிக்கலானார். 'செட்டியார்' என்று கூற நேரிட்டதே,

நம்ம தனபாலுவை; நாமும் அவனும் எவ்வளவு அன்யோன்ய மாகப் பழகினோம்; ஒரே கடையிலே இருந்திருக்கிறோம். ஒரே வியாபாரம் செய்தோம். இன்று அவன் ஒரு பணக்கார னாகிவிடவே, நாமே அவனைச் 'செட்டியார்' என்று சொல்ல வேண்டி நேரிட்டது என்று கோபந்தான். அந்தக் கோபம் மேலும் அதிகரித்தது. 'இங்கேயே இரு! உள்ளே போய், 'ஐயா'வைக் கேட்டுவிட்டு வருகிறேன்'' என்று சொல்லி விட்டு, வேலையாள் உள்ளே போனபோது, 'ஐயாவாம் ஐயா! இவனுக்கு அவன் ஐயா! எனக்கென்ன? சே! நாம் இவனைப் பார்க்க வருவதே தவறு. பேசாமல் போய்விடு வோம்!'' என்றும் நினைத்தார். ஆனால் ஒரு யோசனை வந்தது. வந்ததே வந்தோம். இந்தத் தடவை மட்டும் தன பாலுவைப் பார்த்து, இங்கே நடக்கும் அமுலைப் பற்றிச் சொல்லிக் கண்டித்துவிட்டுப் போய்விட வேண்டும் என்று தீர்மானித்தார்.

''ஏம்பா, தனபாலு! அற்பனுக்கு வாழ்வு வந்தா... அர்த்தராத்திரியிலே குடைபிடித்து நடப்பான் என்பார்களே, அதே கதையாத்தான் இருக்கு. ஏது, பெரிய அமுல் நடக் குதே இங்கே? இப்போ என்னமோ அதிர்ஷ்டம் அடிச்சுது; பணம் சேர்ந்தது! இதற்காகப் பழைய மரியாதை, பாசம், நேசம் எல்லாம் போயிடணுமா? நான் என்னமோ, மற்ற வங்களைப் போல தலை துள்ளிப் போகாமெ, நீ மட்டு மரி யாதையோட இருந்து வருவேன்னுதான் நினைச்சேன். பணம் சேர்ந்ததும் நீயும், 'அதுக' போலத்தான் நடக்கறே இது சரியல்ல! செல்வமிருக்கே, அது சாஸ்வதமல்ல. என்ன பணம் இருந்தாலும் பிரயோஜனமில்லை. குணம் இருக்க ணும். அப்போதுதான் லட்சுமி தங்குவா!'' என்று மளமள வென்று, தன் மனதிலுள்ளதைப் பூராவும் கொட்டிவிட வேண்டுமென்ற கோபத்தோடுதான் மடமடவென்று வேலைக் காரன் பின்னாலே சென்றார் சுகானந்தம். அவ்வளவு கோப மும் பறந்து போகும்படிச் செய்துவிட்டார் தனபாலச்செட்டி யார்! சுகானந்தத்திடம் பேசி அல்ல; வேலைக்காரனை ஏசி!

''ஏண்டா, தடியா! இவரையா, யாரோ வந்திருக்காங்க என்று சொன்னே? முட்டாளே! இவர் யாரு? நம்ம சினேகிதரடா! இந்த உலகத்திலேயே, என் குடும்ப விஷயமா அக்கரை கொண்டவர் யாராவது இருக்கிறாங்களான்னா, அது இவர்தாண்டா. மடப்பயலே! இனி, எப்போதானாலும் சரி, இவர் வந்தா, நீ நிறுத்தக்கூடாது. கேள்வி கேட்கக் கூடாது. இவர்தான் நான்: நான்தான் இவர்! போ! மனுஷாளுடைய தராதரம் தெரியலை'' என்று தனபாலச் செட்டியார் வேலையாளைக் கண்டித்தார். உச்சி குளிர்ந்தது சுகானந்தத்துக்கு. மெய் மறந்தார். தனபாலுக்குக் கோடி கோடியாகச் சேர்ந்தாலும் தகும் என்று எண்ணிக் கொண்டார். பழைய சினேகிதத்தை எவ்வளவு மதிக்கிறான் தனபாலு! எவ்வளவு அருமையான குணம்! குணம் அப்படி இருப்பதால்தான் பணம் சேர்ந்தது என்று எண்ணிக் கொண்டார். தன்னைப் பெருமைப்படுத்திய நண்பனைப் பற்றி அன்று முதல், சுகானந்தமும் தானாகவே மரியாதையோடு பேசிப் பெருமைப்படுத்தலானார். இந்த நிலையிலே இருந்தது, இருவரின் நட்பும்.

சிங்காரத்துக்கு அந்தக் குச்சு நாய் மீது ஏற்பட்ட ஆசை அடிக்கடி அவனைத் தனபாலச் செட்டியாரின் பங்களாவுக்கு இழுக்கலாயிற்று. ஜிம்மியும் ஜூலியாவும் ஊடலோடு திருப்தி அடைந்துவிடுமோ! அழகான இரண்டு ''குட்டிகளை'' ஈன்றெடுத்த, ஜூலியா, பெருமையோடு, அவைகளையும், அவைகளைக் கண்டு பூரிக்கும் ஜிம்மியையும் பார்த்து மகிழ்ந்தாள். குட்டிகளிலே ஒன்று வெள்ளை; மற்றொன்று கருப்பு. நிறத்திலே மாறுபாடு இருந்தது. அழகோ சமம். சிங்காரமோ இரண்டிலே எதையாவது ஒன்றைப் பெறத் தவம் இருக்கவும் தயாரானான். தகப்பனாரிடம் மன்றாடினான், ஒரு 'குட்டி'யை வாங்கித் தரச்சொல்லி.

''அப்பா....''

''என்னடா....?''

''அந்த நாய்க்குட்டி...''

"அடே, நமக்கேண்டா அந்தச் சனியனெல்லாம்!"

"போ, அப்பா! எவ்வளவு அழகாக இருக்கு!"

"ஆமாம், அழகுதான்! ஆனால் அதற்குப் பாலும் பிஸ்கட்டும் வேண்டுமே, ஒரு நாளைக்கு எட்டணாவுக்கு.'

"எப்படியாவது வளர்க்கலாம் அப்பா! நீங்கள் கேட்டுப் பாருங்களேன் செட்டியாரை!"

"கேட்டால் கட்டாயம் கொடுப்பான் தனபாலு, ஆனாலும் நமக்கு ஏண்டா நாயும் பூனையும்?"—தந்தைக்கும் மகனுக்கும் இது பேச்சு.

"கருப்பு நிறம்? செச்சே! டர்ட்டி; நமக்கு வேண்டாம்!"

"வெள்ளை நிறத்திலும் ஒரு குட்டி இருக்கிறது சார். இன்கம்டாக்ஸ் ஆபீசருக்கு ஒன்று. உங்களுக்கு ஒன்று தருவதாக நான் முன்பே தீர்மானித்துவிட்டேன்."

"சரி! வெள்ளை நிறத்திலே இருப்பதைக் கொண்டு வா. ப்யூன், இப்போதே வேலைகளைச் சரியாகச் செய்வதில்லை. இந்த நாய்க்குட்டியும் வந்துவிட்டால் தீர்ந்தது. அவன் முழுச் சோம்பேறியாகிவிடுவான்.

டிப்டி கலெக்டர் தாமோதரன் பிள்ளைக்கும் தனபாலச் செட்டியாருக்கும், அதே நாய்க்குட்டி விஷயமாக நடந்தது இந்த உரையாடல். டிப்டி கலெக்டர் செட்டியார் போன பிறகு, தனது ப்யூனிடம் அந்தச் செட்டியார் பெரிய தொல்லை தருகிறார் என்றுகூடக் குறை கூறினார். செட்டியாரோ, கலெக்டர் துரை வீட்டிலே, தான் கொடுத்த நாய் வளரப் போவது தெரிந்து பெருமை அடைந்தார்.

சிங்காரத்தின் தொல்லை தாங்காது சுகானந்தம் தனபாலச் செட்டியாரிடம் சென்று நாய்க்குட்டி வேண்டுமென்று கேட்டபோது, செட்டியார் மறுப்பார் என்று கொஞ்சம்கூட எண்ணவேயில்லை. கேவலம் ஒரு நாய்க்குட்டியை, பால்ய

சிநேகிதனுக்குத் தர, தங்கமான குணம் படைத்த தனபாலு தடை சொல்வானா என்று நினைத்தார். ஆனால், செட்டியார் சொன்ன பதிலைக் கேட்டபோது, சுகானந்தத்துக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது.

''நாய்க்குட்டியா? சரிதான். டிப்டி கலெக்டர் இருக்கிறாரே, அவர் இந்தக் குட்டி தனக்கு வேண்டுமென்று, கெஞ்சிக் கூத்தாடினார். 'என்ன சார் இது, ஒரு குட்டியை இன்கம் டாக்ஸ் ஆபீசர் வேண்டுமென்றார். 'சரி' என்று அரை மனதுடன் ஒப்புக் கொண்டேன். இருப்பது இன்னும் ஒன்றுதான். அதையும் கொடுத்துட்டு எப்படித்தான் சார் மனசு நிம்மதியாயிருக்கும்!' என்று எவ்வளவோ சமாதானம் சொன்னேன். அந்த ஆள் பிடிவாதக்காரன். 'நூறானாலும் ஆயிரமானாலும் தருகிறேன். குட்டி கட்டாயம் கொடுத்தாக வேண்டு'மென்று ''ஆர்டரே'' போட்டு விட்டார். நான் என்ன செய்வது? அடுத்த தடவை, கட்டாயம் உனக்குத் தருகிறேன்'' என்றார் தனபாலச் செட்டியார். சுகானந்தத்துக்குக் கோபந்தான். 'கேவலம் ஒரு நாய்க்குட்டி! அதைத்தர மறுக்கிறானே' என்று கோபந்தான். ஆனால் அந்தக் 'கேவலம்', கலெக்டர் துரை வீட்டுக்கு அல்லவா குடிபோகிறது? என்ன செய்வது! அடுத்த தடவை ஆகட்டும் என்ற பதிலை, சுகானந்தம் தன் மகனுக்குக் கொஞ்சம் மெருகு பூசித் தந்தார். சிங்காரத்துக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. என்ன செய்வது? டிப்டி கலெக்டர், இன்கம் டாக்ஸ் ஆபீசர் என்று செட்டியார் சொல்லிவிட்ட பிறகு, இவன் என்ன கூற முடியும்? சிங்காரத்தின் சார்பிலே தேவா ஆஜரானாள்!

''என்னப்பா இது! நமக்கு எவ்வளவு வேண்டியவர் சுகானந்தம்! அவருக்குக் கொடுத்தால் என்ன? இன்கம் டாக்ஸ் ஆபீசருக்கு நாய் வேண்டுமென்று யார் கேட்டார்கள்? நீங்களாகத்தான் வலிய வலியப் போய்க் கேட்கிறீர்கள், 'நாய்க்குட்டி வேண்டுமா?' என்று''. தேவா வழக்கு தொடுத்தாள். தனபாலச் செட்டியாா சிரித்தார், தேவாவின் உலக ஞான சூனியத்தைக் கண்டு!

''பைத்யமம்மா நீ! நானாக வலியப் போவதாகக் கேலி செய்கிறாயே, இன்கம்டாக்ஸ் ஆபீசர் வீட்டுக்கு மட்டு மல்ல, டிப்டி கலெக்டர் வீட்டுக்கும் நானாகத்தான் சென்று, 'நாய்க்குட்டி வேண்டுமா?' என்று கேட்டேன். இன்னும் ஒரு குட்டி இல்லையே என்று வருத்தமும் படுகிறேன். உனக் கென்ன தெரியும் அந்த விஷயம்?'' என்று கூறினார்.

''இன்னொரு குட்டி இருந்தால் சுகானந்தத்துக்குத் தரலாம் என்று நினைக்கிறீரா? ஐயோ, பாவம்! அவ்வளவா வது உங்க சிநேகிதர்மீது அன்பு இருக்கிறதே, அதுபோதும்.'' என்று தேவா கொஞ்சம் படபடப்பாகப் பேசினாள். அந்தப் படபடப்பைக் கண்டு தனபாலச் செட்டியார் ஆச்சரியப்பட வில்லை. தேவாவுக்குத்தான் ஆச்சரியம் பிறந்தது, அதற்கு அவர் அளித்த மறுமொழி கேட்டு...

''முட்டாள் பெண்ணே! மூன்றாவது குட்டி இருந்தால் அந்த விடியா மூஞ்சிக்குத் தருவேன் என்றல்ல நான் சொன்ன தற்கு அர்த்தம்? மூல்தானி இருக்கிறானே, நமக்குக் கேட் கும்போது கடன் தருகிறானே, அவனுக்குக் கொடுத்திருப் பேன். நமது வீட்டு நாய்க்குட்டி ஒன்று கலெக்டர் பங்களாவி லும், மற்றொன்று இன்கம்டாக்ஸ் ஆபீசர் வீட்டிலும் உலாவி னால் எவ்வளவு லாபம் தெரியுமோ நமக்கு? 'ஏது சார், நாய்க்குட்டி?' என்று யாராவது கேட்கிற போதெல்லாம், டிப்டி கலெக்டரும், ஆபீசரும், ''இதுவா! தனபாலச் செட் டியார் தந்தார்' என்று கூறுவார்களே! எத்தனை முறை என் பெயரை உச்சரிப்பார்கள். என்னைப் பற்றிப் பெரிய ஆபீசர்கள் பேசினால், ஊரிலே எனக்கு எவ்வளவு மதிப்பு இருக்கும். தனபாலச் செட்டியாருக்கும் கலெக்டருக்கும் பிராண சிநேகிதம். கலெக்டர் வீட்டிலே இருக்கிற நாய்க் குட்டிகூட, செட்டியார் கொடுத்ததுதான் என்று பெரிய மனிதர்களெல்லாம் பேசுவார்கள். இந்த நாய்க்குட்டிகள், நமது 'ஏஜண்டுகள்' போல அல்லவா அங்கே இருக்கும்! இது தெரியாமல் சுகானந்தத்துக்குக் கொடு என்று பேசு கிறாயே! பைத்யமே! அவன் இந்த நாய்க்குட்டி தரவில்லையே என்று கொஞ்சம் கோபித்துக் கொள்வான். அதனாலே நஷ்

டம் என்ன? கலெக்டர் வீட்டிலும், ஆபீசர் வீட்டிலும் இந்தக் குட்டிகள் போய்ச் சேருவதால் வருகிற லாபம் எவ்வளவு? அதைக் கவனிக்க வேண்டும். நீ வியாபாரியின் பெண் தான். இருந்து என்ன பயன்? சூக்ஷும புத்தி இல்லையே உனக்கு?'' என்று செட்டியார் உபதேசமே செய்துவிட்டார்.

தேவா தெளிவு பெற்றாள், தகப்பனார் காட்டிய வழி சரி என்றல்ல; அவர் ஒரு பணம் திரட்டும் கருவி என்று தெளிவு பெற்றாள். ஏழையும் செல்வவானும் இணை பிரியா நண்பர்களாக இருப்பினும், இளமை முதலே பிராண சிநேகிதர்களாக இருந்தாலும், இருவர் உலகமும் வேறு வேறு; எண்ணம், ஏற்பாடு, திட்டம், தத்துவம் சகலமும் வேறு வேறாகத்தான் இருக்கும் என்பதை அறிந்தாள்.

அன்றிரவு அவளையும் அறியாமல் கண்ணீரும் சிந்தியது. அந்த அளவு உருக்கம், காரணமில்லாமல் பிறக்கவில்லை; சிங்காரத்திடம் தேவாவுக்குக் காதல், அதற்கு முன்பே பிறந்து தவழ்ந்து கொண்டிருந்தது! கலெக்டர் வீட்டிலே வாழ வேண்டிய நாய்க்குட்டியை, கடன் சுமை ஏறிக் கிடக்கும் வீட்டிலே கொண்டுவரச் சிங்காரம் முயற்சித்தான். மாளிகையிலே வாழ வழி வகுத்துக் கொண்டிருந்தார் தனபால் தன் மகளுக்கு. அவள் அந்த மண் சுவர் வீட்டிலே தன் 'மனோஹரன்' இருக்கக் கண்டாள்! நாயைக் கொண்டே, 'இலாபம்' பெறும் எண்ணங்கொண்டவரின் மகளுக்கு, 'காதல்' பூத்துப் பயனென்ன? கருகும் அல்லது அவர் கசக்கி வீசி எறிவார், கோபத்தோடு!

''அடுத்த தடவை'' வந்தது; சிங்காரத்தின் சார்பிலே தேவா மனு போட்டாள். இம்முறை தாயார் அதை நிராகரித்தாள், கடுமையான பேச்சுடன்.

''ரொம்ப இலட்சணம்தான்! அதுக பாவம், ஏழைக. அதுக வீட்டிலே நாயைக் கொடுத்தா, என்ன ஆகும்? பாலும் பிஸ்கட்டும் வாங்கப் பணம் ஏது? நாய் நாலு நாளிலே சாகும்'' என்றாள் தேவாவின் தாயார். உண்மைதான். ஆனால் உள்ளத்தைக் குமுறச் செய்யும் உண்மை. பாழாய்ப்

போன ஜூலியா கர்ப்பமாகாமலிருக்கக் கூடாதா? குட்டியும் பிறந்து, அவருக்குக் கொடுக்க முடியாது என்றும் சொன்னால், அவர் எவ்வளவு வேதனைப்படுவார் —பாவம், என்று குழம்பிக் கொண்டிருந்தாள் தேவா. அவர், அதாவது சிங்காரம், அடுத்த வீட்டு அன்னத்துக்கும் தனக்கும் மார்கழி போனதும், கல்யாணம் என்ற ஆசையிலே இருந்தான். நாய்க்குட்டி ஆசையும் விடவில்லை. மறுபடியும் செட்டியார் வீட்டுக்கு நடந்தபடிதான் இருந்தான். ஊரிலே எந்த ஆபீசரும் இணங்கவில்லை, நாய்க்குட்டியை ஏற்றுக் கொள்ள! எனவே, 'பழைய சிநேகிதம் மறக்கலாமா? கவர்னரே கேட்டால்கூடத் தரமாட்டேன், உனக்குத் தருவதாகக் கூறிவிட்ட பிறகு...பேச்சு என்றால் பேச்சுதானே''' என்ற மொழிகளைச் சேர்த்து, தனபாலர் நாய்க்குட்டியைத் தந்தார், சுகானந்தத்திடம். சிங்காரம், அன்னத்துக்குத் தர எண்ணியிருந்த முத்தங்களிலே அரைப் பாகத்துக்கு மேலாகவே தந்துவிட்டான், ஜார்ஜுக்கு—அதாவது, நாய்க்குட்டிக்கு!

நாய்க் குட்டியைப் பராமரிக்க வேண்டிய முறைகளை விளக்கமாகக் கூறினாள் தேவா. பால் இந்த அளவு, பிஸ்கட் இத்தனை துண்டு தரவேண்டும் என்று கூறினாள். இராத்திரி வேளையிலே, ''மெத்து, மெத்து ''என்று துணி போட்டுப் படுக்க வைக்கவேண்டும் தெரிகிறதா?' என்று கூறினாள். தனபாலர் கூறினதிலே தவறு என்ன! பைத்யக்காரப் பெண்தானே தேவா! சிங்காரத்தின் நிலை என்ன, நாய் வளர்ப்புக்காகத் தேவா போதிக்கும் முறை அவனால் நடத்தக் கூடியதா? எண்ணிப் பார்த்தாளா? அவள்தான் அவனை ''அவர்'' என்று மனதிலே கொண்டிருந்தாளே! ஆகவே அவரால் பாலும் பிஸ்கட்டும், பட்டு மெத்தையும் சம்பாதிக்க முடியும் என்று எண்ணிவிட்டாள். பித்தத்தில் ஒரு வகை தானே காதல்! அந்தப் பித்தமும் ஒரே விநாடியிலே, ஒரே வாக்கியத்திலே போய்விட்டது தேவாவுக்கு. சிங்காரத்துக்குத் தேவாவின் மனநிலை தெரியாது. நாய்க் குட்டியை எப்படி வளர்ப்பது என்று தேவா கூறி முடித்ததும், சிங்

காரம், ''அதையெல்லாம் அன்னம் கவனித்துக்கொள்ளும்.'' என்று கூறினான் புன்னகையுடன். அன்னம் என்ற உச்சரிப்பே புன்னகைக்குக் காரணம் என்பது தேவாவுக்கு விளங்கிற்று. ''அன்னம் யார்?'' என்று தேவா கேட்டாள். ''ஏன், உனக்குத் தெரியாதா? அவளைத்தான் தை பிறந்ததும் அவன் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான்'' என்று தேவாவின் தாயார் கூறினாள். அவன் புன்னகை பூத்த முகத்தோடு நின்றான். பித்தம் தெளியும் நிலை பிறந்தது தேவாவுக்கு.

''ஜார்ஜ்'', சிங்காரத்தின் சினிமா, காபி, சீட்டாட்டம் முதலிய பல வழக்கங்களைப் போக்கிவிட்டான். கையில் கிடைக்கும் 'காசு' —பிஸ்கட்டாக, பாலாக, சோப்பாக மாறும்போது, சீட்டாட்டமும் சினிமாவும் ஏது? அன்னத்துக்கு அன்புடன் என்றேனும் ஒருநாள் வாங்கித்தரும் கனகாம்பரம்கூட, பிஸ்கட்டாகிவிட்டது! 'ஜார்ஜ்' நன்றாக வளர வேண்டும் என்பதிலே அவன் அவ்வளவு அக்கறை காட்டினான், செலவைப் பொருட்படுத்தாமல், ஆனால் ஜார்ஜ், இந்த ஏழை வீட்டுக்கு ஏற்றதா,திருப்தியோடு வளர? மெலிந்தான். உடலிலே சொறி கண்டது, ஓயாது அழுவான். 'ஜார்ஜ்' வரவர அவலட்சணமாகவும் ஆகி வந்தான். சிங்காரம், இந்த நாய்க்குட்டிக்காகப் பணத்தைப் பாழாக்குவது, அன்னத்துக்குப் பிடிக்கவில்லை. ''அதன் வயிறு என்ன வயிறோ! ஒரு நாளைக்கு நாலணா பிஸ்கட்டைத் தின்றுவிடுகிறதே! இவ்வளவு தின்றும், எலும்பும் தோலுந்தான் மிச்சமாக இருக்கிறது'' என்று ஏசுவாள் அன்னம். இந்த வீண் செலவை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று முயற்சி செய்தாள்.

''சோறு போடலாமே ஜார்ஜுக்கு'' என்று யோசனை கூறினாள், செலவைக் குறைக்க. ''சேச்சே! ஒரு ஆறுமாத காலம் பாலும் பிஸ்கட்டுந்தான் தரவேண்டும். தேவா அதை வற்புறுத்தி வற்புறுத்திக் கூறினாளே, தெரியுமா?'' என்றான் சிங்காரம். ''பொழுது சாயும்போது அந்த நாய்க்குட்டியைக் குளிப்பாட்டுவானேன்?'' என்று கேட்பாள் அன்னம்.

''இது தேவாவின் யோசனை'' என்பான் சிங்காரம். கை தவறி நாய்க் குட்டியைக் கீழே போட்டுவிட்டாலோ அன்னத்தைக் கண்டிப்பான். அந்தக் கண்டனம்கூட அவளுக்கு அவ்வளவு கஷ்டமாக இல்லை. இடையிடையே, 'தேவா, தேவா!' என்று அவன் பேசியதுதான் கஷ்டத்தைத் தந்தது. தேவா மீது அன்னத்துக்கு அசூயையே பிறந்தது. தேவாவையே கொண்டு வந்து வளர்ப்பதுதானே என்று கேலியாகக் கூறி விட்டாள், ஒருநாள். அந்தச் சமயம் சிங்காரம் பார்த்த பார்வை அன்னத்தின் கண்களிலே நீரைப் பெருக்கிவிட்டது. தேவா மீது பிறந்த கோபம், அன்னத்தின் வீட்டை விட்டுக் கிளம்பி, தனபாலச் செட்டியாரின் அழகான மாளிகைக்குள் நுழையுமா? 'ஜார்ஜ்' மீதுதான் பாய்ந்தது. அதுவும், சிங்காரம் வீட்டில் இல்லாத சமயங்களில்!

அன்று மழை! தெருவெல்லாம் சேறாகிவிட்டது. சிங்காரம் வசித்து வந்த வீதியிலே, 'தார் ரோடு' இருக்குமா? அவன் என்ன தனபாலனா? அந்தச் சேற்றிலே உருண்டு புரண்டு, 'ஜார்ஜ்' தன்னுடைய வெள்ளை நிறத்தைக் கெடுத்துக் கொண்டு, வீதி சுற்றி, வீட்டு இலைக்குக் குலைத்துக் கிடக்கும் 'மட்டரக' நாயாக நின்றான். அன்னம் தேவாவை எண்ணி, ஒரு வகையான திருப்தி பெற்றாள். அந்தத் தேவாவும், வாழ்க்கையிலே சேறும் அழுக்கும் நிறைந்த இடத்திலே போய்ச் சேர்ந்தால், இந்த ஜார்ஜ் போலத்தான் உரு மாறிப் போவாள். இப்போது உள்ள மினுக்கும் தளுக்கும் இராது என்று எண்ணினாள். கொஞ்சம் சந்தோஷம் அடைந்தாள். அர்த்தமற்ற ஆனந்தம்தான்! ஆனால் அன்னம் அதற்கு மேல் என்ன எதிர்பார்க்க முடியும்? ஏழையின் கண்ணீருக்குத்தான் ஆழ்ந்த பொருள் இருக்க முடியும்; களிப்பு பெரும்பாலும் காரணமற்றதாகத்தானே இருக்கும்! ஜார்ஜின் நிலையைக் கண்டான் சிங்காரம். அதை இந்தக் கதிக்கு ஆளாக விட்டுவிட்டு, இளித்துக் கொண்டிருக்கும் அன்னத்தையும் கண்டான். கடுங்கோபம் கொண்டான். சீறினான்: கண்டபடி ஏசினான்; அன்னத்தை அடிக்கவும் கை ஓங்கினான். தெருக்கோடியிலே ஒரு கூட்டம் வரக்கண்டு அடங்கினான்.

தனபாலச் செட்டியாரின் தூரபந்து, குழந்தைவேலு முதலியார். 'செட்டியாருக்கு முதலியார் பந்துவா?' என்று சந்தேகம் பிறக்கும். விஷயம் இது. 'செட்டியார்' என்று சில பகுதிகளில் வாழும் முதலியார்களுக்குப் பட்டம் உண்டு. தனபாலர் அந்த வகை. குழந்தைவேலரின் ஒரே குமாரர் அருமைநாதன்; சமூக சேவா சங்கத் தலைவர். அந்தச் சங்கத்தை ஆரம்பித்தவர், நடத்துபவர், தலைவர் யாவுமே அருமைநாதனேதான்! சர்க்கார் மானியமும், கனதனவான்களின் நன்கொடையும், அந்தச் சங்கத்துக்கு ஏராளம். அருமைநாதன், ஏழை எளியவரின் நல்வாழ்க்கைக்காகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கத் துணிந்துவிட்டவர் என்று அவரைப் புகழாத பத்திரிகையே கிடையாது. சமூக சேவா சங்கத் தலைவரின் அபாரமான பணியினால் ஏழையின் எந்தப் பிணியாவது போயிற்றா என்று மட்டும் யாரும் கணக்குப் பார்த்ததில்லை: பார்க்கவும் கூடாதல்லவா? அருமைநாதர் என்ன, அன்னக்காவடியா? சீமான் மகன். அவர் 'அடிக்கடி' ஏழைகளின் விடுதிகளைப் பார்வையிடுவார்; பிய்ந்து போன கூரைகள், உடைந்த மண்பாண்டங்கள், சரியும் சுவர்கள், குப்பை கூளக் குவியல்கள், ஈ மொய்க்கும் இடங்கள், புழு நெளியும் சாக்கடைக் கால்கள் ஆகியவற்றைப் பார்வையிடுவார். பிறகு இந்த அசுத்தங்களினாலேதான் பிளேக், இன்புளுயென்சா, காலரா முதலான நோய்கள் பிறக்கின்றன. அவை ஏழைகளைச் சாகடித்துவிட்டுப் பிறகு நகரெங்கும் பரவி, மக்களை அழிக்கின்றன என்பது பற்றிய விளக்கத்தை உரைப்பார். இந்த அசுத்தம் நிரம்பிய இடத்திலேயே இருந்து தீர வேண்டிய நிலை ஏன் ஏழைக்கு வந்தது என்பது பற்றி அவர் பேசினதில்லை; பேசும்படி கேட்டவர்களுமில்லை. அருமைநாதரின் கண்கள் இந்த ஏழை விடுதியிலே உள்ள அசுத்தத்தைக் காண்பதோடு ஓய்வு எடுத்துக்கொள்ளவில்லை. அழுக்கு ஆடையை அணிந்து கொண்டிருந்த அழகிய அபலைகளையும் கூர்ந்து கவனித்து வந்தார். கண்ணடியிலே விழும் கனியைச் சுவைப்பார். மற்றதுகளைப் பற்றி, ''சீச்சி! இந்தப் பழம் புளிக்கும்'' என்பார். அவர், ''சமுக சேவா சங்க'' வேலை செய்ய தேவா

சகிதம் வந்தார் அன்று; அழகான மங்கையும் ஆடம்பர ஆடவனும், ஏழைகளின் விடுதிப் பக்கம் வந்தால், கும்பல் சேரத் தானே செய்யும்! 'ஜார்ஜை'யும் மறந்து, சிங்காரம் அந்தக் கும்பலைக் கவனிக்கத் தொடங்கினான்.

தேவாவின் கண்கள் சிங்காரத்தின் மீது கோபத்தைக் கக்கிற்று. ''இதுதானா, நீ நாய் வளர்க்கும் இலட்சணம்?'' என்று கேட்டாள். அருமைநாதன் விஷய விளக்கம் கேட்டான். கோபத்தோடு பதிலளித்தாள் தேவா. 'அப்பா கொடுக்க இஷ்டப்படவே இல்லை. அம்மாவும் இந்த அன்னாடிகளுக்குக் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். நான்தான் பிடிவாதமாகப் பேசி, நாய்க்குட்டியை வாங்கிக் கொடுத்தேன். அதை இந்த இலட்சணமாக்கிவிட்டார்கள்'' என்றாள்.

தேவா கோபத்தைக் கக்கிக் கொண்டிருந்தபோது சிங்காரம் பயத்தோடு நாய்க்குட்டியைத் துடைத்து விட்டுக் கொண்டிருந்தான்.

''அன்னாடிகள்'' என்ற சொல், சிங்காரத்தின் இருதயத்திலே வேல் பாய்வதுபோல் பாய்ந்தது. இருதயத்திலே ஆயிரம் வேல் பாய்வதுபோல் ஆகிவிட்டது, அருமைநாதனின் பேச்சு!

அவன் சொன்னான்: ''என்ன தேவா! இந்த ஏழைகளிடம் தரலாமா, இந்த அருமையான நாய்க்குட்டியை? இதுகளுக்கே சுத்தமாக வாழத் தெரியாமல், குப்பையில் புரண்டு கொண்டிருக்கின்றன. இதுகளைச் சீர்திருத்தி, கழுவிக் குளிப்பாட்டும் வேலையிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம். நீ இவன் நாய்க்குட்டியைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை என்று குறைபடுவது தவறு. ஜார்ஜின் உடல் அழுக்கு இருக்கும்; இவன் தலையைப் பார்! வறண்டு கிடக்கிறது. சட்டையிலே பார்! எவ்வளவு அழுக்கு? காலிலே பார் —சேறு; கண்ணிலே பார் தூசு; இவன் இருக்கும் இலட்சணத்தைக் கவனிக்காமல், நாய்க்குட்டியைக் கவனிக்கிறாயே, நீ ஒரு பைத்யம்!'' என்றான்.

''ஆமாம்'' என்றாள் தேவா. ஆனால் அருமைநாதன் கூறியதை எண்ணியல்ல; 'இப்படிப்பட்டவளைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்றுகூட ஒரு சமயத்திலே நினைத்தோமே' என்ற எண்ணத்தாலேதான். சிங்காரத்தால் அழத்தான் முடிந்தது. அன்னம் முணுமுணுத்தாள். கையை நொடித்தாள்; வேறு என்ன செய்வாள்? சேவா சங்கத் தலைவர் சேல்விழியாளுடன் போய்விட்டார் போகுமுன்பு, அன்னத்தின் அழகை ஒருமுறை பார்த்துவிட்டார்.

சிங்காரம், தன் உலகை உணர்ந்து கொண்டான். செல்வவான்களின் வாழ்க்கை அம்சங்களிலே சிலவற்றை யாவது தானும் அனுபவிக்க வேண்டும் என்ற 'வீணான மோகம்' ஏற்பட்டதற்காக வருந்தினான், 'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி'யானதால் வீணான சஞ்சலமே ஏற்பட்டதை உணர்ந்தான்.

நலைந்து நாட்களுக்குப் பிறகு ஓர் நாள் அருமைநாதன் மோட்டாரை ஓட்டிக்கொண்டு, அந்த வீதிப் பக்கம் வந்தான். சமூக சேவைக்காக அல்ல; அன்னத்தைத் தரிசிக்கலாம் என்று.'ஜார்ஜ்' கவனிப்பாரற்றுக் கிடந்த சமயம் அது. புழுதியிலே படுத்துக் கிடந்தது, மோட்டாரின் சக்கரத்தில் சிக்கிற்று; நொறுங்கிச் செத்தது. அன்னத்தைப் பிறகு பார்த்துக் கொள்வோம் என்று, அருமைநாதன், மோட்டாரை ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

''அட பாவி'' என்று அலறினாள் அன்னம். ஜார்ஜை வாரி எடுத்து அணைத்துக் கொண்டாள். கூக்குரல் கேட்டு உள்ளே இருந்து ஓடிவந்தான் சிங்காரம். மோட்டாரைக் காட்டினாள் அன்னம். பேசாமல் ஜார்ஜை அன்னத்திடம் இருந்து வாங்கிக் கொண்டான் சிங்காரம். இரண்டு சொட்டுக் கண்ணீர்விட்டான்.

''உடலிலே சேறு பூசிக் கொண்டதற்கு உருகிப் போனான் படுபாவி! இப்போது சாகடித்துவிட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காமல் போகிறான்'' என்று கூறி அழுதாள் அன்னம். புறக்கடையிலே ஒரு பள்ளம் தோண்டிப் புதைத்

தான், இறந்துபோன ஜார்ஜை! ஜார்ஜை மட்டுமல்ல, அன்னத்தின் மீது கொண்ட கோபத்தை, ஆடம்பரப் பிரியத்தை, பழைய நாளைய எண்ணங்களை...

நாலைந்து வருஷங்களுக்குப் பிறகு ஓர் நாள், 'வெள்ளை' மீது கருப்பனை உட்கார வைத்து, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் அன்னம். ''கருப்பண்ணசாமி'' தயவால் பிறந்தான் என்று எண்ணி, தன் குழந்தைக்குக் கருப்பண்ணன் என்று பெயர் வைத்தான் சிங்காரம். வெள்ளை அவன் வீட்டு நாய்;அது பிஸ்கட்டும் தின்றதில்லை; பாலும் குடித்ததில்லை. எங்கோ, எதையோ, எப்போதோ, தின்றுவிடும். சிங்காரத்தின் வீட்டுக்குத்தான் காவல் புரியும். குழந்தைக்குக் குதிரையாக இருக்கும். கோலால் அடிபடும்! ஆனால் வீட்டையும் மறக்காது; குடும்பத்தில் யாரைக் கண்டாலும் வால் ஆட்டிக் களிக்கவும் தவறாது.என்றைக்கேனும் ஓர்நாள், எச்சில் இலையிலே இரண்டு பிடி சோறு வைத்து, அன்னம் கூப்பிடுவாள், 'வெள்ளே! வெள்ளே' என்று. வெள்ளைக்கு அதுவே விருந்து. வெள்ளை பிறந்த இடம் தெருக்கோடி பாழ்மண்டபம். தாயும் தந்தையும் தெருப் பொறுக்கிகள்; தனபாலச் செட்டியாரின் வளர்ப்புகள் அல்ல. அந்தப் 'பரம்பரையில்' பிறந்த 'வெள்ளை'க்கு விருந்துதானே அது. மனிதர்களிலே மட்டுமல்ல, சகல ஜீவராசிகளிலும், இரண்டு வகையான ''பரம்பரை'' இருப்பதைச் சிங்காரம் தெரிந்து கொண்டான்; தெளிவு பெற்றான்.

# 2
# சுடுமூஞ்சி

''சனியன், என்ன! இன்னும் தொலைவதாகக் காணோம். மணி ஆறாகப் போகிறதே?''—கணக்கப்பிள்ளை.

''சீக்கிரம். சீக்கிரமாகக் கட்டி முடியம்மா...மாலையை! மணி ஆறாகப் போகிறது! அந்த உருத்திராட்சப் பூனை வருகிற நேரமாகுது''—மாலை விற்பவன்.

''ஒருநாள்கூடத் தவறமாட்டார். பெரிய பக்திமானல்லவோ அவர்! மணி இன்னும் ஆறு ஆகவில்லையே...வந்து விடுவார்''—குருக்கள்.

''நாளைக்குப் பார்த்துக் கொள்வோம், தாளம் சரியாக வருகிறதான்னு! மணி ஆறு ஆகப் போகுது. அந்தக் கிழக் குரங்கு வருகிற நேரமாகுது''—வேதம்.

''மணி ஆறா? சரிதான்! இப்பத்தான் பைத்யம், கோயிலுக்குக் கிளம்பி இருக்கும்!''—இராமி.

சனியன், உருத்திராட்சப் பூனை, பக்திமான், கிழக் குரங்கு, பைத்யம் — இந்தப் ''பஞ்சாட்சர'' அர்ச்சனை, ஒரே நேரத்தில், ஒரே ஆசாமிக்கு, ஐந்து வேறு வேறு ஆசாமிகள் மூலம் நடந்தது. இன்னமும் எங்கெங்கு அவரைப் பற்றி என்னென்ன விதமான அர்ச்சனை நடந்தது என்று விவரித்தால் சஹஸ்ரநாமத்துக்குப் போகும்.

அவர் பெயர் ஆறுமுக முதலியார்!

இந்த அர்ச்சனையைப் பெற்றுக்கொண்டு ஆறுமுக முதலியார் சும்மா இருந்தாரா? இருப்பாரா? அவர் கையில் என்னமோ கணக்குப் புத்தகந்தான் இருந்தது. மனம்?

''சனியன்! இன்னும் போய்த் தொலையவில்லையே' என்று மௌன பூஜை செய்து கொண்டிருந்த கணக்கெழுது பவனை, ஆறுமுக முதலியார், ''ஏண்டா, தின்னுகூலி'' என்று திட்டினார். 'அந்தச் சோம்பேறி இன்னும் மாலையைக் கட்டினானோ, இல்லையோ' என்று.

அதே நேரத்தில் எந்த மாலை விற்பவன் தன் தாயாரிடம் முதலியாரை உருத்திராட்சப் பூனை என்று அர்ச்சித்துக் கொண்டிருந்தானோ, அந்த மாலை விற்பவனைப் பற்றிச் சொன்னார்; ஒரு விநாடி ஓய்வெடுத்துக் கொண்டார். ''போய் ஆகணும்; போகலைன்னா விடப் போறானாஅந்தப் பணம் பிடுங்கி'' என்று முணுமுணுத்தார். கோயிலிலே அதே நேரத்தில்தான் குருக்கள் வேறோர் பக்தரிடம் முதலியாரைப் பற்றி 'பெரிய பக்திமான்' என்று அர்ச்சித்தது. அழகான பதத்தை ஆனந்தமாகப் பாடிக்காட்டிய 'வித்வானை' விட்டுப் பிரிய மனமில்லாத வேதம், 'முதலியார் வருகிற வேளையாகிறது' என்று கூறிய நேரமும் அதுதான். அவள் அந்த அர்ச்சனை, அந்தக் 'கிழக்குரங்கு' என்பது. அவளுக்கு முதலியார் அர்ச்சனை செய்யாமல் விட்டாரா? நாலைந்து பத்து ரூபாய் நோட்டுக்களை மணிபர்சில் எடுத்துத் திணித்துக் கொண்டே 'மானசீக பூஜை' செய்தார், ''இன்று தரா விட்டா....அந்த அல்லி தர்பார் பெரிசா இருக்கும்'' என்று. ''பைத்யம்! கோயிலுக்குப் போகிற நேரமாகுது'' என்று, முதலியாரின் இரண்டாந்தாரம் இராமி சொல்லிக் கொண்டிருந்தது போலவே, முதலியாரும் மனத்துக்குள் தன் மனைவியைப் பற்றி, அந்தச் 'சுடுமூஞ்சி' கஷாயம் போட்டுவைக்குதோ, இல்லைன்னா சினிமாவுக்குக் கிளம்பிவிட்டதோ?'' என்று சொல்லிக் கொண்டார். இவ்வளவு அர்ச்சனைகளும், அன்று மாலை ஆறு மணிக்கு நடந்தேறிய பிறகு, 'தின்னு கூலி'யைக் கடையைப் பூட்டிக் கொண்டு போகச் சொல்லி விட்டு, 'சோம்பேறி' கட்டி வைத்திருந்த மாலையை வாங்கிக் கொண்டு, 'பணம் பிடுங்கி' நின்று கொண்டிருந்த கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனம் முடித்துக் கொண்டு, 'அல்லி'க்குச் செலுத்த வேண்டிய காணிக்கையைக் கொடுத்து

விட்டு, அவள் அடிவயிறு வலி என்று அலறியது கேட்டு, அதற்கு வைத்யமுறை கூறிவிட்டு, வீட்டுக்குள் புகுந்து, 'சுடுமூஞ்சி' தந்த கஷாயத்தைக் குடித்துவிட்டு, 'அப்பனே! முருகா' என்று கொட்டாவி கலந்த குரலால் பஜித்துக் கொண்டே படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார், அரிசி மண்டி ஆறுமுக முதலியார்.

ஒவ்வொரு நாளும் அவர் கடையில், 'அரிசி' வாங்கிக் கொண்டு போகிறவர்கள் தரும் அர்ச்சனையையும், அவர்களுக்கு இவர் தரும் அர்ச்சனையையும் தொகுத்துக் கூறினால் அகராதி ஆகிவிடும்.

''இது எந்தப் பாவிக் கடை அரிசி? கல்லு மாதிரி இருக்கே! வேகவே மாட்டேனெங்குதே!' என்பது அடுப்பறை அர்ச்சனை.

''அந்த மஞ்சா கடுதாசிக்குக் கடன் கொடுத்தா பணம் எப்ப வரும்?'' —இது, பணத்திலே குறியாக முதலியார் வாடிக்கைக்காரனுக்குத் தரும் அர்ச்சனை. இவ்விதம் விதவிதமான அர்ச்சனைகளைப் பெற்றுக் கொண்டும், வழங்கிக் கொண்டும், காலையிலே எட்டு மணிக்குக் கடைக்கு வருவதும், மாலை ஆறு மணிக்குக் கிளம்பி, பூமாலை வாங்கிக் கொண்டு புவனேஸ்வரி கோயிலுக்குப் போய், அங்கு வைத்தீஸ்வர ஐயரிடம் விபூதிப் பிரசாதம் வாங்கிக் கொண்டு, தாசி வேதம் வீட்டுக்குப் போய் அங்கு எட்டு, ஒன்பது மணி வரையில் கொஞ்சம் நிம்மதியாக இருந்துவிட்டுப் போவார், இரண்டாந்தாரம் இராமியின் கோபத்தைப் பெற்றுக் கொள்ள.

இராமி, தாய் வீட்டிலே, 'கோபக்காரி' என்று பெயரெடுத்ததே இல்லை. ஒரு சமயம், இராமியின் தகப்பனார் கோபால முதலியார், சொல்லத் தகாத வார்த்தையெல்லாம் சொல்லித் திட்டினார். தாயார் '' 'பவிஷு' கெட்டவளே! குலத்தைக் கெடுத்தவளே!'' என்றெல்லாம் ஏசினாள். இராமி மரம்போல நிற்பாள் அல்லது மளமளவென்று கண்ணீர் வடிப்பாள். எதிர்த்து ஒரு பேச்சு பேசினதில்லை. பேசு

வது நியாயமல்ல என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்வாள். அவ்வளவுக்கும் காரணம், அந்த எதிர் வீட்டுப் பிள்ளையாண்டான்தான். அவனிடம் இராமி உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டாள். பெற்றோர்களுக்குக் கொஞ்சம் வாடை அடித்தது; பெண்ணைத் திட்டி அடக்கினார்கள். அந்தச் சமயத்திலே திட்டும்போதெல்லாம் இராமி கோபித்துக் கொண்டதே இல்லை. புருஷன் வீட்டுக்கு வந்த பிறகுதான், அவளுக்கு அந்தக் 'கோபம்' ஏற்பட்டது.

தாய் வீட்டிலே எவ்வளவோ திட்டுகள் கேட்டாலும் இராமிக்கு ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்கையால் ஒரு சந்தோஷம் எப்போதும் அவள் உள்ளத்திலே இருந்து வந்தது. ''உன் வீட்டிலே என்ன தடை விதித்தாலும் நீ பயப்படாதே இராமி! நான் எப்படியும் உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன். எங்க பட்டணத்து மாமன் வரட்டும். அவரைக் கொண்டு உங்க அப்பாவுக்குச் சொல்லச் சொல்லி, கல்யாணத்துக்கு ஒப்புக்கொள்ள வைக்கிறேன். இல்லைன்னா என் பேரு ஏகாம்பரமா பாரு!'' என்று, அவன் கடிதம் எழுதிக் கொடுத்திருந்தான். அதனால் இராமிக்கு நம்பிக்கை, சந்தோஷம்! ஏகாம்பரத்தை எப்படியும் பெறமுடியும் என்று எண்ணிக் கொண்டாள்.

இப்போதும் அவனுக்குப் பெயர் ஏகாம்பரமாகத்தான் இருந்தது. இராமியோ, அரிசி மண்டி ஆறுமுக முதலியாருக்கு இரண்டாந் தாரமாகிவிட்டாள். அன்று மண அறையிலே துக்கம் மட்டுந்தான் இருந்தது. புருஷன் வீடு புகுந்ததும், கோபமும் அவள் மனத்திலே புகுந்தது. ஏன்? சாந்தி முகூர்த்தத்தன்று கூறினார், ஆறுமுக முதலியார் ஒரு ரகசியத்தை, தன் சாமர்த்தியத்தை விளக்க.

''இராமி! இதோ, இப்படிப் பாரு! அடாடா, இவ்வளவு வெட்கமா? நான் என்ன, வாலிபனாடியம்மா? உன்னைப் போல, 'பிகுவு தளுக்கு' செய்ய!'' என்று ஆரம்பித்தார், சரசப் பேச்சை.

இராமி ஒன்றும் பேசவில்லை. எந்த இராமிதான் பேச முடியும்?

"முதலியாரே! இந்த அரிசி நல்லா இல்லையே! வேறே கொடுங்களேன்!" என்று வாடிக்கைக்காரர் மல்லாடி நிற்பார். ஆறுமுக முதலியார் 'சரி' என்று கூறுவாரா, எவ்வளவோ சமாதானம் கூறுவார். அரிசியைத் துடைத்துக் காட்டுவார். வாயிலே கொஞ்சம் போட்டுக் காட்டுவார்; வாங்கின விலைப் பட்டியலைக் காட்டுவார்; ஆணை இடுவார்; எதை எதையோ செய்து, வேண்டாமென்றவன் தலையிலே அதே அரிசியைக் கட்டி அனுப்புவார். அனுபவசாலி! வாதாடும் ஆண்களிடமே வெற்றி பெற்ற அந்த அனுபவசாலி விழியால் பேசும் அந்தப் பெண்ணிடமா வெற்றி பெறாமல் போவார்! 'ஹும்! ஐயையோ!' என்ற வார்த்தைகளை எல்லாம் அவர், 'இதோ, இலை போட்டாகி விட்டது. நெய்க்கிண்ணம் எடுத்து வருகிறேன்,' என்று விருந்திடுபவர், விருந்தாளிக்கு, விருந்து நேரத்தில் கூறும் வார்த்தைகள் என்று கொண்டார். இராமிக்கு முன்பு கண்ணம்மா இதே போலத்தான்! இருபது வயது இருக்கும்போதே தனக்குச் சினேகமான வேதம்கூடத்தான் முதலிலே, எவ்வளவோ, 'பிகுவு' செய்தாள். ஆறுமுக முதலியார் கடைசியில் வெற்றி பெற்றார். தொட்டுத் தாலி கட்டினவனாயிற்றே! விட்டு விடுவாரா? ஆறுமுக முதலியார் செய்த தவறு அதுவல்ல. தன் சாமர்த்தியத்தைக் காட்டுவதற்காக ஒரு இரகசியத்தைக் கூறினார் இராமியிடம்!

"ஏகாம்பரம் தட்டிக் கொண்டு போக இருந்தானே!" என்று துவக்கினார். வேறு பக்கம் திரும்பிக் கொண்டிருந்த இராமி, அவர் பக்கம் திரும்பினாள், தன்னையும் அறியாமல்.

"பட்டணத்து மாமனைவிட்டு, உங்க அப்பனைக்கூட மயக்கிவிட்டான்" என்றார் முதலியார். முகம் சிவந்தது இராமிக்கு.

முதலியார் கொஞ்ச நேரம் அந்தப் பேச்சை விட்டு விட்டு, மெல்லிய குரலால் பாடலானார். உரத்த குரலில், காலை வேளையிலே விநாயகர் அகவல் படிக்க, இப்போது

அவர் பாடியது, ''மானே! மருக்கொழுந்து!'' என்ற பாட்டு. அரைகுறையாகத்தான் பாடினார். வேதத்தைப் 'பாடு, பாடு' என்று கேட்டு, அவள் அரைமனதுடன் பாடிய பாட்டு தானே அது...

ஏகாம்பரத்தைப் பற்றி மேற்கொண்டு ஏதாவது தகவல் கிடைக்காதா என்று ஏங்கினாள் இராமி. எப்படிக் கேட்க முடியும்? ஏன், தன்னைக் காதலித்தவன், பட்டணத்து மாமனைத் தூது அனுப்பி, தன் தகப்பனாரின் மனதைக்கூட மாற்றிவிட்டு, ஜாதகத்தையும் வாங்கிக் குருக்களிடம் காட்டியவன், திடீரென்று, அந்தப் பெண் எனக்கு வேண்டாம் என்று கூறினான் என்பது, இராமிக்கு அன்றுவரை விளங்கவே இல்லை. அந்த இரகசியத்தை அறிந்தவரோ பாடுகிறார், அதுபற்றிப் பேசாமல். அவருக்கு அது இன்ப இரவு! அவளுக்கு அப்படியா?

பாடி முடித்தார். அவரால் தன் வெற்றிப் பிரதாபத்தைக் கூறாமலிருக்க முடியவில்லை. 'இராமி! ஒரு கதை சொல்லேன்' என்றார். 'தெரியாது' என்று ஜாடை காட்டினாள் இராமி. ''நான் சொல்லட்டுமா ஒரு கதை?'' என்று கேட்டார். அவள் சொல்லச் சொல்லவில்லை; அவரே சொல்ல ஆரம்பித்தார்.

''ஒரே ஒரு ஊரிலே ஒரு பெண். உன்னைப் போலத்தான், நல்ல அழகு. அவ சிரிச்சா...கன்னத்திலே குழி விழும்'' என்று கூறிக் கொண்டே கன்னத்துக் குழியைத் தேடினார், இல்லை! அவள் சந்தோஷத்திலே இருந்தால் தானே? அந்தக் கன்னத்திலே ஏகாம்பரம் தன் உயிரையே வைத்திருந்தான் என்ற நினைப்பிலே அவள் சித்தம் சென்று விட்டது. கதையைத் தொடர்ந்து கூறலானார் மாப்பிள்ளை.

''அந்தப் பெண்ணையேதான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று, ஒரு பையன் தலைகீழாக நின்றான். என்னென்னமோ தந்திரமெல்லாம் செய்தான். அவனுடைய மாமன் ஒருவன். அவன் பட்டணம். அவனைவிட்டுப் பெண்ணுடைய தகப்பனாருக்குப் போதனை செய்யச் சொன்

னான். பெண்ணின் தகப்பனும் ஒப்புக் கொண்டான். ஜாத கத்தை ஜோசியரிடம் கொடுத்தார்கள்.''

அதுவரையில் அவளுக்கும் தெரியும். அதற்கு மேலே என்ன நடந்தது? அதுதானே தெரிய வேண்டும். கனைத்து விட்டு, முதலியார் மேலே கூறலானார்.

''ஜாதகம் பார்த்தாச்சா..திடீரென்று அந்தப் பையன், 'நான் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது'ன்னு சொல்லிவிட்டான். யார் என்ன சொன்னா லும் கேட்கவில்லை.'' என்று கூறிவிட்டு, எழுந்துபோய், மேஜைமேல் வைத்திருந்த பால் செம்பை எடுத்தார், குடிக்க. அதிலே ஒரு வாழைப் பழத் துண்டு கிடப்பதைக் கண்டார். சிரித்தார். சிரித்துக் கொண்டே, அந்தத் துண்டை எடுத்து வாயிலே போட்டு மென்றுகொண்டே, ''அந்தப் பெண் வேண்டாமென்று அந்தப் பயல் சொல்லிவிடவே, அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று நெடுநாளாக ஆசையாக இருந்த ஆறுமுகத்துக்குப் பழம் நழுவிப் பாலிலே விழுந்தது போலாச்சு; பக்கத்துக்கு ஒரு ரதி வந்தாச்சி!'' என்று கதையையும் முடித்தார்; பாலையும் குடித்தார். பரமானந்தத்துடன் பாவையின் பக்கமும் சேர்ந் தார் உரிமையோடு.

இதுவும் தெரிந்த கதைதானே! ஏகாம்பரம் ஏன் கல்யா ணம் செய்து கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டான்? அதுதானே தெரியவேண்டும் என்று துடித்தாள் இராமி. எப்படிக் கேட்பது என்று பயந்தாள் கொஞ்ச நேரம். கேட் டால் என்ன என்று தைரியம் பிறந்தது. 'நல்ல கதை' என்று கேலி செய்தாள் மெள்ள.

''நல்லாயில்லையா? சரி, நீ சொல்லு, நல்ல கதை யாக!'' என்று ஆறுமுக முதலியார் கொஞ்சத் தொடங்கி னார். அதுபோன்ற கொஞ்சுதலைக் கண்டு வேதம் அவருக் குத் தந்த அர்ச்சனைதான் 'கிழக்குரங்கு' என்பது. இராமி பேசவேயில்லை. ''இராமி! உண்மையைச் சொல்லட்டுமா? நான்தான் அந்தக் கல்யாணம் நடக்க முடியாதபடி தடுத்

தேன். அவனுக்கு இஷ்டம்தான். ஆனா, நான் கண்வச்சா வேறே ஆசாமியிடம் சிக்குமா எதுவும்?

மண்டித் தெருவிலே போய்க் கேட்டுப் பாரு...'அடே யப்பா! ஆறுமுக முதலி விலை பேசி விட்டாரு. நமக்கு வேண் டாம், அவனிடம் போட்டி'ன்னு இலட்சாதிபதி எல்லாம் ஓடிருவாங்க! எதற்கும் தைரிய இலட்சுமி வேணும். பட்ட ணத்தான் பேச்சைக் கேட்டு உங்க அப்பன் பல்லை இளிச்சி விட்டான். பார்த்தேன். தைரியத்தைக் கைவிட்டேனா? ஆறு முகமா தைரியத்தைக் கைவிடுகிறவன்?

ஒரு யோசனை வந்தது. நேரே ஐயர் வீட்டுக்குப் போனேன். 'சாமி'ன்னு சொல்லி ஒரு கும்பிடு; ஐந்துநோட்டு பத்து ரூபா நோட்டு; 'என்ன முதலியார்',என்று கேட்டார். ''உங்க தயவாலே இராமியை இரண்டாந்தாரமாக நான் அடையணும்'' என்று சொன்னேன்.

''அட, பர்வமே! நேத்துத்தானே பெண்ணு ஜாத கத்தை ஏகாம்பரம் மாமன் கொண்டு வந்து கொடுத்திருக் கான்!'' என்றார்.

''தெரிஞ்சிதான் வந்தேன் சாமீ! நீங்க மனசு வைச்சா எதுவும் ஆகும்'' என்'றேன்.

கொஞ்ச நேரம் யோசித்தார். ''பொருத்தம் இல் லை'ன்னு சொல்லலாமோ?'' என்று என்னையே கேட்டார்.

''சொல்லலாம். ஆனா, வேறே ஜோதிடாளைக் கலந் தாளான்னா?'' என்று நான் கேட்டேன்.

''அதைத்தானே நானும் யோசிச்சிண்டு இருக்கேன்.'' என்று ஐயர் இழுத்தார். உடனே ஒரு யோசனையை வீசி னேன்: ''பெண் ஜாதகத்தைக் கொஞ்சம் மாற்றிவிடுங்க. எவனிடம் கொடுத்தாலும் பொருத்தமில்லைன்னு சொல்ற மாதிரியா...மாத்தல் இருக்கணும். பெண்ணு மூல நட்சத் திரமுன்னு மாத்திவிட்டா போதும். மூல நட்சத்திரத்திலே பெண் கட்டினா...மாமியாரை மூலையிலே உட்கார வைச்

சுடும்னு சாஸ்திரம் இருக்கே, அதுபோதும். பட்டணத்தான் கிட்டே சொல்லிவிடுங்க. பக்குவமா ஜாதகத்தையும் மாத்தி விடுங்க!'' என்றேன்.

ஐயர் தயவாலே உன் நட்சத்திரம் மூலமாக மாறி விட்டது. பட்டணத்தான் விழுந்தடிச்சி ஓடினான். ஏகாம்பரத்தின் காலிலே விழுந்து, ''தம்பி! என் பேச்சைக் கேளு. அந்தப் பெண்ணை மறந்துவிடு. அந்தச் சனியன் மூல நட்சத்திரமாம். உங்க அம்மா மூணே மாசத்திலே சாவாளாம்!'' என்று சொல்ல, ஏகாம்பரத்தின் தாயார், 'என்னைச் சாகடிக்கத்தானா அந்தச் சண்டாளியைக் கட்டிக்கப் போறே'ன்னு கேட்க, வீடு ஒரே அமர்க்களமாயிடுத்து. ஒண்ணும் பேச முடியலை. 'அந்தப் பெண் வேண்டாம்' என்று ஒரேயடியாகச் சொல்லிவிட்டாள். ஏகாம்பரம், வேறே ஜோதிடன் கிட்டகூடக் கேட்டுப் பார்த்தானாம்! எல்லோரும் மூல நட்சத்திரம் ஆகாது என்றே சொன்னார்கள். வேறே என்ன சொல்வார்கள்? புத்தகத்திலே அப்படித்தானே எழுதி இருக்கு? ஆனா, அவனுங்க கண்டாங்களா, பிரம்மா உன்னைப் பூச நட்சத்திரத்திலே பிறக்க வைச்சாரு, உன் புருஷன் அதை மூல நட்சத்திரமா மாத்தினாருன்னு!'' என்று கதையைக் கூறி முடித்தார் முதலியார். அந்த விநாடி, அவள் உள்ளத்திலே குடிபுகுந்த கோபம்,நாளுக்கு நாள் வளர்ந்ததே யொழிய துளியும் குறையவில்லை.

ஆறுமுக முதலியார் வேதத்திடம்போய் விளையாடுகிற நேரமாகப் பார்த்து, வேலைக்காரியின் தயவால் ஏகாம்பரத்தை வரவழைத்து அவனிடம் நடந்த 'சூதை'ச் சொன்ன பிறகுகூட,அவளுடைய கோபம் அடங்கவில்லை. ஏகாம்பரம், ''அயோக்யன்! இப்படியா சூது செய்தான்? என் கண்ணைப் பறித்துக் கொண்டானே!'' என்று ஆத்திரத்தோடு கூவினான். 'நான் ஒரு முட்டாள்; ஏமாந்தேன்' என்று அழுதான். ''அழாதே கண்ணு! அதனதன் தலைவிதிப்படி நடக்குது; நாமென்ன செய்வது?'' என்று இராமி தேறுதல் கூறினாள். தேறுதல் கூறும் கட்டத்தோடு முடிந்துவிடுமா? முந்தானை

யால் அவன் கண்ணீரைத் துடைத்தாள். 'உன்னை இழந்தேனே' என்று கூறியபடி அவளை அவன் அணைத்துக் கொண்டான்.

''போதும் கண்ணே! நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!'' என்று அவள் புலம்பினாள். அவள் கண்ணீரை அவன் துடைத்தான். அதரத்தின் துடிப்பை முத்தமிட்டு அடக்கப் பார்த்தான். முடியுமா? அவர்கள் இன்பக் கேணியில் இடறி விழுந்தார்கள். பிறகு வருத்தமடையவுமில்லை. முதலியார் புவனேஸ்வரி பூஜையில் இருக்கும் சமயமெல்லாம், ஏகாம்பரம் இராமியுடன் சல்லாபித்துக் கொண்டிருப்பான். பூஜைக்குப் பிறகு,'வேதம்' படித்துவிட்டு வீடு திரும்புவார், சாமர்த்தியசாலியான ஆறுமுகம். அவர் வீட்டுக்குள் வந்ததும் இராமி, 'சுடுமூஞ்சி'க்காரியாவாள்.

★

# 3
# ராஜாடி ராஜா

தாங்க முடியாத வெயில். தாகமோ தொண்டையை அடைத்தது. தாகத்தைத் தணிப்பதற்காகத் தண்ணீரை நோக்கி நடந்தான் மாரி. கரையை விட்டு இரண்டடி எடுத்து வைத்ததும், அவன் மடியிலிருந்த நாலணா வெள்ளிப் பணம் அவனுக்கு முன்னோடித் தண்ணீரைத் தொட்டு நின்றது. அன்றைக்கு அவனுக்குக் கிடைத்த கூலி அது.

கோழி கூவுவதற்கு முன்பே, மாரிமுத்துவிற்குக் கணக்கப் பிள்ளையிடமிருந்து ஆள் வந்தான். கணக்கப் பிள்ளை கூப்பிட்டனுப்பியதும், கஞ்சிகூடக் குடிக்காமல் மாரி களத்திற்குப் போனான். வேலை முடிந்ததும் மாரி தலையிலிருந்த துணியைத் தட்டிக் கட்கத்தில் வைத்தான். விபூதிப் பையை எடுத்து, காசுக்குத் துழாவினார்; கிடைக்கவில்லை. காசுகளைக் கையிலே கொட்டி, ஒரு நாலணாவை மாரிக்குக் கொடுத்தார்—இல்லை, மாரியை நோக்கி விட்டெறிந்தார்.

''சாமி'' என்றான் மாரி

''ஏண்டா, போதும் போடா!''

''காசுக்கில்லைங்க சாமி! இன்னொரு நாலணாப் பணம் உங்க பையிலிருந்து கீழே மண்ணில் விழுந்துவிட்டது.''

கணக்கப்பிள்ளை தன் காலடியைப் பார்த்தார். மாரி சொன்னது உண்மை. நாலணாவை எடுத்து விபூதிப் பையில் போட்டபடியே மாரி போவதற்கறிகுறியாகக் கையை அசைத்தார். கையில் இருக்கும் நாலணாவைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்து மாரி குளத்தை நோக்கி நடந்தான். கணக்

கப்பிள்ளைக்கும் மகிழ்ச்சிதான். அதை அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ''மாரி எவ்வளவு யோக்யமானவன்! நாலணாக் கொடுத்ததும் பரமதிருப்தியடைந்ததல்லாமல், கீழே விழுந்த நாலணாவைக் கைப்பற்றவும் நினைக்கவில்லை'' என்று எண்ணிக்கொண்டே கணக்கப்பிள்ளை வீட்டுக்குத் திரும்பினார்.

கீழே விழுந்த பணத்தை மடியில் முடிந்துகொண்டு, மாரி தண்ணீரில் இறங்கினான். பாசியை விலக்கி, இரண்டு கை தண்ணீர் குடித்தான். இளநீர்கூடத் தோற்றுவிடும். 'அப்பாடா' என்று மூன்றாவது கைத் தண்ணீரைக் குடிக்கும் பொழுதுதான், முகத்திலிருந்த வேர்வையின் உப்பு நாற்றமும், வைக்கோல் தூசுகளும் குமட்டலைஉண்டாக்கின. வாயைக் கொப்பளித்துக் கொண்டு, தலைமயிரை உதறி முடிந்து முகத்தைக் கழுவினான். பின்னாலிருந்து, 'லொள், லொள்' என்ற சத்தம் கேட்டது. மாரி திரும்பிப் பார்த்தான். மரத்து நிழலில், அழகான நாய் வளைந்து படுத்திருந்தது. அது மாரியைப் பார்த்துக் குரைக்கவில்லை. ஏதோஅதற்கேற்பட்ட உற்சாகம்! மாரி கரைக்கு வந்ததும், நாய், விளையாட்டில் சூழ்ந்திருப்பதாக அவனுக்குப் பட்டது. கண்களையும் முகத்தையும் துடைத்துக் கொண்டு பார்த்தபொழுது நாயின் வாயில் ஏதோ வெண்மையான சாமான் காணப்பட்டது. 'எலும்புத்துண்டு' என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டு மாரி ஐந்தாறு அடி நடந்தான். ''சே! எலும்புத் துண்டல்ல. எலும்புத் துண்டாயிருந்தால் மின்னுமா?'' என்ற கேள்வி பிறந்ததும் மாரி மறுபடியும் திரும்பினான். இவனைக் கண்டதும் நாய் மற்றொரு மரத்திற்கு ஓடியது. 'மின்னுகிற சாமான் ஒருவேளை வெள்ளி டப்பி...'— அதற்குமேல் மாரி எண்ணவில்லை. போதுமான காரணங்கள் அகப்பட்டதும், ஆராய்ச்சிகள் எதற்கு? நாயை எப்படியும் பிடித்துவிடுவதென ஓடினான்.

நாய் வேலிச் சந்துகளிலெல்லாம் புகுந்து வெளிக் கிளம்பியது. மாரி விடுவதாயில்லை. அதைப் பின் தொடர்ந்தான். சருகு, புல், தரை, சுடுமணல், கல்,முள் ஒன்றையும் பொருட்

படுத்தாமல் ஓடினான். நாயின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க மாரியின் கோபமும் அதிகரித்தது. பக்கத்திலிருந்த கற்களைப் பொறுக்கிக் கொண்டு நாயைத் தொடர்ந்தான். நாய் சலிப்பதாகக் காணோம். நாலைந்து அம்புகளை ஏவினான் மாரி. கடைசியாக அதன் காலில் சரியான அடி விழுந்தது. நாய் சமாளிப்பதற்குள் மாரி கோட்டையை நெருங்கி விட்டான். 'இனிமேல் பயனில்லை' என்பதைக் கண்டு கொண்ட நாய், வாயிலிருந்ததைக் கீழே தள்ளிவிட்டு நொண்டிக் கொண்டே ஓடிவிட்டது.

மாரி ஆவலோடு அதை எடுத்தான். ப்பூ! இவ்வளவு தானா! வெறும் தேங்காய்த் துண்டு. அதுதான் வெயிலில் மினுக்கியது. எவ்வளவு ஓட்டம், அலைச்சல், ஏமாற்றம்! நாய்க்குத்தான் எவ்வளவு திமிர். 'இருந்தாலும் பாதகமில்லை' என்று அதிலிருந்த மண்ணைத் துடைத்தான். நாயின் பற்கள் பதிந்திருந்த இடத்தைக் கடித்துத் துப்பினான். பொதுவாக அவனுக்குத் துப்ப மனமில்லை. நாய்ப் பற்கள் விஷம் என்பதால் அவன் பயந்தான். அந்தத் தேங்காய்த் துண்டில் அவ்வளவு சுவை இருந்தது.

''சண்டாளப் பயலே! திருடியதல்லாமல் நாயின் காலையும் ஒடித்துவிட்டாயே!'' என்ற குரல் கிளம்பி மாரியைக் கதிகலங்க அடித்தது. மாரிக்கு அப்போதுதான் உணர்வு வந்தது. அவனுடைய 'வெறிநாய்'க்குப் பக்கத்தில், குருக்கள் ஐயர் நின்று கொண்டிருந்தார் கண்களில் தீப்பொறி பறக்க. அக்ரகாரத்தின் மத்தியில், குருக்கள் சாமி வீட்டிற்கே வந்ததை உணர்ந்தான். அந்தப்பகுதிகளுக்கு அவன் அதிகம் வந்ததில்லை. எப்பொழுதாவது வீடுகட்ட, கிணறு வெட்ட, வைக்கோல் போரடிக்க அவன் வருவது வழக்கம். அதுவும் கொல்லைப்புறத்தால் வருவான்; நடுத்தெருவில் அல்ல. பாழும் நாய் அவனை ஏமாற்றி இழுத்து வந்தது. தலைவிதிதான்! ''இல்லை சாமி! பார்க்காம...''

''என்னடா, களவாணிப் பயலே! பார்க்காமதான் அக்கிரகாரத்து வீதிக்குள் நுழைஞ்சி தேங்காய் திருடியதல்லாமல்

காவல் காத்துக் கொண்டிருந்த நாயையும் காலொடித்து விட்டாயேடா, பாவி!''

''எவ்வளவு திமிர் இருந்தா, சேரிப்பயல் அக்கிரகாரத்துக்குள் அடியெடுத்து வைக்கும்?'' என்று ஐயர் அடுக்கிக் கொண்டே போனார்.

''இல்லிங்க சாமி! நான் ஒண்ணும்...''—இடைமறித்துப் பேசுவதையே விரும்பாதவர் குருக்கள். குருக்களின் கோபம் உச்ச நிலையை அடைந்தது.

''யாரடா அங்கே? டேய், பழனி! நீ போய் புளிய மிலாறை ஒடித்துக் கொண்டு, அம்பலக்கார அருணாசலத்தையும் அழைத்து வா'' என்று உத்தரவிட்டார். மாரிக்கு ஒன்றுமே புரியவில்லை.

மாரி கீழே விழுந்து, ''நான் வந்தது பிசகுங்க. ஆனால் திருடலை'' என்று சொன்னான்.

''நேக்கு ஒண்ணும் தெரியாதடா! அம்பலக்காரன் அதோ வர்றான். அவனிடம் எல்லாத்தையும் ஒப்பிச்சுக்கோ''

அம்பலக்காரன் எத்தகைய பரபரப்புமின்றி வந்தான். ''நமஸ்காரம் சாமி'' என்று குருக்களைச் சேவித்து விட்டு மாரியிடம் சென்றான். தன் கையிலிருந்த புளியமிலாறினால், ''மரத்துக்குப் போ'' என வழி காட்டினான். ''நான் ஒண்ணும் செய்யலே சாமி''—அம்பலக்காரன் ஒன்றையும் காதில் வாங்கவில்லை. மரத்துடன் ஒதுக்கப்பட்டு, மாரியின் கைகள் மரத்தைச் சுற்றிக் கட்டப்பட்டன.

அப்பொழுதான் மாரிக்குத் தண்டனை என்ற நினைவு வந்தது. பாம்பு நெளிவதுபோலப் புளியமிலாறுகள் அம்பலக்காரனின் கையில் அசைந்தன.

மரத்தில் கட்டப்பட்ட மாரி கதறத் தொடங்கினான். ''இல்லிங்க, சாமி! நான் திருடலிங்க. நாய்தான் தூக்கி வந்தது. நாஞ் செய்யவே யில்லை...நாஞ் செய்யவே இல்லை..''

''உங்க அடிமை! கும்பிடறேன் சாமி.''

''சுளீர், சுளீர்.''

''சாமி, ஐயோ, சாமி!''

''சுளீர், சுளீர், சுளீர்!''—மின்னல் வேகத்தில் தாக்கின. மாரி உடம்பை நெளித்தான். கம்பளிப்பூச்சி நெளிவது போல் இருந்தது.

''ஐயோ, சாமி!''

அடித்த அடியிலிருந்து ஏற்பட்ட ஊமைக் காயங்களிலிருந்து இரத்தம் கசிய ஆரம்பித்தது.

''ஐயோ சாமி'' என்று மனத்திற்குள்ளே சொற்கள், இருட்டறையில் உலாவும் வௌவால்கள்போல் சுழன்றன; பின் அடங்கின. 'சுருக், சுருக்' என்று தாக்கப்படுவதுபோன்ற உணர்ச்சி. 'ஙொய்' என்ற சத்தம்.

ஆம்! 'ஙொய்' என்ற சத்தம்; 'சுருக், சுருக்'கென்ற வலி. காற்று விட்டுவிட்டு அவன் முகத்தில் அடித்தது. மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தான். அவனுடைய பெண் ஜாதி அஞ்சலை விசிறிக் கொண்டிருந்தாள். கொசுக்களும் ஈக்களும் அவனைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அப்பா! அசையவே முடியவில்லை. காது, உதடு, கைவிரல்கள் எல்லாம் கற்கள் தொங்குவன போன்று கனத்து இருந்தன. மாரி கண்ணைத் திறந்ததும், அஞ்சலை, ''காத்தாயி! நீ தான் காப்பாத்தணும்'' என்று சொல்லிக் கொண்டே விசிறியை வைத்துவிட்டு எழுந்தாள். அதே சமயம், அடுத்த வீட்டுச் சிவகாமி வந்து, ''ஏண்டி அஞ்சலை! ஒம் புருசனுக்கு எப்படியிருக்கு?'' என்று கேட்டாள்.

''இப்பத்தான் கண்ணை முழிச்சாரு. என்னமோ பொல்லாத வேளை.''

''அஞ்சலை! உம் புருசன் ~~குருக்~~களைய்யா வீட்டுக் கிட்ட ஏன் போனாறாம்?''

37109

''அதையேண்டி கேக்கறே! எப்பவுமில்லாமெ நேத்திக்குக் கணக்குப்பிள்ளே நாலணாக் குடுத்திருக்காரு. அதை எடுத்துக்கிட்டுப் போயி, கள்ளுத் தண்ணீ போட்டு, ஒண்ணுந் தெரியாம அங்கே மாட்டிக்கிட்டாரு.''

''அதென்னடி! ஆச்சரியமாயிருக்கே...உம் புருசன் ஒருத்தர்தான் இங்கே குடிக்காம இருந்தாரு. என்னைக்குமில்லாம ஏன் நேத்திக்குப் போய்க் குடிச்சாரு? அந்த ஆசாமிங்கதான் கொடுமைக்காரன்களாச்சே!''—இந்தப் பேச்சை மாரி கேட்டுக் கொண்டிருந்தான். பதில் பேச்சு வெளிவரவில்லை.

இரண்டு மூன்று வாரத்திற்கெல்லாம் மாரி நல்ல நிலையை அடைந்தான். உடம்பிலே பலமின்மையும் அசதியும் இருந்தபோதிலும், நடமாடவும், வேலை செய்வதற்குத் தயாராகவும் இருந்தான். முன்பு வேலை செய்துவந்த பண்ணைக்குச் சென்றான். பண்ணைக் காருவாரைக் கண்டு கீழே விழுந்து கும்பிட்டு நின்றான்.

''என்ன, மாரிமுத்து! இவ்வளவு தூரம்? உடம்பு சௌக்கியந்தானே? சொல்லியிருந்தால் நாமே உன் வீட்டுக்கு வந்திருப்போமே!'' என்று காருவாரு பய பக்தியுடன் சொன்னார். மாரி திகைத்துப் போனான். மறுபடியும் மண்ணில் விழுந்து வணங்கிவிட்டு, கைகட்டி நின்றான். திடீரென்று காருவார் காரி உமிழ்ந்து, ''சீ, கழுதை! அடக்க ஒடுக்கத்தைப் பார்! இங்கே பண்ணையில் ஒனறுங் கொட்டிக் கிடக்கவில்லை. முதலியார் பண்ணையில் திருடர்களுக்கு வேலை கிடையாது. எனனெதிரே நிற்காதே! ஓடிப்போ. மறுபடியும் இந்தப் பக்கம் வந்தால் தோலை உரிச்சுடுவேன்.''

மாரி நேரே குடிசைக்கு வந்தான். கதவோரத்தில் அஞ்சலை அழுது கொண்டிருந்தாள். சத்தம் கேட்டதும் மாரியைத் திகிலுடன் பார்த்தாள். ''வேலைக்குப் போகலை? கஞ்சியை நான் களத்து மேட்டுக்குக் கொண்டு வரேன்.''

''காருவாரு சீறி விழுறாரு. பண்ணையில் வேலை கிடையாதாம்! அது போகட்டும், நீயேன் இம்மா நாழி இங்கே உட்கார்ந்திருக்கே? வேலைக்குப் போகலை?''

அஞ்சலை பதில் சொல்ல வாயெடுத்தாள். சொற்கள் தொண்டையிலேயே சிதைந்தன. அவதியும் கோபமும் நிரம்பிய கண்கள் மன்றாடின. அவனுடைய முகம் புயலிலே சுழலும் காற்றாடிபோல நிலையின்றி மாறியது. அஞ்சலை தன் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். அஞ்சலையின் வேலையும் போய்விட்டது. மாரி எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே அவன் தண்டிக்கப்பட்டிருக்கிறான். அவன் அஞ்சலையின் அருகிற்சென்று அவளைச் சமாதானப் படுத்தினான். அவளடைந்த சஞ்சலமோ சமாதானமடையக் கூடியதல்ல. பீறிட்டுவரும் ஊற்றுபோலத் தடைகளைத் தாண்டிக் கசிந்தது. மாரி மிகவும் கலக்கமடைந்தான். எனினும் கண்ணீர் விடவில்லை. அந்தக் கட்டத்தை அவன் தாண்டிவிட்டான்.

பண்ணையிலிருந்து நீக்கப்பட்ட பின் மூன்று நாட்கள் மாரி வேலைக்காக அலைந்தான். முதல் நாள் அஞ்சலை, இருந்த அரிசியைப் போட்டுக் கஞ்சி காய்ச்சினாள். இரண்டாவது நாள் இரவு வெகு நேரமாகி அஞ்சலை எங்கேயோ நெல் குற்றி உமியும் தவிடும் கலந்த அரிசி கொண்டு வந்தாள். மூன்றாவது நாள் இருவரும் முழுப்பட்டினி. இந்த மூன்று நாட்களிலும் மாரி, வேலைக்காக அந்த ஊரில், தான் நடமாடக் கூடிய தெருக்களிலெல்லாம் சென்று பார்த்தான். அவனைப் பார்த்ததும் எல்லோரும் ''மாரியா! வேலை ஒன்றும் இல்லை'' என்று வெகு சீக்கிரத்தில் சொன்னார்கள். இவன் மனுப்போடும் இடங்களிலெல்லாம் இவனைப் பற்றிய முடிவும் கருத்தும் தயாராகவே வைக்கப்பட்டிருந்தன. இவனை முன்பு பார்க்காதவர்கள், கேட்காதவர்கள்கூட இப்பொழுது அறிந்தோ, அறியாமலோ இவனைப் பற்றிப் பேசலாயினர். அவற்றில் சில மாரியின் காதிலும் விழுந்தன.

''என்ன அக்கா! குழந்தையைத் தெருவில் விளையாட விட்டு உள்ளே இருக்கிறீர்கள்? அதுவும், நகையைப் போட்டு''

''அதையேன் கேட்கிறாய்? நகையைக் கழற்றினால் குழந்தை அழுகிறது. ஐயாவும் என்னை அதட்டுகிறார். அவருக்கென்ன தெரிகிறது, நாம் படும் கஷ்டமும் திகிலும்?''

''சரி, சரி! குழந்தையை உள்ளே அழைத்துக் கதவைச் சாத்திக் கொள். உலைக்கு அரிசி போடணும். நான் போகிறேன். காலம் கெட்டுக் கிடக்கு. ஜாக்கிரதை!'' இவ்வாறு குமுதம் பக்கத்துவீட்டுக் கோமளத்தை அறிவுறுத்திவிட்டுச் சென்றாள். மாரி அந்த வீட்டைக் கடந்து செல்லும்பொழுது தானா இந்தப் பேச்சு நடைபெறவேண்டும்?

**மா**லை மிகவும் கலக்கத்துடன் மறைந்தது. இருள் துன்பத்தைப் போலச் சூழ்ந்தது. தாங்க முடியாத சுமையைச் சுமப்பவன் போல மாரி நடந்தான். விளக்கேற்றப்பட்ட ஒவ்வொரு வீட்டிலிருந்தும் இருள் சற்று எட்டி நின்றது. விளக்கொளியில் மலர்ந்த மகிழ்ச்சி முகங்களைக் கண்டான். பேச்சு அவன் காதில் விழவில்லையேயொழிய, விளக்கு வெளிசத்தில் பேசுபவர்களின் முகத்தோற்றம் நன்றாகத் தெரிந்தது. நண்பர்களுடன் உரையாடல், குழந்தைகளுடன் விளையாட்டு,விருந்தினருடன் பேச்சு—இவை அனைத்தும் விளக்கு வெளிச்சத்தில் மிளிர்ந்தன. தெருக்கோடியை அடைந்தான் மாரி. அங்கிருந்த சாவடியில் சீட்டுக் கச்சேரி நடைபெற்றது. கவலையற்ற கவலையுடன் சீட்டாட்டத்தில் அனைவரும் ஆழ்ந்திருந்தனர். விளக்கொளி அங்கும் களிப்புடன் பிரகாசித்தது!

மாரி ஊரைவிட்டு அகன்று சேரிப்பக்கம் திரும்பினான். தன்னைப் பற்றி எல்லோரும் பேசிக் கொண்டது அவன்நினைவிற்கு வந்தது. திடீரென்று 'திருடன், திருடன்' என்ற குரல் காதில் விழுந்தது. இருளில் திரும்பிப் பார்த்தான். ஒருவரும் இல்லை. இரண்டடி எடுத்து வைத்ததும், ''திருடன், திருடன், திருடன், திருடன்'' என்ற குரல்கள் எழுந்தன. வேகமாக நடந்தான். இன்னும் அதிகமான குரல்கள் பலமாகக் கத்தின. மாரி ஓட ஆரம்பித்தான். நாலா பக்கத்திலிருந்தும் ஆயிரமாயிரம் குரல்கள் கேட்டன. மாரியின் நெஞ்சு படபடத்தது. கால்கள் நடுங்கின; கைகள் உதறல் கண்டன. சத்தம் போடுவதற்கு முயன்றான். நாக்கு ஒட்டிக் கொண்டது. விழுந்துவிடுவான் போல இருந்தது. கூக்குரல் அவனை அழுத்துவதுபோல நெருங்கியது. மாரியால் பொறுக்க முடிய

வில்லை. கைகளை இறுக்கிக் கொண்டு, பற்களைக் கடித்து நிமிர்ந்து நின்றான். திடீரென்று கூச்சல் அடங்கியது. மாரி சற்று நேரம் அங்கேயே நின்றான். பிறகு எத்தகைய படபடப்புமின்றி நடந்தான். அவ்வளவும் வெறும் மனப்பிராந்தி என்று அறிந்தான்.

மறுநாள் அஞ்சலை சேரிக்குத் திரும்பும்பொழுது நன்றாக இருட்டிவிட்டது. அவள் சேரிக்குள் நுழையும்போது சேரி அநேகமாக அடங்கிவிட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தனவேயொழிய பேச்சின் ஆரவாரம் கேட்கவில்லை. குடிசையை அடைந்ததும் குடிசையிலிருந்து வெளிச்சம் வந்தது. மூங்கிற் கதவு திறக்கப்பட்டதும், அஞ்சலையின் முகத்தில் பட்ட வெளிச்சம் அவளின் ஆச்சரியத்தைக் காண்பித்தது. அடுப்பின் எதிரே மாரி உட்கார்ந்து கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தான். கஞ்சி கொதிக்கும் சத்தம் அஞ்சலைக்கு இன்னிசையாக இருந்தது. அஞ்சலை சுற்றுமுற்றும் பார்த்தாள். உரலுக்குப் பக்கத்தில் உமி கலந்த நெல், இரண்டு மூன்று கலம் இருந்தது. மாரி தான் குத்தியிருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, அஞ்சலை வருவதற்குள் கடைந்தெடுத்த அமுதைக் கொடுப்பதைப் போலக் கஞ்சியைக் காய்ச்சி வைக்க மாரி முயற்சித்தான். முடியும் நிலையில் அஞ்சலை வந்தாள்.

ஏழைகளுக்கு ஏற்படும் மகிழ்ச்சி சூட்டிரும்பில் தெளிக்கப்பட்ட தண்ணீர்த் துளிபோலப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே மறைந்துவிடும். காலையில் குடிக்கத் தண்ணீர் கொண்டு வர வாய்க்கால் பக்கம் அஞ்சலை சென்றாள். வேலைக்குப் போகும் சேரியினர் பேசிக் கொண்டது அவளுக்குத் திகைப்பைத் தந்தது. கையிலிருந்த மண்குடம் கீழே விழுந்து உடைந்தது.

''அண்ணே! நேத்திக்குப் பண்ணைக் கோட்டை சரிந்து கிடந்ததாமே?''

''காருவாரே செய்திருப்பாரடா!''

''அதென்னமோ, நேத்திக்குக் காருவாருதான் கூவிக் கொண்டிருந்தார்.''

மண்குடம் சிதறிக் காலடியில் கிடந்தது. அவளுடைய வாழ்வுகூட ஒட்ட முடியாதபடி உடைந்தது. அப்பொழுது தான் வீட்டிற்கு நெல் வந்த விதம் அஞ்சலைக்குப் புலப் பட்டது. ''பாவி! பரம சாதுபோல அடுப்பைக் காத்துக் கிடந்தானே! இந்தப் பழி, பாவங்களையெல்லாம் எப்படித் தான் செய்ய முடிகிறதோ! தேங்காய்த் துண்டைத் திருடிய தற்கே உடல் தோலை உரித்தவர்கள், நெல் திருடியதற்கு உயிரோடு புதைத்துவிடுவார்களே! என்ன செய்வது? அடி வாங்கின சுரணையை மறந்து மறுபடியும் ஏன் செய்ய வேண் டும்? தலைதூக்கி நடக்க முடியவில்லை. சேரியெல்லாம் சிரிக் கிறது! பட்டினி கிடந்து செத்தாலும் சாவது, இனிமேல் மாரி கொண்டு வருவதைத் தின்பதில்லை'' என்று உருகி னாள் அஞ்சலை. அந்த எண்ணம் மாரி மீது இருந்த மதிப் பைச் சிதறடித்தது.

வாய்க்காலிலிருந்து குடிசைக்குப் போன அஞ்சலை, அதற்கப்புறம் வெளிக்கிளம்பவில்லை. தன் ஆத்திரம் தீரும் வரை அழுதாள். பிறகு ஓய்ந்து அப்படியே கண்ணயர்ந் தாள்.

''அஞ்சலை! ஏன் அடுப்பு மூட்டவில்லை?'' என்று கேட்டபடி மாரி குடிசைக்குள் நுழைந்தான். பதிலில்லை. கையிலிருந்த மூட்டையை வைத்துவிட்டு மாரி விளக்கேற்றி னான். அஞ்சலை மூலையில் படுத்திருப்பது தெரிந்தது. பக் கத்தில் வந்து, நெற்றியைத் தொட்டுப் பார்த்து, ''உடம்பு சரியில்லையா? அஞ்சலை! அஞ்சலை!'' என்று மாரி கேட்டும் அஞ்சலை ஒன்றுக்கும் வாய் திறக்கவில்லை.

மாரி அடுப்பை மூட்டி, பானையில் தண்ணீரைப் போட் டான். அஞ்சலை அவனையே கவனித்துக் கொண்டிருந் தாள். மாரி, தான் கொண்டுவந்த மூட்டையின் மேலிருந்த வேட்டியைத் தளர்த்திக் கொண்டிருந்தான். அதிலிருப்பதைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலினால் அஞ்சலை மாரியின் பக் கத்தில்போய் நின்றாள்.

''அஞ்சலை! கஞ்சி ஏன் போடவில்லை?''

''பசியில்லை.''

''பசியில்லையா? சரி! இந்தா, இந்த வாழைப் பழத்தைச் சாப்பிடு!'' என்று கூறிக்கொண்டே மாரி மூட்டையை அவிழ்த்தான். வாழைப்பழக் குலை, பாதி பழுத்தும், பாதி காயாகவும் இருந்தது. பாம்பைக் கண்டு ஒதுங்குபவள்போல எட்டி விலகி, ''இதையெங்கே திருடினாய்?'' என்று துடிதுடிப்புடன் கேட்டாள் அஞ்சலை.

மாரி வாழைப் பழத்தைக் கீழே வைத்துவிட்டு, அவளையே உற்றுப் பார்த்தான். அவனுடைய பார்வையில் ஆச்சரியம் குடி கொண்டிருந்தது. ஆனால் அந்தக் கேள்வியால் அவன் திகைப்படையவில்லை. ''அஞ்சலை! உட்கார்!'' என்றான் மாரி. அஞ்சலை உட்கார்ந்தாள். மாரி கதைசொல்பவன்போல, ''ஏன் அப்படிக் கேட்கிறே?'' என்றான்.

''எனக்கு எல்லாம் தெரியும். பண்ணையில் போய் நெல் திருடியதைப் பார்த்தாங்கன்னா உன் உயிரைத் தொலைச்சிடுவாங்க!''

''கோட்டையிலிருந்து எடுத்தேன்.''

''எடுத்தேன்! வெட்கமில்லை, திருட்டு வேலை செய்ய? பிராணனை விட்டுவிடலாம் போலிருக்கே எனக்கு!''

''அப்படியெல்லாம் செய்துடாதே அஞ்சலை.''

''இல்லை, மவராசாவுக்கு வாக்கப்பட்டு மவராணிப் பட்டத்தை அடையணும் என்கிறியா? என் தலைவிதி! உன்னை நம்பி வந்தேன்.''

''இப்போ ஏன் வருத்தப்படுறே?''

''திரும்பித் திரும்பி அதையேக் கேக்கறியே, திருட்டுப் புத்தியே அப்படித்தான்!''

''நான் என்ன செஞ்சேன்? பண்ணையிலே எனக்குக் கொடுக்க வேண்டிய நெல் கூலி பாக்கியிருந்தது. நான் கேட்டுப் பார்த்தேன். காருவாரு கொடுக்கவில்லை. கேட்காமலேயே எடுத்து வந்தேன்.''

''ரொம்ப நாயமான பேச்சு.''

''நியாயமோ, அநியாயமோ, நாம்தான் அதையெல்லாம் கவனிக்கிறோம். காருவாரு அதைப் பார்த்தாரா? குருக்களுக்கு நியாயமென்னா என்னான்னே தெரியாது. அப்படியிருக்கும்போது நாம் மாத்திரம் நியாயம் பேசிப் பலன் என்ன? முதுகுத் தோல் உரிய வேண்டியதுதான்! நியாயம் பேசி நேற்றுக் கலத்துக்குப் போயிருந்தால், ஒன்று நெல்லில்லாமல் வீடு திரும்பி இருவரும் பட்டினி கிடந்திருப்போம். இல்லையென்றால் அவனுக்கெதிரே எடுத்து அடிபட்டு அங்கேயே உசிரை விட்டிருப்பேன்.''

''அதற்காக ஒருவருக்கும் தெரியாம...திருடணுமா? இந்தப் பழி, பாவத்தையெல்லாம் எங்கே போய்த் தொலைப்பது?''

''நேத்திக்கிக்கூட அப்படித்தான் நினைத்தேன். பழி பாவம் என்றெல்லாம் பட்டது. இராத்திரி அதை மாற்றிக் கொண்டேன். நெல்லை எடுக்கும்பொழுது கைகள் நடுங்கின; ஆனால் சாப்பிடும்பொழுது நாக்குக் கூசவில்லை. கஞ்சி காய்ச்சியபொழுது சந்தோஷமாயிருந்த உன் முகத்தைப் பார்த்ததும் பழி பாவமெல்லாம் பறந்து போச்சு.''

''திருட்டு நெல் என்றால் நான் சாப்பிட்டிருக்க மாட்டேன். அதை விஷம் போலத் தள்ளியிருப்பேன்.''

''பைத்யக்காரி! கோட்டை கட்டி வைக்கப்பட்ட நெல்லு முச்சூடும் நம்மிடமிருந்து புடுங்கப்பட்டது. ஊரிலே வாங்கிய தேங்காய்கள்தான் குருக்கள் வீட்டு வாசலிலே காய்கின்றன.''

''அது போவுது...இந்த வாழைப் பழம் ஏது?''

''அது போவுது என்று சொல்லாதே! 'அது சரி' என்று சொல்லு. இந்தப் பழத்தைத் தின்னு பார்! தித்திக்கிறதா இல்லையா என்று பின்பு சொல்லு.''

''திருட்டுப் பேச்சு பேசிவிட்டு, அதை மறைத்துத் தித்திப்புப்பூச்சு ஏன் செய்யறே?''

''அஞ்சலை! வாழைப்பழ சங்கதி பாக்கியிருக்கே! இந்த வாழைப்பழக்குலை குளத்துமேட்டு வாழைத் தோட்டத்திலிருந்து...''

''அட, பாவி! நான் நினைச்சது சரியாப் போச்சுது! இதுவும் திருடா? அதுவும் பண்ணைத் தோட்டமாச்சே!''

''எதற்கெடுத்தாலும், 'திருடு,திருடு' என்று கூவறியே, நான் தண்ணி இறைக்கிற வாழைத் தோட்டத்திலிருந்து தான் இதை எடுத்தேன். இதற்கு முன்னே குலை பழுப்பு கண்டதும் பண்ணையிலே கொண்டு போய்க் கொடுப்பேன். அதற்குப் பதிலாக அழுகிப் போன பழங்களை வெளியே தள்ளுவார்கள். அதை எடுத்து வந்து உனக்குக் கொடுப்பேன். அப்பொழுதெல்லாம் தண்ணி இறைச்சி மூச்சுத் திணறும் போதும்கூட பழத்தைத் திங்கணும்னு தோணுவதில்லை நாம்தான் பசியாத்த வாழைப்பழம் திங்கிறோம். பண்ணையில் மாட்டுக்கும் நாய்க்கும் போடுறாங்க. வாழைப்பழம் அவர்கள் வீட்டில் அழுகுப் பொருள். நாய்கூடச் சமயத்தில் சீந்துவதில்லை. அழுகியதும் குப்பையுடன் வெளியே வந்து, நம்முடைய குடிசைக்கு வருகிறது.''

''சரி! சரியான புத்தி மாறாட்டம்! பேச வேறே கத்துக்கிட்டே...''

''குருக்களைய்யா என்னை அடிக்கிறதுக்கு முன்னே, எவ்வளவு அடக்க ஒடுக்கமாயிருப்பேன். கள்ளுத் தண்ணி போட்டு, கலகம் பேசினேன்னு ஒரு புகார்கூடக் கிடையாது. அடிபட்ட நாள்கூட, கணக்கப்பிள்ளையின் நாலணாவை எடுக்க எனக்கு மனம் வரலை. நாயின் வாயிலிருந்த துண்டு வெள்ளிபோல இருந்ததால், அதை நாயிடமிருந்து எடுக்க

விரட்டினேன். அதுகூடத் தப்புதான். அப்ப இருந்த களைப்பும் பசியும் என்னமோ தூண்டியது. அதற்காக நான் பட்ட அடிகள் எவ்வளவு? அடிச்சவர்கள் உடம்பை மாத்திரம்அடிக்கவில்லை; என்னுடைய மனசு, புத்தி எல்லாத்தையும் புண்ணாக்கிவிட்டாங்க. உண்மையாகவே என் உசிரு போய்ப் புது உசிரு வந்திருக்கு. 'நான் திருடலை' என்று கண்ணீர் விட்டுக் கதறினேன். அவர்கள் கேட்டார்களா? நாயின் மீது பச்சாதாபப்பட்டார்களே தவிர என்னை யாராவது சமாதானப்படுத்தினார்களா? நாய் கடித்துப்போட்ட தேங்காய்த் துண்டு. அதைத் திருடிய குற்றம் என்மேல். நீகூட நம்பினாய்.அடுத்த நாள் நீ பக்கத்து வீட்டுப் பொண்ணோடு பேசிக் கொண்டது எனக்குக் கேட்டது. குடித்துவிட்டுத் திருடியதாகப் பேசிக் கொண்டீங்க. அப்பொழுதே உங்களிடம் சொல்ல முயற்சித்தேன்; முடியவில்லை. நடமாடமுடிந்த பொழுதும் பலரிடம் சொன்னேன், 'நான் திருடலை' என்று. சிலர் தலையசைத்தார்கள். சிலர் என்னிடம் பரிதாபம் காட்டினார்கள். என் பேச்சு சிலருக்கு கோபத்தைக் கொடுத்தது. ஒருவராவது என்னை நம்பவில்லை. பிறகுதான், 'நான் செய்ய வில்லை' என்பதை நிரூபிப்பது முடியாது என்று கண்டேன். அதற்காகப் பழியை ஏற்றுக் கொள்ளவில்லை. யாராவது, 'திருடன்' என்று சொன்னால், நான் முறைத்துப் பார்ப்பேன்.பிறகு அதுகூட முடியவில்லை. திரும்பிப் பார்த்த இடங்களிலெல்லாம் 'திருடன்' என்ற குரலே வந்தது. எங்கு சென்றாலும், 'திருடனுக்கு வேலை கிடையாது' என்ற பேச்சு. அந்த நிலையில் உனக்கும் வேலை போய்விட்டதாகச் சொன்னாய்.

வேதனை அடைந்த மனசோடு வீட்டிற்கு வந்தால், அழும் அஞ்சலையையும், அவிந்த அடுப்பையும் பார்த்து மனசு முறிஞ்சு போச்சி. குழந்தை முதல் கிழவர் வரை திருடனுக்காக என் பெயரைச் சொன்ன பொழுதெல்லாம் நான் மறைக்கக் கஷ்டப்பட்டாலும், மழையை லட்சியம் பண்ணாத எருமைபோல அலைந்தேன். அடிக்கடி நினைச்சுப் பார்ப்பேன். 'நான் திருடவில்லை; ஆனாலும் திருட்டுப்

பெயரும், திண்டாட்டமும். அதற்கடையாளம் உடம்பு முழுவதுமுள்ள தழும்புகள். களவு செய்யவில்லை; ஆனால் அதைவிட அதிகமாகத் திருடினால் கிடைக்கும் தண்டனையை விடப் பல மடங்கு அதிகமான தண்டனை அனுபவிச்சேன். வெளியே தலை நீட்டினால் பழியும் பேச்சும். ஆனால் வீட்டிலே பசியும் கண்ணீரும்! திருட்டுப் பட்டத்தை ஏற்றுக் கொண்டேன். இப்பொழுது என்னை முன்போலவே பழிப்பார்கள். ஆனா...கொஞ்சம் பயத்தோடு! முன்பு பசித்துக் கிடந்தேன். இப்போது பசி நீங்கியது. நான் திருடனா? நான் ராஜாடி ராஜா! அகப்படாத வரையிலே ராஜா! அகப் பட்டுக் கொண்டா உதைப்பாங்க. அதுதான் எனக்கு முன்பே நடந்ததே, ஒரு பாவமும் அறியாதபோதே!இப்ப அடிச்சா... என்னாவாம்?

''தா! என்னா இது! ஊருக்குத் திருடனா இருந்துகிட்டு, 'நான்தாண்டி ராஜா'ன்னு உளற்ரே! இதைக் கேட்டு நான் ரொம்பச் சந்தோஷப்படுவேன்னு நினைக்கிறியா? எவனாச்சம், இந்த 'ராஜா' திருடறப்போ பார்த்துட்டால்லோ தெரியும், ராஜா பாடு!''

''இந்த ராஜாபாடு மட்டுந்தானா? நெஜமாலம் ராஜா கூடத்தாண்டி சண்டையிலே தோத்துப் போனா இன்னொரு ராஜா கையிலே அடிபடுவான்!''

★

# 4
# புலிநகம்

1659! மராட்டிய மண்டலத்திலே மாவீரன் சிவாஜி, வீர வெற்றிகளின் பயனாக, விடுதலை வேட்கை கொண்டவர்களின் மனதிலே கொலுவீற்றிருந்த சமயம்! மணிமுடி தரித்துக்கொள்ளவில்லை. ஆனால் அவன் காலடியிலே கிடந்தது மணிமுடி! ஓய்வுதான் இல்லை, பட்டாபிஷேகத்துக்கான காரியங்களைக் கவனிக்க. மராட்டிய மன்னன் என்ற பட்டம் இல்லையே தவிர, நிலை அதுதான். யார் இந்த மாயாவி? மலைகளை அதிரச் செய்கிறான், மண்டலங்களை மண்டியிட வைக்கிறான், உழவர்களை வீரராக்குகிறான்! எங்கும் அவன் வெற்றி! பரத கண்டத்திலே புதியதோர் ஒளியானான். பரவிவரும் இஸ்லாமிய ராஜ்யத்துக்குப் புயலானான்! இவனை இப்படியே விட்டு வைப்பதா? வீரன், தீரன், இரட்சகன், அவதார புருஷன் என்றெல்லாம் புகழப் படுகிறான். புதிய அரசை சிருஷ்டிக்கிறான். சாத்பூரா மலைச் சரிவுகளிலெல்லாம் அவனுடைய போர் வீரர்கள்! குகைகளிலே கூடித்திட்டம் வகுத்துவிடுகிறான். பிறகு அரண் மனைகளிலே அழுகுரல் கேட்கிறதே! சரித்திரத்திலே இடம் தேடும், இந்தச் சாமான்யக் குடியானவனை இப்போது வளர விடுவது, ஆபத்து. எதிர்காலத்திலே அவன் புகழ் நிலைத்து விடும்! சிவாஜியின் வெற்றி நிறுத்தப்பட வேண்டும்!—என்று இந்திய உபகண்டத்திலே ஆங்காங்கு இருந்த அரசுகள் பலவற்றிலும் பேசப்பட்ட காலம். ஆச்சரியமும், அச்சமும் கலந்த பேச்சு, எங்கும், அந்த அஞ்சா நெஞ்சனைப்பற்றி. அவனை அலட்சியப்படுத்த முடியாது. அவன் வளர்ச்சியைச்சாமான்யமாகவும் கருதக்கூடாது. மண்ணிலே செம்பொன் கண்டெடுக்கிறான், மங்கிய மராட்டியத்திலே மாணிக்கங்களை உண்

டாக்கிவிட்டான். மாசு மருவற்றவன் என்றும் புகழப்படு கிறான். குடியில்லை, கூத்தியில்லை, கோலாகல வாழ்வு இல்லை, வீரத்தின் சின்னமாய் விளங்குகிறான், மாற்றுக் குறையாத மராட்டியத் தங்கம்! இந்த நிலையை நீடிக்கவிட் டால் இனி நமக்கு வரும் பங்கம் என்று அரசு பீடத்தில் அமர்ந்திருந்தவர் அனைவரும் எண்ணிய காலம் அது. 1659-ம் ஆண்டு, சிவாஜி, ஜாகீர்தார் நிலைக்காக அல்ல, சாம்ராஜ்யாதிபதியாவதற்காகவே வேலை செய்கிறான் என்பது விளங்கிவிட்டது.

5000 குதிரை வீரர்கள்! 7000 காலாட் படைகள்! போர் முரசு கொட்டியபடி இப்பெரும் படையைத் தலைமை தாங்கி நடத்தி வந்தான் தளபதி அப்சல்கான். குதிரைப்படை கிளப்பிய தூசு போல, சிவாஜியின் வெற்றிகள் இனியாகும் என்று அப்சல்கான் எண்ணினான். கோபத்தோடு, உறுதி யோடு, அசைக்க முடியாத நம்பிக்கையோடு சென்றான், அப்சல்கான். படையின் ஆர்ப்பரிப்புக்கு இடையிலேயும், அவனுக்கு புறப்படுமுன்பு, தனக்கும் மன்னனுக்கும் நடந்த உரையாடல் காதிலே வீழ்ந்த வண்ணமே இருந்தது. வாழ்க் கையிலே முக்கியமான கட்டம் அது—அவனுக்கு மட்டுமல்ல; அவன் பணிபுரிந்து வந்த அரசுக்கே.

''அப்சல்! உன் வாழ்நாளிலேயே மிக முக்கியமான செயலில் இறங்குகிறாய். இதிலே நீ வெற்றி பெறுவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது, பீஜபூர் மண்டலத்தின் புகழ்'' என்று மன்னன் கூறியபோது, ''மன்னா! அந்த மலை எலி, இங்கு உலவுவது நமது மண்டலத்துக்கே இழிவு தருவது என்பதை உணருகிறேன். இதோ புறப்படுகிறேன்! சிவாஜியைச் சிறைபிடித்து வருவேன். வெற்றியுடன் திரும்பி வருவேன். இது உறுதி'' என்று வீரமாகப் பேசியதும், அப் சல்கானின் நினைவிலே பதிந்துவிட்டது. படையைப் பார்க் கிறான், பூரிக்கிறான், தன் திறமையை எண்ணுகிறான், மகிழ்கிறான்; சிவாஜியின் கண்முன் இப்படை தோன்றினால் போதும்! பீஜபூர் மன்னன்முன் மண்டியிட, அந்த மார் தட்டும் வீரன் ஓடோடி வருவான் என்று நினைத்தான்.

அப்சல்கான், சாமான்யனல்ல; வீரப்படைகளை நடத்திச் சென்று வெற்றி பல கண்டவன். எனவே அவன் எண்ணியது வீண் புகழ்ச்சியுமல்ல.

காடு, கூடாரமாயிற்று! குதிரைகள், கானாறுகளிலே நீர் அருந்தின! கடுகிச்சென்ற ஒற்றர்கள், கடும்புயல் மராட்டியத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கூறினர். கலங்காத உள்ளந்தான். ஆனாலும் காலாட்படை 7000, குத்ரைப்படை 5000, படைத்தலைவன் அப்சல்கான் என்று கேள்விப்பட்டால், சிவாஜியும் சோகிக்கத்தானே வேண்டி நேரிடும்! இவ்வளவு பெரிய படையை, நேரடியாகத் தாக்கி வெற்றி பெற முயற்சிப்பது, வீண் வேலை என்பதை, வீரத்துடன் யூகமும் தெரிந்த சிவாஜி தெரிந்து கொள்ளாமல் இல்லை. அப்சல்கான், பிரதாப்கார் நகருக்கு வெளியே! சிவாஜி தன் சிறு படையுடன் நகருக்குள்ளே! பெரும் புயல் வெளியே! ஆபத்துக்கும் தனக்கும் இடையிலே இருந்தது ஒரே ஒரு காடு—அதிலே இருந்ததும் ஒரே ஒரு பாதை. அந்தப் பாதையிலே பீஜபூர் படைகள் நுழைந்தால், சிவாஜியின்படை தப்பிச் செல்லவும் முடியாது. அதுவரை பெற்ற வெற்றிகள் அவ்வளவையும், அப்சல்கானுக்குக் காணிக்கையாக்கிவிட வேண்டியதுதானா? மராட்டியம், மண்டியிட வேண்டியது தானா? பீஜபூர் சுல்தானிடம் பணியத்தான் வேண்டுமா? வேறு மார்க்கமே இல்லையா?

1946 இன்று இபுராகீமுக்கு, இந்து தேச சரித்திரத்தைப் போதிக்கிறார் சுந்தரேச ஐயர்! ''அப்சல்கானின் பெரும்படையைக் கண்ட அஞ்சா நெஞ்சன் சிவாஜி, என்ன செய்தான்? அப்சல்கானைத் தனியாகச் சந்திக்க வேண்டுமென்று கூறினான். பீஜபூரான் வந்தான்; அவனைத் தழுவுவதுபோலச் சிவாஜி நடித்துத் தன் கரத்திலே வைத்திருந்த புலிநகத்தால் கீறிக் கொன்றான்'' என்று வரலாற்று ஆசிரியர் கூற, இபுராகீம், தன்னையுமறியாது ''பத்மாஷ்'' என்று ஏச, துஷ்ட நிக்ரஹார்த்தம் எதையும் செய்யலாம் என்று வரலாற்று ஆசிரியர் கொஞ்சம் வைதீக போதனையும் புரிகிறார். என்ன சமாதானம் சொன்னாலும், இபுராகீம்,

''இது சதிச் செயல்! நம்பிக்கை துரோகம்! வஞ்சனை! ஒரு வீரனின் இலட்சணமல்ல'' என்று கூறாமல் இருக்க முடியுமா? உண்மையிலேயே, மாவீரன் செய்யலாமா? சமரசம் பேச அழைத்துத் தழுவி, தழுவுகிற நேரத்தில் வஞ்சகமாகக் கொல்வது வீரமரபா? இல்லை! இபுராகீம் மட்டுமல்ல; வெளிஉலகு முழுவதும், சிவாஜி, அப்சல்கானைக் கொன்றார். அக்ரமம், சதி செய்தார், தன் கீர்த்திக்கே இதனால் ஓர் பழி தேடிக் கோண்டார் என்றே கூறும். ஆனால் இபுராகீமுக்கும் தெரியாது, இவ்வளவு பெரிய இலட்சிய புருஷன் ஏன் இந்தச் சதிச்செயல் புரியவேண்டும் என்று. தனிமையிலே சிந்தித்துச் சோகிக்கும் தோழர்களுக்கும் தெரியாது. ஏன் சிவாஜி அங்ஙனம் செய்தார்? வீர சிவாஜியை இந்த வஞ்சகம் புரியச் செய்த சூட்சுமசக்தி எது என்ற உண்மை. வரலாற்று ஆசிரியரும் அதைக் கூறமாட்டார். சிவாஜி துரோகம் செய்ததாக, இபுராகீம் எண்ணிக் கொண்டால் அவருக்கு என்ன நஷ்டம்? அவர் இபுராகீம் இனமுமல்ல, சிவாஜி பிறந்த மராட்டியக் குடியுமல்ல, அவர் பூதேவர் பரம்பரை! சிவாஜியின் போக்குக்கான உண்மைக் காரணம் என்ன? அதை அறிய மீண்டும் நாம் கொஞ்ச நேரம் அப்சல்கான் படையுடன் போக வேண்டும். போவோம்.

**வா**ளையும் வேலையும் கூர்பார்த்துக் கொண்டும், இன்னவிதமான நிலையிலே இவ்விதமாகக் கத்தியை வீச வேண்டும், இன்ன இடத்திலே முன்னேறித் தாக்க வேண்டும், இந்த இடத்திலே, பக்கவாட்டில் தாக்க வேண்டும் என்று, போருக்கான எண்ணம், ஏற்பாடு ஆகியவைகளிலே, அப்சல்கானின் படை ஈடுபட்டிருந்தது. கூடாரத்திலே அமர்ந்து, வரவிருக்கும் வெற்றியை நினைத்துக் குதூகலமாக வீற்றிருந்தான் அப்சல்கான். அந்தக் காட்டிலே, கோபிநாத் பண்டிட்ஜியும், அதே இடத்தில் உலவுகிறார். அவரிடம் வாள் இல்லை; ஆனால் மற்றக் குலத்தவரைத் தம் தாளடியிலே காண்பதற்கான மகத்துவத்தை மகேஸ்வரனிடம் பெற்றதாகக் கூறிக்கொள்ளும் பிரம்ம குலத்தவர், கோபிநாத்.

அப்சல்கான், சிவாஜியை முறியடிக்கப் படைபலத்துடன் வந்ததுடன், சமரசம் பேச சிவாஜி விரும்பினால், அதை முன்னின்று முடித்து வைக்க அந்த முப்புரியானையும் அழைத்து வந்தான். கோபிநாதரின் மனதிலே, என்னென்ன எண்ணங்கள் கிளம்பின என்பதை வரலாறு எங்ஙனம் எடுத்துக் காட்டும்! சரிதங்களிலே சம்பவங்களைக் கொண்டுதானே, அவற்றுக்கான சில பல சிந்தனைகளை யூகிக்க முடியும்! கோபிநாத்பண்டிட்ஜி, தூது அனுப்பப்பட்டார் சிவாஜியிடம். பெரியதோர் படை தயாராக இருக்கிறது என்பதை எடுத்துக்கூறி, சிவாஜியைப் பணிய வைக்கக் கிளம்பினார் கோபிநாத். மகத்தான, பொறுப்பான ஓர் செயல் தரப்பட்டது என்பதை எண்ணும்போது கோபிநாத் பெருமை அடைந்துதான் இருப்பார். ஒரு மண்டலாதிபதியின் தூதராக, மற்றோர் மாவீரரிடம் செல்வது, சாமான்யமான காரியமல்ல. பண்டிட்ஜி புறப்பட்டார். நாடுகளைக் காடாக்கிவிடக் கூடிய படைபலம் பெற்றிருந்த அப்சல்கானின் தூதராகக் கிளம்பிய அந்த ஆரியனின் அகம், முதலில் பெருமை கொண்டிருக்கும்; பிறகோ சிந்தனை வேறாகித்தான் இருக்கும். பரத கண்டத்திலே பல்வேறு இடங்களிலே இருந்த நிலை பற்றிய நினைப்பு தோன்றாமலிருக்குமா? கோபிநாதரின் மனக்கண்முன் அப்போது, என்னென்ன காட்சிகள் தோன்றியிருக்கும்! அஸ்தினாபுரம் டில்லியாகி, அங்கு அவுரங்கசீப் அரியாசனம் ஏறும் காட்சி ஒரு புறம்! வங்கத்திலே இஸ்லாமியரின் வல்லமையால் ஆட்சி நிறுவப்பட்ட காட்சி மற்றோர் புறம்! பீஜபூரிலே ஒரு சுல்தான்! தன்னைத் தூதுபோகச் செய்த அப்சல்கான், துடிதுடிக்கும் படையுடன் இருக்கும் காட்சி! எதிரே பிரதாப்கார் நகரம்—அங்கேயோ, மராட்டிய குலம் ஆள்கிறது! ஒருபுறம் இஸ்லாமியர்; மற்றோர்புறம் மராட்டியர்! ஆரியர் ஆட்சிப் பீடத்திலே எங்கும் தென்படவில்லை. பெருமையுடன், அந்த பூபாகத்தைப் பாரத்வர்ஷம், பரத கண்டம், ஆர்யவர்த்தம் என்று பேசிக் கொள்ளும் ஆரியர், அரச பீடத்திலே இல்லை! தூது போகும் வேலைதான் கிடைத்தது! கோபிநாத் பண்டிட்ஜியின் மனக்கண், இவை போன்ற காட்சிகளைக் காணாதிருந்திருக்க முடியாது!

அப்சல்கான் அனுப்பிவைத்த கோபிநாத் பண்டிட்ஜி, சில சகாக்களும், பணியாட்களும் புடைசூழ, நகருக்குள் நுழைந்தார். ''பணிந்துவிடு சிவாஜி! இல்லையேல் அழிவு இந்நகருக்குள் நுழையும்! நீ அஞ்சா நெஞ்சனாக இருக்கலாம். ஆனால் அப்சல்கானிடம் இருக்கும் படை பிரம்மாண்டமானது'' என்றுகூற, சிவாஜி கோபிநாத் பண்டிட்ஜியை மரியாதையாக வரவேற்றான். உபசாரம் பல புரிந்தான். அவரும் உடன் வந்தோரும் தங்கியிருக்க, இடவசதிகள் ஏற்பாடு செய்து தந்தான். ஒரு பலம் பொருந்திய துரைத்தனத்தின் தூதுவராக வந்துள்ள பண்டிட்ஜியை, மிகக் கௌரவமாக நடத்த வேண்டுவது முறைதானே! முறை தெரியாதவரா, வீரசிவாஜி! முறை மட்டுமல்ல, கொஞ்சம் யூகமும் தெரிந்தவர். கோபிநாத் பண்டிட்ஜி பிரம்மகுலத்தவர் என்பது தெரிந்ததும், சிவாஜிக்கு வர இருக்கும் ஆபத்தினின்றும் தப்ப, ஒரு வழி கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கை பிறந்தது. கோபிநாதருக்குச் செய்த மகத்தான உபசாரத்தின் உட்பொருள் அதுதான். அவருடன் வந்தவர்களுக்குத் தரப்பட்ட விடுதிகளினின்றும், கொஞ்சம் தொலைவான இடத்திலே, பண்டிட்ஜிக்கு, தங்கும் இடம் அமைக்கப்பட்டது. நள்ளிரவில், சிவாஜி, அந்தத் தனியிடம் சென்றான், கோபிநாத் பண்டிட்ஜியிடம், தனியாகப் பேச! தூது கூற வந்தவரை, இலகுவில் தன் பக்கம் இழுத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில். மராட்டிய மாவீரரின் நம்பிக்கை வீண் போகவில்லை. மறையவர், மலர்ந்த முகத்துடனேயே வரவேற்றார் சிவாஜியை.

''மாமுனியே! மராட்டிய மண்டலத்துக்கு வந்துள்ள ஆபத்தை நினைக்கும்போது''...

''மனக்கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் மாவீரனே! பணிவதன்றி வேறு மார்க்கம் இல்லை.''

''பணிவது பற்றியல்ல பூதேவா நான் சோகிப்பது! என் மனோபீஷ்டம், சங்கல்பம், பாழாகுமே.''

''படைபலம் அவனிடம் அதிகம்! எதிர்த்துப் பயன் இல்லை. தோல்வி நிச்சயம் சம்பவிக்கும். அழிவை அணைத்துக் கொள்வாருண்டோ?''

''மறையவரே! என் சங்கல்பம், இங்கு பாரத்வர்ஷத்திலே நமது ஜென்ம பூமியில், புண்ய பூமியில், இந்து சாம்ராஜ்யம் சிருஷ்டிக்க வேண்டும் என்பதுதான். என் பொருட்டு அல்ல; பிராம்மணோத்தமர்களின் பொருட்டே நான் இந்தப் பாடுபடுகிறேன். என் இலட்சியம் தங்களுக்குத் தெரிந்திருக்கும். பசு, பிராம்மணர், இவற்றின் இரட்சகன் சிவாஜி என்பதை ஸ்தாபிக்க வேண்டுமெனபதே என் நோக்கம். இந்த ராஜ்யம் ஏற்பட்டால்தான் பூர்வ பெருமை நிலைக்கும்; பண்டைச் சிறப்பு மீண்டும் தோன்றும்! ஆரியவர்த்தத்திலே, வேதாச்சாரமும், குலதர்மமும் ஜொலிக்கும். ஸ்வாமி! சித்தம் குழம்பியிருக்கும் நான் தங்களை யாசிக்கிறேன். என் சங்கல்பம் ஈடேற வழி செய்யுங்கள்; சனாதனதர்மம் தழைக்க உபாயம் கூறுங்கள்; இந்த பீஜபூர் படையினால் அழிந்துவிடலாமோ? நான் பாடுபட்டு வளர்ந்துவரும் பால்யன! பூஜிதரே! ஒருவழி காட்டும்!''

''நானா? வழிகாட்டுவதா? சிவாஜி! நான் பீஜபூர் சுல்தானின் தூதுவன்!''

''இல்லை,ஸ்வாமி! தாங்கள் பாரத்வர்ஷத்தின் பிரதிநிதி! ஆர்யவர்த்தத்தை இரட்சிக்க வேண்டிய ஆர்ய சிரேஷ்டர்! தங்களை அப்சல்கான் அனுப்பியிருந்தாலும் சரி, பீஜபூர் சுல்தான் அனுப்பியிருந்தாலும் சரி, நான் தங்களை ஆண்டவன் அனுப்பி வைத்த தூதுவர் என்றேகொள்கிறேன். ஆரிய! ஆரியவர்த்தத்துக்கு ஆபத்து நேரிடுவதைத் தடுக்கப் பிரம்ம குலத்தவராகிய உமக்கு உரிமை உண்டு! உமது கடமையும் அதுதான். நான் ஆரிய சேவா சைன்யத்தை நடத்துபவன்,கட்டளை பிறப்பித்துவிடும்!ஆர்யவர்த்தத்தை அன்னியரிடம் தந்துவிடவா? அப்சல்கானிடம் அடிபணியவா? ஆரிய! நான் அடி பணிவது என்றால் என்ன அர்த்தம்? ஆரியவர்த்தம் அழிந்தது என்று பொருள்!''

கோபிநாத் பண்டிட்ஜி வந்ததோ, சிவாஜியைப் பணிய வைக்க! சிவாஜியோ, மேலே தீட்டப்பட்ட கருத்துகளைக் கொட்டினான் கோபிநாதர் முன்பு. கோபிநாத் கூறிவிட்டிருக்கலாம். ''சிவாஜி! துரோகம் செய்ய முடியாது! நம்பிக்கை மோசம், மகாபாபம்! நான் பீஜபூர் சுல்தானின் உப்பைத் தின்பவன். அவனுக்கு ஊறு தேடமாட்டேன். அது கயவர் செய்யும் காரியம். தர்மசாஸ்திரம் இதை ஏற்காது!'' என்று. ஆனால் கோபிநாத் அதுபோல் கூறினாரா? இல்லை! துரோகம் செய்யக் கூடாது என்ற எண்ணம் இல்லை. ஆரியவர்த்தம்! ஆரிய சிரேஷ்டர்! சனாதனம் எனும் சொற்களின் சுவையை ரசித்தார்; பீஜபூர் சுல்தானைக் காட்டிக் கொடுக்க இசைந்தார்! வந்தது தூதுவனாக; ஒப்புக் கொண்டதோ, துரோகியாவதற்கு! எவ்வளவு நேரம், கோபிநாத் பண்டிட்ஜியின் மனதிலே போராட்டம் இருந்ததோ நாம் அறியோம்; துரோகி என்று உலகு எதிர்காலத்திலேனும் தூற்றுமோ என்று துளியாவது அச்சம் பிறந்ததோ அறியோம். பக்தனின் தூபத்தைப் பெற்றுப் பரவசமடைந்த பண்டிட்ஜி, பழிபாவம் எதையும் கருதாமல், எந்த பீஜபூர் சமஸ்தானத்தால் வளர்க்கப்பட்டாரோ, அதே அரசுக்குத் 'துரோகி'யாக இசைந்தார். கோபிநாதர், சாமான்யரா? பண்டிட்ஜீ! வேதபுராண இதிகாசம் தெரிந்தவர்! அதாவது, நயவஞ்சகம், அடுத்துக் கெடுத்தல், அணைத்து அழித்தல், கொஞ்சி நஞ்சு தருவது போன்ற முறைகளை ஏராளமாகக் கூறும் ஏடுகளை நன்கு அறிந்தவர். பாரதத்திலே, திருதராஷ்டிரன், எதிரியை அணைத்து அழித்தது பற்றிப் படித்திருக்கிறார். சூரியனையே சக்ராயுதத்தால் மறைத்துப் பொழுது சாய்ந்ததாகக் காட்டி எதிரியைக் கொல்ல, அர்ஜுனனுக்கு உதவி செய்த கண்ணன் காட்டும் வழியை அறிந்தவர் கோபிநாத்! பாரதம் போதாதா, எதிரியை அழிக்க! ''தர்மாதர்மம்'' பார்க்க வேண்டிய அவசியமில்லை என்ற ஆரிய மார்க்கத்தை எடுத்துரைக்க, கோபிநாதருக்கு மட்டுமல்ல, சிவாஜிக்கும் தெரியும் பாரத—இராமாயணக் கதை. பூஜைக்குரிய இராமன் மரத்தின் பின்புறமிருந்து அம்பு எய்தி வாலியைக் கொன்ற கதையை பக்தி சிரத்தையோடு பாரா

யணம் செய்ததும், அதைக் கேட்டு ஆனந்தித்ததும், வீண் போகுமா? இப்படிப்பட்ட சமயத்திலே, அந்த இதிகாசங்களிலே தெரிந்துகொண்ட 'முறைகள்' பயன்படவில்லையானால், அவைகளைப் படித்துத்தான் பயன் என்ன? கோபிநாத் பண்டிட், சிவாஜிக்கு, அப்சல்கானின் படையை முறியடிக்க, இன்ன யாகம் செய், அதனால் இன்ன அஸ்திரம் கிடைக்கும் என்று யோசனை கூறினாரா? இல்லை! இன்ன தெய்வத்தை உபாசனை செய், இந்த மந்திரத்தை ஜெபித்து விட்டுப் போருக்குக் கிளம்பு என்று உபதேசம் செய்தாரா? அவர் 'குரு'வாக அமரவில்லை; பீஜபூர் குடிகெடுக்கும் துரோகியானார். அப்சல்கானுடன் போர் வேண்டாம்—பணிவதாகச் சொல்லி அனுப்பு பாவனைக்கு—அப்சல்கானிடம் நேரடியாகப் பணியத் தீர்மானித்திருப்பதாகச் செய்தி அனுப்பு—தனியாக அப்சல்கான் இங்கே விஜயம் செய்யட்டும். நான் அவரிடம் சரண் புகுந்துவிடுகிறேன்—சமர் வேண்டாம் என்று அப்சல்கானிடம் தூது அனுப்பு என்று யோசனை கூறினார் பண்டிட் கோபிநாத்—டண்டிட்? இல்லை—பாதகன்!

''அப்சல்கான் வருவானா?''

''அனுப்பி வைக்கிறேன். அதாவது, அவன் இங்கே தனியாக வரும்படி நான் செய்கிறேன்.

''வந்த பிறகு...?''

''வந்த பிறகு! மராட்டியத்தை, உன் மண்டலத்தை, உன் எதிர்காலத்தைக் கருக்கக் கூடிய எதிரி, துணையின்றித் தனியாக வருகிறான் உன்னைச் சந்திக்க! வந்தபிறகு...என்று என்னைக் கேட்கிறாயே, வகை கெட்ட...''

''அறிந்தேன் ஆரிய! ஆனால் அப்சல், ஆயுதபாணியாகத்தானே வருவான்?''

''பைத்யக்காரா! அப்சல்கான், அஞ்சி அடிபணியக் காத்துக் கொண்டிருக்கும் சிவாஜிக்குத் தஞ்சமளிக்கவன்றோ இங்கே வருவான்—நிராயுதபாணியாகவே வருவான். அவ்விதம் ஏற்பாடு நடக்கும்.''

''பண்டிட்ஜி! தங்கள் பாதாரவிந்தம்...''

கோபிநாத் பண்டிட்டின் சதியாலோசனையே, சிவாஜியைத் தனியாகக் காண, அப்சல்கான் வருவது என்ற ஏற்பாட்டை உருவாக்கிற்று! வீர சிவாஜிக்கு, வாள் ஏந்தத் தெரிந்த அளவுக்கு வஞ்சனை வீசத் தெரிந்திருக்க முடியாது! வேதிய குலத்தவராம் கோபிநாத் பண்டிதர், அந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டார், பரம்பரைப் பழக்கத்தின்படி!! சிவாஜி, மகத்தானதோர் 'ராஜதந்திர வெற்றி' பெற்றதாகச் சந்தோஷித்தான்! பண்டிட் கோபிநாத், மராட்டியத்தை ஆரிய சேவா பீடமாக்கிவிட்டதாக எண்ணி மகிழ்ந்தான். அப்சல்கானோ, 'திறமைமிகுந்த தூதுவர்' திரும்பி வருவார், சீறிப் போரிட்ட சிவாஜியின் சரணாகதிச் செய்தியைத் தூக்கிக்கொண்டு என்று எண்ணிச் சாய்ந்திருந்தான். கோபிநாத் பண்டிட்ஜி வந்துசேர்ந்தார்—அப்சல்கானின் கொலைக்கான ஏற்பாடு செய்து வைத்துவிட்டு! அப்சல், படை அறிவான், போர் அறிவான், பாதகம், சதி, கசப்பு இவைகளைத் தாங்கி நடமாடும் மனித உருவங்கள் தன் பக்கத்தில் இருப்பதை எங்ஙனம் அறிவான்?

''சலாம் பண்டிட்ஜி!'' என்று சந்தோஷமாக, கோபிநாத்தை வரவேற்றான். அன்று மட்டுந்தானா! 1946ல் கூடத்தான்! ''வாங்க ஸ்வாமி'' என்று கோபிநாதர்களை வரவேற்கிறார்கள்!

''சரண் அடையச் சம்மதித்துவிட்டான்!''

''ஹூத் அச்சா! பண்டிட்ஜி! அவன் மகா முரடன் என்பார்களே, எப்படிப் பணியச் சம்மதித்தான்?''

''முரடனாக இருக்கட்டுமே, சைன்யாதிபதி! அவன் என்ன குருடனா, இந்தப் பிரம்மாண்டமான படை நம்மிடம் இருப்பதை அறியாதிருக்க!''

'கோபிநாத் உமது வெற்றி இது!'

'ஒரு விதத்தில் என் வெற்றிதான்.'

ஒரு விதத்தில் மட்டுமா, சகல விதத்திலும் கோபிநாத்தின் வெற்றிதான் அது. போரிடப் புறப்பட்ட அப்சல்,

போரிடாமலேயே மாவீரனை மண்டியிடச் செய்துவிட்ட மகிழ்ச்சிப் பெருக்கால், கேளிக்கையாகத்தானே இருந்திருப்பான். ஏன் இராது? எந்தப் பக்கமும் எந்த வீரனுடைய வெற்றிமுரசு கேட்டு வந்ததோ, எந்த வீரனின் வெற்றிக் கொடி மலை உச்சிகளிலெல்லாம் மகோன்னதமாகப் பறக்க விடப்பட்டதோ, அந்த வீரன், மண்டியிடச் சம்மதிக்கிறான் என்றால், மகிழ்ச்சி பிறக்காதிருக்குமோ, அப்சல்கானுக்கு!

அந்த மகிழ்ச்சி பன்மடங்கு அதிகமாயிற்று. சிவாஜியால் அனுப்பப்பட்ட தூதன், அப்சலிடம், சரணாகதியை உறுதிப் படுத்த வந்தபோது, கோபிநாத் பண்டிட்ஜி, அப்சல்கானால் அனுப்பப்பட்ட தூதன்! சிவாஜி அனுப்பிய தூதனும், ஓர் பிராமணனே! பெயர் கிருஷ்ணாஜீ பாஸ்கர்.

''சிவாஜி, சமர் செய்ய விரும்பவில்லை. பீஜபூர் ஆட்சிக்கு அடங்கி நடக்க ஒப்புக் கொள்கிறார். பீஜபூர் சுல்தானின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட இசைகிறார். சரண் அடைய விரும்புகிறார். வீராதி வீரனே! எங்கள் சிவாஜியின் இந்த வேண்டுகோளைத் தயைகூர்ந்து ஏற்று அருள வேண்டுகிறேன்,'' என்று பாஸ்கரன் கூற, அது கேட்டுப் பரமானந்தம் அடைந்த அப்சல்கான், ''நமது படையுடன், பிரதாப்கார் நகருக்குள் பவனி வருவோம். அங்கு சிவாஜி பணியட்டும்; பீஜபூர் ஆட்சியின்கீழ் வாழச் சம்மதிக்கும் சிவாஜிக்கு நாம் சுல்தானின் பிரதிநிதி என்ற முறையிலே பேட்டி தருகிறோம்'' என்றுகூற, பாஸ்கரன் பயந்து, தழதழத்த குரலில், ''ஒரு விண்ணப்பம்! சிவாஜி, சரணாகதி சம்பந்தமாகப் பேசுவதற்காகத் தங்களைத் தனியே சந்திக்க விரும்புகிறார். இங்கேயே வர எண்ணினார்...''என்று வலை வீசும் பேச்சைத் துவக்கினார். சதிக் கூட்டத் தலைவன், கோபிநாத், ''இங்கே இருக்கும் பெரும் படை முன்வர, அஞ்சுகிறான் உங்கள் அசகாயசூரன்! பிராமணரே! ஏன் மறைக்கிறீர்? வெட்கமோ!'' என்று கூறினார். அப்சல்கானின் ஆனந்தம்அளவுகடந்ததாகிவிட்டது. ''கோபிநாத்பண்டிட்ஜி! அவ்வளவு பயங்கொள்ளியா சிவாஜி?'' என்று கேட்டான் அப்சல். அந்தக் கேள்வியை எதிர்பார்த்துக்கொண்டிருந்த கோபி

நாத், முகஸ்துதியை வாரி வாரி வீசினான், அப்சல்கானின் யூகம் அழியுமளவு.

''இதிலென்ன ஆச்சரியம், சேனாதிபதி! அவன் உமது ஜெயங்களைப்பற்றிக் கேள்விப்படாமலா இருந்திருப்பான்? ஏதோ இதுவரையில், நாதியற்ற நகரங்களையும், நெஞ்சில் உறுதியற்ற கும்பலையும் தாக்கி, வெற்றி கண்டேன் என்று வீராப்பு பேசித் திரிந்தான். இன்று மகத்தானதோர் படையை நடத்தும், தீரபுருஷனாகிய அப்சல்கான் களத்திலே, சிம்மம்போல் நிற்கும் தலைவன் வந்திருக்கிறான் என்று தெரிந்ததும் நடுநடுங்கிப் போய்விட்டான். பீஜபூர் சமஸ்தானத்தின் பெருமையை அறியானா? தன் பக்கம், பீஜபூரின் திருஷ்டி படாதிருந்த வரையிலே தப்பிப் பிழைத்தான். இப்போது?''

இந்த முகஸ்துதி, அடியோடு அப்சலைக் கவிழ்த்து விட்டது.

''சரி! பயம் வேண்டாம் என்று சொல்! நாளை நாம் தனியாக, ஆயுதமின்றி வருகிறோம், சிவாஜியின் சரணாகதிக்கான சம்மதத்தைப் பெற'' என்று கிருஷ்ணாஜீ பாஸ்கருக்குக்கூறி அனுப்பிவிட்டு, ''இப்படிப்பட்ட பயங்காளியை நான் கண்டதே இல்லையே!'' என்று எண்ணி எண்ணிப் பூரித்தான்.

சதியாலோசனைத் திட்டத்தின்படியே சந்திப்பு நிகழ்ந்தது. போர் வீரர்களின் துணையின்றி, ஆயுதமுமின்றி, சிவாஜியைச் சந்திக்க அப்சல்கானை அழைத்து வந்தான் கோபிநாத். சிவாஜி, நேசத்தையும், சமரசப் பாசத்தையும் காட்டுவதுபோல, அப்சல்கானைத் தழுவினான். 'ஐயோ!' என்று அலறினான் அப்சல்கான். அவன் அடிவயிற்றிலே புகுந்தது சிவாஜியின் கரத்திலே மறைத்து வைக்கப்பட்டிருந்த புலி நகம்! சரணாகதியை ஏற்றுக்கொள்ள வந்த அப்சல்கான், வஞ்சகமாக வதைக்கப்பட்டான். இதற்குள், அப்சல்கானின் படை, புகக்கூடிய பாதை அடைக்கப்பட்டுவிட்டது. சிவாஜியின் படை, இனிப் போர் இல்லை என்று எண்ணி, ஆயத்தம்

ஏதும் செய்யாது, ஆனந்தத்திலே மூழ்கியிருந்த அப்சல்கானின் படை மீது பாய்ந்தது; அங்கேயும் படுகொலைதான்!! கோபிநாத் பண்டிட்ஜியும், கிருஷ்ணாஜீ பாஸ்கரும் சிவாஜியை, வீரனை, வஞ்சனையில் ஈடுபடச் செய்து, சதிச்செயல் புரியவைத்து மறைக்கமுடியாத பழியை மாவீரர் தலைவனுக்கு வாங்கித் தந்தனர். அப்சல்கானின் உயிரையும் போக்கினர். அப்சல்கானை சிவாஜி அக்ரமமாகக் கொன்ற வரலாற்றுச் சம்பவத்தையே மக்கள் அறிவர்; வரலாற்று ஆசிரியர் கூறுவர். ஆனால்,கோபிநாத் பண்டிட்,கிருஷ்ணாஜீ பாஸ்கர் என்பவர்களைப் பற்றிக் கூறார்! சரித்திரம் என்றால் மன்னர்கள் கதைதானே என்று மக்களும் எண்ணிக் கொண்டு, கோபிநாத், பாஸ்கர் போன்றவர்களைக் கண்டுபிடிக்க முயல்வதில்லை. ஆனால், இந்த உபகண்டத்து வரலாற்றிலே கோல்கொண்டவர்களைப் பற்றி அறிந்து கொள்வதைவிட, கோபிநாதர்களைப் பற்றித் தெரிந்து கொண்டால்தான், 'உட்பொருள் விளங்கும்; உண்மை துலங்கும். அப்சல்கானின் மரணம், புலிநகத்தால் என்று கூறுவதைவிட பூசுரனின் புன்னகையால் என்று கூறுவதே பொருந்தும்!

★

# 5
# வேலை போச்சு

அவர் எழுதிக் கொடுத்தார், 'விசாலாட்சி விவாகம்,' என்று. நான், 'விசாலாட்சி விவாதம்' என்று அச்சுக்கோர்த்தேன்! தூக்க வேளை, கொஞ்சம் துக்கமுங்கூடத்தான். எனவே, தவறுமேல் தவறாகிவிட்டது.

'சாமி, காவடியானந்தர்,' என்று தெளிவாகத்தான் அவர் எழுதினார்; நானோ, அதை,

'காமி சாவடியானந்தர்' என்று பிழையுடன் அச்சிட்டேன். அதுபோலவே,

காசுமாலை
காமாலை

*

மணி அரசு
பிணி அரசு

*

விசாலம்
விசாரம்

*

வேதம்
பேதம்

*

மொய்
பொய்

*

என்று பல பிழைகள் ஏற்பட்டுவிட்டன, எல் அஜாக்ரதை யினால்! துண்டு விஷயந்தான் இவ்வளவுக்கும். அதிலும், எங்கள் ஆசிரியர் மணி மணியாக எழுதுவார்—அதாவது, எழுத்துக் கோர்வையாக, அச்சுப் போலவே இருக்கும். விஷயம் இருக்கட்டும்; அதுதானா முக்கியம்! அவருக்குப் பக்கம் பக்கமாக எழுத வேண்டிய வேலை கிடையாது; சுருக்கி எழுதுவதுதான் சூட்சமம் என்பது அவருடைய இலட்சியம்! பத்திரிகையின் பக்கங்கள், பேனாவின் தயவினாலே அல்ல, காரியாலயக் கத்தரிக்கோலின் கருணையால் அழகாக இருக்கும்.

''தம்பி! இது ஒரு பிரபல திருமணம். அழகாக அச்சிட்டு, இந்த விலாசத்துக்கு ஐம்பது பிரதிகள் அனுப்பி வைக்கவேண்டும். தெரிகிறதா'' என்று கூறிக் தாளைக் கொடுத்தார். ''நாளை மறுநாள்வருகிறேன்''என்று துணை ஆசிரியருக்குக் கூறினார்; துரிதமாக வெளியே சென்றார். தீபாராதனைக்குக் கற்பூரம் சரியாகக் கிடைக்காது கஷ்டப் பட்ட பக்தர்களின் தூதுக்கோஷ்டி,அன்று கலெக்டர் பிரவுன் துரையைக் காணப் புறப்பட்டது. அவர் ஒரு கிராம வைத்தியசாலைத் திறப்பு விழாவுக்குச் சென்றிருந்தார். அந்தக் கிராமத்துக்குக் கிளம்பிற்று தூதுகோஷ்டி. எங்கள் ஆசிரியர், அந்தத் தூதுகோஷ்டிக்குத் தலைவர். பெயரும் பொருத்தந் தான்.

அனுமந்தராவ்—அவருடைய திருநாமம்! சில சமயம் வீட்டிலே சிரமப்படுவதுண்டு, தன் மனைவியைப் பெயரிட்டு அழைக்க. அம்மையாருக்குச் சீதாலட்சுமி என்று பெயர் இருந்தது! ஆமாம், இவ்வளவு கூறிய நான், பத்திரிகையின் பெயரைக் கூறவில்லையே; பாருங்கள், அவ்வளவு மறதி எனக்கு. ''வியாசர்'' எங்கள் பத்திரிகையின் பெயர்.

''வியாசர்'' பத்திரிகை ஆசிரியர் அனுமந்தராவ், தன் பாரியை சீதா லட்சுமியிடம் விடை பெற்றுக்கொண்டு, துணை ஆசிரியர் கருடாழ்வார் முதலியாரை நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பிலமர்த்தியதும், கிண்டி குதிரைப் பந்தயத்திலே அந்தக் கிழமை ஓடும் அசுவ இலட்சண விளக்கப்

புத்தகத்திலே அவர் ஈடுபட்டு, ஆசிரியர் தந்த செய்தியை நான் அவசரத்திலே, அச்சுப் பிழையுடன் செய்து கொடுத்த போது, ''ஏண்டா, தம்பி! (என்னை எல்லோரும் 'தம்பி, தம்பி' என்று கூப்பிடுகிறார்களே, இவன் சிறு பயலோ என்று சந்தேகிக்காதீர்கள். எனக்கு வயது 40. என் பெயர் தம்பி முதலியார்.) சரியாகத்தானே செய்தாய்?...'' என்று கேட்டு விட்டு, ஒருமுறை ஒப்புக்கு அதைப் பார்த்து ''சரி போடு!'' என்றார். மெஷின், அந்த அபத்தத்தை ஏற்க மறுக்குமா என்ன! அச்சுப் பிழை மட்டுமா, அது எவ்வளவோ கருத்துக் கோளாறுகளைத் தாங்கித் தாங்கி, உரம் பெற்றதாயிற்றே! அது மளமளவென்று, அடித்துத் தள்ளிவிட்டது. பொழுது பளபளவென விடிந்ததும், பத்திரிகையைப் பார்சல் செய்யும் வேலை மடமடவென்று நடந்தது.

இரண்டாம் நாள் இரவு, தடதடவென்று கதவைத் தட்டினான் ஆபீஸ் பையன். திறந்தேன்; திடுக்கிட்டேன். அவசர அழைப்பு ஆசிரியரிடமிருந்து—ஓடினேன், கிடுகிடு வென்று!

''தம்பி! தலையிலே கல்போட்டாயே!...'' என்றார் ஆசிரியர் அனுமந்தராவ். கருடாழ்வாரைக் காணோம். பத்திரிகைக்கு அவர் கொடுத்த தாளை எடுத்துவரச் சொன்னார். கொண்டு வந்தேன். படி என்றார்; படித்தேன். அது இது—

பிரபல திருமணம்.

பல சரக்குக் கடையின்றிப் பிரபஞ்சம் நிலைக்குமா? முடியாது! நமது ஊரிலே, பலசரக்குக் கடைகள் பல இருந்தாலும், பண்டரி விலாஸ் கடைக்கு ஈடாகுமா? ஆகாது! அந்தக் கடைக்கு முடிசூடா மன்னராக விளங்கும், முகுந்தராஜ முதலியாரின் மூத்த குமாரி, சௌபாக்யவதி விசாலட்சி அம்மாளின் விவாகம், விமரிசையாக இன்று காலை நடைபெற்றது. மணமகன் மணிஅரசு முதலியார், ஜெகஜோதியான வைரக்கடுக்கன்கள் அணிந்து காட்சி அளித்தார். ஸ்ரீமதி விசாலம் புதிய காசுமாலையுடன் காட்சிதந்தது. கண்

கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஸ்ரீமான் முதலியாரின், வைதிக சிரத்தையை அறிந்த பிராமண சிரேஷ்டர்கள், காலையிலே வேதம் ஓதினர்! இது புதிய முறையல்ல; பழைய ராஜாக்கள் காலத்திலே இதுவே சம்பிரதாயம்! மாங்கலிய தாரணம் முதலிய சர்வ சம்பிரதாயக் காரியங்களும் இனிது நிறைவேறிய பிறகு, உள்ளூர்—வெளியூர்ச் சீமான்கள் மொய் எழுதினர். மாலையிலே அருமையான சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. ஆனால் ஒரு விஷயம் இங்கு குறிப்பிட வேண்டி இருக்கிறது. சங்கீதம், சாஸ்திரோக்தமாக இல்லை. அது என்னமோ தமிழ் இசை என்று சிலர் கூறுகிறார்களே, அது வாம் அது. ஊர்வலம் நடைபெற்றது. ஊரெங்கும் இதே பேச்சு. இவ்வளவுக்கும் சிகரம் வைத்ததுபோல இருந்தது, காலையும் மாலையும் கலியாணத்துக்குச் சாமி காவடியானந்தர் விஜயம் செய்தது. அவர் நமது ஆசிரியர் அனுமந்தராவிடம் அன்யோன்யமாகப் பேசியது கண்டு, 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்று பலர் கூறினர். முகஸ்துதியில் பிரியமில்லாத நமது ஆசிரியர், அந்தப் புகழுரையைக் கேட்டும் கேட்காதவர் போலிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுதான் ஆசிரியர் தந்தது. இதிலேதான், விசாலம் விசாரமாகி, விவாகம் விவாதமாகி, சாமி காவடியானந்தர் காமி சாவடியானந்தராகி, காசுமாலை காமாலையாகி, மணி அரசு பிணி அரசாகி, வேதம் பேதம் என்றாகி, மொய் பொய் என்றாகி வெளிவந்தது. எல்லாம் அச்சுப்பிழை தான். ஆனால் ஆசிரியர் அனுமந்தராவ், ''தம்பி! என் வாழ்க்கையையே வதைத்துவிட்டாய்'' என்று போட்ட கூச்சல், உண்மையாகவே, நான் செய்த பிழை மிக மிகக் கொடுமையானது என்று உணர்த்திற்று. உரத்த குரலிலே கூறிவிட்டார். ''உன் கணக்குத் தீர்த்தாகி விட்டது. வேலைக்கு வேண்டாம். இனி போ வெளியே'' என்றார். வெளியே சென்றேன். வேறென்ன செய்ய முடியும்? ஒரு துண்டு விஷயத்தை இவ்வளவு பிழைகளுடன் வெளியிட்டால், அச்சுக் கோர்ப்பவனுக்கு அச்சகத்திலே அலுவல் கிடைக்கத்தான் செய்யாது. என்ன செய்வது! ஏக்கம் கொண்டேன். தூக்கம் வரவில்லை; போக்கிடமின்றித் தவித்தேன்.

வேலை இல்லை என்ற உடனே வேலாத்தா—என் மனைவிக்குக் குலதெய்வத்தின் பெயரையே வைத்துவிட்டார்கள்—கொண்ட கோபம் இருக்கிறதே, இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. ''ஒரு நாளைக்கு ஒரு வேளை, சோத்திலே தப்பித்தவறி ஒரு கல் இருந்துவிட்டா, என்னா கோபம் வருது உங்களுக்கு? இத்தனை காலமா அச்சாபீசு வேலையிலே இருக்கறீங்க. இவ்வளவு தப்புச் செய்யறீங்க. எவன் கொடுப்பான் வேலை?'' என்று பேசினாள். பேசினாள் என்று ஒப்புக்குச் சொல்றேன். அவ போட்ட கூச்சல் இருக்கே, வேலாத்தாளே (குலதெய்வம்) வந்தது போலிருந்தது. என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை. சே! குடும்பமும் வேண்டாம், இந்தக் குத்தல் குடைச்சலும் வேண்டாம். பேசாமே சன்யாசி ஆகிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து, வேகமாக வீட்டைவிட்டு வெளி ஏறினேன். நடந்து கொண்டே யோசித்தேன். வேலாத்தா போல ஊரிலே எத்தனையோ அம்மணிகள் இருப்பார்களே, அவர்களிடந்தானே போய் பிச்சை கேட்கணும். ''தடியனாட்டம் இருந்துகொண்டு, பிச்சை எடுக்க வந்துவிட்டாயா?'' என்று ஏசுவார்களே என்ற பயம் பிறந்தது. சரி, நிஜமாகவே சன்யாசி ஆக வேண்டியதில்லை; ஒரு நாளைக்காவது, வீட்டுக்குப் போகாமலிருப்போம்; வேலாத்தா, ''என்னமோ ஏதோ'' என்று அழட்டும் என்று எண்ணினேன். எங்கெங்கோ சுற்றிவிட்டு, இரவு பத்துமணி சுமாருக்கு, ஊர்க்கோடிச் சாவடியிலே போய்ப் படுத்தேன். அரைத் தூக்கம். அந்தச் சமயத்திலே, ''நமச்சிவாயம்'' என்று சத்தம் கேட்டது. சாவடிக்கு, சாமி காவடியானந்தர் வந்தார். நான் படுத்திருந்த மூலையிலிருந்து எழுந்திருக்கவுமில்லை; பேச்சுக் குரலும் கொடுக்கவுமில்லை. நல்ல வேளையாக அவர் என்னைப் பார்க்கவில்லை. பார்த்துவிட்டால் என்ன செய்வது என்ற திகில் எனக்கு. 'அடே பயலே! நீதானே என்னை, காமி சாவடியானந்தர் என்று அச்சடித்தது?' என்று கேட்டு, ஏதாவது மந்திரம் போட்டுவிட்டால் என் கதி என்ன ஆகும்? நானோ பிள்ளை குட்டிக்காரன்! வாய் திறவாமல் சுருட்டிப் படுத்துக் கொண்டிருந்தேன்.

''ஏன் சாமி!'' என்று வேறோர் குரலும் கேட்டது. நான், சாமியார், 'நமசிவாயம்' என்று சொன்னதும் ஆண்டவன் பெயரைச் சொல்கிறார் என்று நினைத்துக் கொண்டேன். அது ஒரு ஆசாமியினுடைய பெயர் என்று அப்போது தான் தெரிந்தது. அவனும் சாமியாரும் ஏதேதோ பேசி விட்டு, அந்தக் கலியாணப் பேச்சையே ஆரம்பித்து விட்டனர். எனக்குப் ''பகீர்'' என்றாகிவிட்டது. சரி, நம்மைத்தான் திட்டப் போகிறார்கள் என்ற நினைப்பிலே, அதற்குத் தகுந்தாற்போல, ''யாரு சாமி! பேப்பரிலே எழுதினவன் தாறுமாறாக?'' என்று வேறு நமசிவாயம் கேட்டுத் தொலைத்தான். சாமியார் சிரித்துவிட்டு, ''எழுதினவன் பேரில் தவறு இல்லை. அவனிடம் இருக்கிற கம்பாசிட்டர் ஒரு குருட்டுப் பயல் போலிருக்கு. அவன் அச்சுக் கோர்த்த போது, தப்பும் தவறுமாகச் செய்துவிட்டான்'' என்றார் சாமியார். ''சிரிக்கிறீரே சாமி, அந்தப் பயல் செய்த காரியத்துக்கு, என் எதிரே கிடைத்தானானா...'' என்றான் நமசிவாயம். 'ஐயோ! வேலாத்தாளின் கோபமே பரவாயில்லையே! அடிபட்டாலும், வசவு கேட்டாலும், நம்ம மனைவி தானே என்ற சமாதானமாவது இருக்கும். இந்தப் பயல் யாரோ, வழியே போகிறவன், இவனல்லவா 'கறுவுகிறான்' என்று தோன்றிற்று. என்ன செய்வது, இடபேதம்! பேசாமல் கிடந்தேன்.

சாமியார் என் பக்கம் பரிந்து பேசலானார்! ''அவன் செய்த தவறிலேகூட எவ்வளவோ உண்மை இருக்கிறது நமசிவாயம். உண்மையைச் சொல்லவேணுமானா, நான் காவடி கைங்கரியம் நடத்தி இந்த சாவடியைக் கட்டிச் சாமி காவடியானந்தர் என்று பெயரெடுத்தேன். அந்தக் கம்பாசிட்டர் கைதவறுதலாக, 'காமி சாவடியானந்தர்' என்று அச்சடித்துவிட்டான். அது ஒன்று தவிர, மற்றது, பெரும்பாலும் உண்மையேதான்!'' என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நமசிவாயத்துக்கு அப்படித்தானே இருந்திருக்கும். நான் பேச முடியாத நிலை. அவனுக்கென்ன பயம்! பேசினான். கோபமாகவே, ''வேடிக்கை பேசுகிறீர் சாமி

யாரே! அந்த முட்டாள், விசாலாட்சி விவாகம் என்பதை, விவாதம் என்று அச்சடித்திருக்கிறான். அவனுக்குப் பரிந்து பேசுகிறீர்களே!'' என்று கேட்டான். முட்டாளாம், நான்! என்ன செய்யலாம்! அவளும் அதையேதான் வேறே பாஷை யிலே சொன்னாள். ''உங்க புத்தி இருக்கே, உலக்கைக் கொழுந்து'' என்று சொன்னாள். கோபம் வந்தது எனக்கு. இவன என்னை முட்டாள் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறான், போறாத காலம்.

சாமியார் ''நமசிவாயம்! விவாகம் என்று அச்சடிப் பதை விவாதம் என்று அச்சு அடித்ததுதான் பொருத்தம். ஏனென்றால் இந்தக் கலியாணம், விசாலாட்சிக்குக் கொஞ் சம்கூட இஷ்டம் கிடையாது. அவள் தாயாரிடம் இதுபற்றி விவாதித்தாள். புத்தி சொல்லப் போன என்னிடம்கூட விவாதித்தாள். ஆகவே, அவன் விவாகம் என்பதை விவாதம் என்று அச்சடித்தது, உண்மை. அவனுடைய கை தவறுத லாலே வெளிவந்தது என்றுதான் அர்த்தம்,'' என்றார். 'ஏன் விசாலாட்சிக்கு இஷ்டம் இல்லை?' என்று கேட்டான் நமசிவாயம். சாமியார் கேட்டார், 'மாப்பிள்ளை பெயர் என்ன? என்று. 'மணி அரசு' என்றான் நமசிவாயம். ''அதைத் தானே அந்தப் பயல் ''பிணி அரசு''என்று அச்சடித்தான்?'' என்று கேட்டார் சாமியார். ''அதற்காகத்தான் அந்தப் பிர கஸ்பதியைப் பாராட்டுகிறீரா?'' என்று நமசிவாயம் கேட் டான். சாமியார் 'அவன் கைதவறி, மணி அரசு என்பதை பிணி அரசு என்று அச்சுக் கோர்த்தான். ஆனால் தெரிந்தே அப்படி அச்சடித்தாலும் தவறு இல்லை. ஏனென்றால் உண் மையிலேயே மாப்பிள்ளை நோயாளிதான். அவனுக்குக் காமாலை வியாதி' என்றார் சாமியார். நான் பூரித்துப் போனேன். ''நோயாளியை மணம் செய்துகொள்ளும் பெண் ணின் பெயர் விலாசம் என்று இருந்தால் என்ன, அவன் தவ றாக அச்சடித்தானே விசாரம் என்று,அதுதான் பொருத்தம்' என்று சாமியார் கூறினார். நமசிவாயத்தின் வாய் அடங்கி விட்டது. எனக்கோ துடிதுடிப்பு! எழுந்து போய்ச் சாமி யார் காலிலே விழவேண்டும் என்று. அடக்கிக் கொண்டு படுத்

திருந்தேன். ''யோசிக்கப் போனால் அந்தக் கம்பாசிட்டர் செய்தது ஒன்றுகூடத் தவறு கிடையாது. 'காசுமாலை மாப் பிள்ளை போட்டது. அவன் காமாலைக்காரன். ஆகவே காசு மாலை என்று அச்சிடாமல், காமாலை என்று அச்சிட்ட திலே எழுத்திலே பிழையே தவிர உண்மையிலே, பிழையல்ல. வேதம் என்பதை பேதம் என்று அச்சடித்தான். வேதம் உண்மையிலேயே, ஜாதி குலம் முதலிய பேதத்தை ஏற் படுத்தத் தோன்றியதே. அதுமட்டுமில்லை. அன்று வேதம் ஓதினார்களோ பார்ப்பனர்கள், அவர்கள் ஓதியது சரியான வேதமல்ல;ரொம்ப ரொம்பப் பேதம் இருந்தது. அந்த அரை குறை ஆசாமிகளின் வேதபாராயணத்திலே மொய் எழுதி னாரே, அதிலே பெரும்பகுதி பொய்தான். வெறும் கௌர வத்துக்காக, எந்தெந்த ஊரிலிருந்தோ,யாராரோ, ஐம்பதும் நூறும் மொய் அனுப்பினதாகப் பொய் சொன்னார். ஆகை யால், மொய் என்பதற்குப் பதில் பொய் என்று அச்சடித் ததும் சரியே!'' என்றார் சாமியார்.

நமசிவாயத்தின் கோபம், என் மீது இருந்தது போய் விட்டது; முகுந்தராஜ முதலியார் மீது பாய்ந்தது. ''பெண்ணை, ஒரு நோயாளிக்கா கலியாணம் செய்து கொடுத்தான்? பாவம்! அந்தப் பெண் வேண்டாமென்று மறுத்துமா அதன் தலையிலே அந்தக் காமாலைக்காரனைக் கட்டி வைத்தான்'' என்று நமசிவாயம் ஏசலானான். ''இப் படிப்பட்ட தவறுகள் நடைபெறுவதை, அனுமதிக்கிறோம்; ஆசீர்வாதம் செய்கிறோம்.அவர் இஷ்டம்என்றுகூறுகிறோம்; அதனதன் விதி என்று கூறுகிறோம். இரண்டு பேருடைய வாழ்க்கையை அந்த ஒரு ஆசாமி தன் இஷ்டத்துக்கு ஏற்ற படி வளைத்து விட்டான். அதைத் திருத்தவும் முடியாது; கண்டிப்பதும் கூடாது; பாவம்! அந்தக் கம்பாசிட்டர் என் னமோ கைதவறித் தப்பாக அச்சுக் கோர்த்துவிட்டான். அவனை நான் மடையன், குருடன் என்றெல்லாம் திட்டி னேன். விஷயத்தைப் பார்க்கப் போனா அவன் கைக்குத் தங்கத் தோடா அல்லவா போடணும்போல இருக்கு.'' என்று கூறினான் நமசிவாயம். எனக்கு ஆனந்தம்! அவன்

தங்கத் தோடாகூடப் போடத் தேவையில்லை, அவன் சொன்ன வார்த்தை, வைரத் தோடாபோல இருந்தது; என் மனது குளிர்ந்தது. பிறகு, வேறு ஏதோ தேவாரம், திருவாசகம் முதலிய சத் விஷயங்களைப் பேசிவிட்டு, நம சிவாயம் விடை பெற்றுக் கொண்டு போனான். எனக்கு, இனியாவது எழுந்திருந்து போய்ச் சாமீ காலிலே விழுந்து கும்பிடுவோமா என்ற எண்ணம் உண்டாயிற்று, ஆனால் ஒரு பயம் இருந்தது. நான் செய்த எல்லாத் தவறுகளுக்கும் சாமியாரே சமாதானம் சொல்லிவிட்டார்; ஆனால் நானோ சாமியாரையே காமீ சாவடியானந்தர் என்றல்லவா....

காமி சாவடியானந்தருக்கும் தூக்கம் வரவில்லை. படுத்துக் கொண்டே பாடிக் கொண்டிருந்தார். பன்னிரண்டு மணி சுமாருக்கு யாரோ வரும் சத்தம்!

''ஏது, பாட்டு பலே ஜோரா இருக்குதே'' என்று ஒரு குரல் கேட்டது. திடுக்கிட்டுப் போனேன். பெண் குரல்! பேசியது பச்சை! எனக்குத் தெரிந்தவள்!! பலசரக்குக் கடையைக் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்பவள். அவள் வருகிறாள், சாவடிக்கு நடுநிசியில்! காமீ சாவடியானந்தனே தான் இவன்! இதிலேகூட நான் அச்சடித்ததிலே என்ன தவறு? செச்சே! அதற்கு மேலே, அங்கே நடந்த பேச்சை நான் எப்படிச் சொல்ல முடியும். சாமியாராம்! காவடியானந்தராம்! சாமீ, சாவடியிலே ஆனந்தராக இருந்தார். தேவாரமா பாடினார்! தில்லானா பாடினார்! பச்சை, சாமியாரிடம் விபூதிப் பிரசாதமா கேட்டாள்? 'எடு, எடு! பணத்தை! ஏழு நாளா ஏச்சிக்கிட்டே வர்றியே' என்றாள். விபூதிப் பையிலே இருந்து கலகலவென்று ரூபாயைக் கொட்டினான் அந்தக் காமி. ஐந்து ரூபாயைக் கொடுத்தான் பச்சையிடம்.

''மீச்சத்தை இப்படிப் போடு சாமீ'' என்று கூறிக் கொண்டே நான் போய் நின்றேன் பக்கத்திலே. அலறிப் போனான் அந்த ஆண்டி. அவளும் அந்தைபோல விழித்தாள். சாமியாரை நான் பேச விடவில்லை. மகாயோக்யர் போல, நான் செய்த மற்ற தப்பெல்லாம் சரி என்று நம

சிவாயத்துக்குச் சொன்னயே, உன் பெயரை, சாமி காவடி யானந்தர் என்றா அச்சடிக்கணும்? காமி சாவடியானந்தர் தானே நீ?'' என்று கேட்டேன். ஆசாமி கைப்பிடியாக அகப் பட்ட பிறகு, பயமென்ன? பயம் போய்விடவே, புத்தியும் கொஞ்சம் தீட்சணியமாக வேலை செய்ய ஆரம்பித்தது. ''கை தவறி, மாற்றி மாற்றி அச்சடித்தேன் என்றுதானே சொன்னேன்? தவறிச் செய்ததில்லை. சகல விஷயமும் தெரிந்து தான் அச்சடித்தேன். மரியாதையா பணத்தைப் போடு'' என்றேன். என்னடா இது,கொள்ளை அல்லவா அடிக்கிறேன் என்று கோபம் உங்களுக்கு. இந்தக் கூத்திக் கள்ளன் சாமியார் வேஷத்திலே அடிச்ச கொள்ளையிலே, இது எந்த மூலை? பணத்தைக் கொடுத்தான்.விட்டேனா? சரி, எங்க அச்சாபீஸ் காரன் உனக்குச் சிநேகிதனாச்சே, அவனிடம் எப்படியாவது சொல்லி, மறுபடியும் நம்மை வேலையிலே சேர்த்துக் கொள் ளச் சொல்லணும். தெரியுதா?'' என்றேன்... 'சரி' என் றான் அழுகுரலில்.

இருட்டு, நடுநிசி, ஒரு பயமும் இல்லாமல், வீட்டுக்கு நடந்தேன். அந்த இரண்டு சனியன்களும் கொஞ்சம் தொலை வாகவே என் பின்னால் வந்தார்கள். வீட்டுக்குப் போனேன்; வேகமாகக் கதவைத் தட்டினேன். கொஞ்சம் அதிகாரக் குரலிலேயே, ''வேலத்தா! வேல்! வேலா! டீ, வேலாத்தா!'' என்று பல ரகத்திலே, பல சுருதியிலே கூப்பிட்டேன். எனக் கென்ன பயம்,எட்டு ரூபா இருக்கு—அந்தக் கொட்டை கட்டி கொடுத்த பணம். ''ஏது அதிகாரம், தெருவே தூக்குது'' என்று அர்ச்சனை செய்துகொண்டே கதவைத் திறந்தாள் வேலாத்தா. வழக்கமாகப் பயத்தைக் காட்டும் என் கண்க ளிலே அதிகாரப் பார்வையைக் கண்டாள். அவளாலே கோபத்தை அடக்க முடியவில்லை. ''வேலை போச்சின்னு கொஞ்சமானா கவலை இருக்குதா உனக்கு? விடிய விடிய ஊர் சுத்திவிட்டுவர்ரயே'' என்றாள். ''சீ, கழுதே! வேலை போச்சாம் வேலை! வேளைன்னு சொல்லுடி! நமக்கு இருந்த போறாத வேளை போச்சுன்னு சொல்லு'' என்று கூறிக் கொண்டே எட்டு ரூபாயைக் கொட்டினேன்! அவள் பார்த்த

பார்வை இருக்கே, என்னவென்று சொல்வேன்! நாளைக்கும் வேலைக்குப் போவேண்டி!'' என்றேன். 'ஏன்? எப்படி? ஏது?' என்று அவள் எத்தனையோ தடவை கேட்டாள். ரொம்ப காலத்துக்கு முன்னலே கொஞ்சுவாளே, 'ராசா இல்லை! கண்ணு இல்லை!' என்று, அந்தப் பழையதுகூடப் போட்டாள். கடைசியில், பூராவிஷயமும் சொன்னேன். அவளுக்கு வந்த சந்தோஷத்திலே—வெட்கமாகக்கூட இருக்கு சொல்ல—குமரி போலவே—என்னையும் புதுமாப்பிள்ளைக் கோலத்திலே இருப்பது போலவே எண்ணிக் கொண்டு, 'அட என் ராசா!'' என்று சொல்லி...ஒரு முத்தம்கூடக் கொடுத்தாள்.

★

# 6
# சொல்வதை எழுதேண்டா!

"டேய், மண்டு! சாட்டாச்சோன்னா? சரி, கொஞ்சம் உட்கார். நேக்குக் கொஞ்சம் கையை வலிக்கிறது. நான் சொல்லிண்டு வர்ரேன். சமத்தா எழுது, தெரியறதோ."

"ஆகட்டும் மாமா! லெடரா?"

"எதா இருந்தா என்னடா நோக்கு, சொல்வதை எழுதேண்டா!"

"ஆஹா! இதோ லெடர் பேப்பர் எடுத்துண்டு வர்ரேன்."

"பார்க்கணும் உன் சாமர்த்தியத்தை. எந்த லெட்டர் பேப்பர் எடுத்துண்டு வர்ரே."

"ஏன், 'ஜர்னலிஸ்டு' லெடர் பேப்பர்தான்."

"மண்டூன்னா சரியா இருக்கு. இப்ப திவான்பகதூர் தீர்த்தகிரி முதலியாருக்கு லெடர் எழுதணும். அதற்கு இந்த லெடர் பேப்பர் ஆகாது. போய், ராகவாச்சாரியார், பிரசிடெண்ட், ராமபக்தஜன சபான்னு இருக்கே, அந்த லெடர் பேப்பர் எடுத்துண்டு வாடா."

"அனுமார் பிளாக் போட்டிருக்கே!"

"அதுதாண்டா மண்டு! அதுதான்."

மாமனும் மருமானும் அப்படித்தான் வேடிக்கையாகப் பேசிக்கொள்வது வழக்கம். எங்கேயும் என்று சொல்லவில்லை. ராகவாச்சாரியார் 'ஆத்திலே' அப்படித்தான் வழக்கம்.

'ஏண்டி! இன்னக்கி நம்ம ருக்கு பலே பேஷா இருக்காளே! ஆத்துக்காரன் பார்த்தானானா, மயக்கமடிச்சி விழுந்நுடுவன்' என்று ராகவாச்சாரியார், தன் குமாரி ருக்குவைப் பற்றிச் சகதர்மிணி சாந்தாவிடம் பேசுவார். ருக்குவையேகூடக் கேட்பார். சில சமயம், ''என்னடி அது, தாடையைத் தடவிண்டு நிற்கறே, சுந்தரம் கடிச்சுட்டானோ? என்று. சுந்தரம், ருக்குவின் புருஷன். அவன், ''மாமனார் ஆடற விளையாட்டுப் போல நேக்குத் தெரியாதே'' என்று மாமனாரிடம் வேடிக்கையாகத்தான் பேசுவான்.

''மண்டு'' அதாவது, மற்றோர் மருமான். உறவின் முறை. பெண் கொடுத்து ஊர்ஜிதம் செய்யவில்லை, பெண் வேறே இல்லாததால். வேலை வாங்கித் தருவதாக, வரவழைத்திருந்தார் வரதனை. அவனுக்குத்தான் அந்த 'மண்டு' பட்டம்.

மண்டு, லெடர் பேப்பருடன் வந்து உட்கார்ந்தான், எழுதுவதற்கு. ஐயர் துவக்கினார்.

''ஸ்ரீமான் திவான்பகதூர் தீர்த்தகிரி முதலியாரவர்களுக்கு,'' என்று கூறினார். மண்டு மளமளவென்று எழுதி, ''களுக்கு'' என்று கூறினான். ''டே! ஸ்ரீராமஜெயம் போட்டாயா?'' என்று கேட்டார், ராகவாச்சாரியார். ''இல்லையே! சொல்லலையே!'' என்றான் மண்டு. ''போடா, இதைக்கூடச் சொல்வளாக்கும்'' என்றார். அதையும் எழுதிவிட்டு, மேலும் கூறச் சொன்னான். ''முதலியாரவர்களுக்குச் சர்வமங்களாணி இஷ்ட சித்திரஸ்து'' என்று கூறினார் ராகவாச்சாரியார். மண்டு எழுதிக் கொண்டிருக்கையில் ராகவாச்சாரி, ''அவன் இஷ்டம் என்ன தெரியுமோ? ஊர்த் தாலியை அறக்கணும. திவான்பகதூர் முதலியார் என்றால் தேசமே நடுங்கவேணும். கவர்னர் பங்களாவை விலைக்கு வாங்கணும். இப்படி எல்லாமிருக்கும்'' என்று வர்ணித்தார். எழுதுவதை நிறுத்திவிட்டு, மண்டு, ''ஏன் மாமா! அவ்வளவு பேராசைக்காரனா! அப்படிப்பட்டவனுக்கு சர்வாபிஷ்ட சித்திரஸ்து சொல்றேளே?'' என்று கேட்டான்.

''சொன்னதை நீ எழுதேண்டா? நான் சொன்னா அவன் ஆசை எல்லாம் சித்தி ஆகிவிடறதோ? அவனுக்கு அதனாலே இலாபம் இல்லை; அந்த வார்த்தையைச் சொல்றதாலே நமக்கு நஷ்டம் என்ன? சும்மா எழுதி அனுப்பினா, பய, பல்லிளிப்பன்! வேறே என்ன? எழுது!'' என்றார்; எழுதினான். ராகவாச்சாரி மேலும் சொல்ல ஆரம்பித்தார். ''நான் எவ்வளவு கஷ்டம் நேரிட்டாலும் பிறத்தியாரிடம் சொல்கிற வழக்கமே கிடையாது.''—இதைச் சொன்னதும், மண்டு எழுதவில்லை; சிரித்தான்.

''மாமா! என்ன போடு போடறீர்! வாசல் கூட்டுகிறவளிடமிருந்து வருகிறவா போகிறவா ஒவ்வொருவரோடும், கஷ்ட சமாசாரம் சொல்லத்தானே உமக்குப் பொழுது இருக்கு. பிறத்தியாரிடம் சொல்றதே கிடையாதுன்னு எழுதச் சொல்றீரே?'' என்று மாமாவைக் கேட்டான். மண்டு தானே அவன்! மாமாவின் பிரத்யேக முறைகள், மாமீ காதிலே வைர ஓலையாகவும், ருக்கு கழுத்திலே செயினாகவும், பெரிய மருமான் கையில் ரிஸ்ட்வாச்சாகவும் விளைந்ததை அவன் அறிவானா? மாமா, எப்படி ஒவ்வொரு விஷயத்தையும் அவனுக்கு விளக்க முடியும்? முறைத்துப் பார்த்தார். அவன் எழுதினான்.

''என் மகன் பஞ்சு, பி. ஏ. வகுப்பிலே படிக்கிறான் என்பது தங்களுக்குத் தெரியும்'' என்றார். பேசாமல் எழுதினான் மண்டு. ''ஏண்டா இதற்கு ஒண்ணும் கேட்கலையோ? 'எப்படிப் பஞ்சு என்று கூறலாம். அவன்தான், ஆர். பி. நாதன் என்று கை எழுத்துப் போடுகிறானே' எனக் கேட்பதுதானே'' என்று கேலி செய்தார், ராகவாச்சாரி. பஞ்சநாதன், மகன் பெயர். இவர் அதைத்தான் பஞ்சு எனறு குறிப்பிட்டார், அன்புச் சுருக்கமாக. நாகரிகச் சுருக்கமாக, பையன் ஆர். பி. நாதன் என்றுதான் எழுதுவது வழக்கம். விஷயம் அவ்வளவு பிரமாதமில்லை என்று, மண்டு தள்ளிவிட்டான். ''மேலே சொல்லுங்க மாமா!'' என்று கூறினான். ''பஞ்சுவுக்குக் காலேஜ் செலவுக்குத் தருவதற்கு, நான் படுகிற சிரமம் இருக்கே,அது சாட்சாத் ஸ்ரீராமச்சந்திர

மூர்த்திக்குத்தான் தெரியும்''என்றார் ராகவாச்சாரி. 'உம்' போட்டான் மண்டு, எழுதிக் கொண்டே. ''அதிலும் இந்த மாதம், ராமபக்த ஜனசபா வருஷாப்திக்காகச் செலவு ஏராள மாகப் பிடிச்சுவிட்டது'' என்றார். எழுதினான். அந்த வருஷ விழா சாக்கிலே வாங்கின திராட்சையும், பாதாமும், முந் திரி பருப்பும், வேட்டியும் வெள்ளிவட்டிலும், வேறு பலப்பல சாமான்களும், வீட்டிலே எங்கெங்கு உள்ளன என்பது மண்டு வுக்குத் தெரியும். தெரிந்து என்ன செய்வது? ராகவாச்சாரி சொல்லுகிறபடி எழுதத்தானே வேண்டும்?

''ஆகையாலே, என் மீது ரொம்பத் தயவு வைத்து, பையனிடம் ஒரு ஐம்பது ரூபாய் தரவேணும்'' என்றார். ''ஐம்பதா?'' என்று ஒரு முறை கேட்டுக் கொண்டான் மண்டு. ஏனெனில், அவனுக்குச் சந்தேகம்,பஞ்சநாதனுக்குப் பணம் தேவையா என்பதிலேயே. ''ரேடியோ'' நாடகத் திலே நடித்ததற்காக, பஞ்சநாதனுக்குக் கிடைத்த இருபது ரூபாயைக்கூட அவன் அப்பாவுக்கு மணியார்டர் செய்திருந் தான்.அந்தச் சந்தோஷத்திலே,பகவானுக்கு அக்கார வடசல் கூடச் செய்தார்கள்; அப்படி இருக்க, ஐம்பது ரூபாய் எதற் காகப் பஞ்சுக்கு என்று சந்தேகம். 'ஆமாம், ஐம்பதுதான் முட்டாளே! அவ்வளவு பெரிய ஆசாமியிடம் ஐந்து பத்துத் தான் கேழ்ப்பாளோ? நாமென்ன, அவன் ஆத்திலே வண்டி ஓட்டறவாளா?'' என்று விளக்கம் உரைத்தார் ராகவாச் சாரி. ''இந்த ஐம்பது இந்தச் சமயம் எனக்கு ஐந்நா றுக்குச் சமானம்'' என்று கூறினார் ராகவாச்சாரி. மண்டு வுக்கு இதுவும் புரியவில்லை. ராகவாச்சாரியாரின் அண்ணன் உள்ளூர்ப் புரோகிதர். அவர், எந்த வீட்டில் எவ்வளவு கொடுத்தாலும், கொடுத்தது கொஞ்சமாக இருந்தாலும், அதையே அதிகமாக எண்ணிக் கொள்ள வேண்டும் என்று கூறச் செய்பவர். ராகவாச்சாரியார், புதிய முறைப் புரோகி தர்தானே?

''தங்களுடைய தர்ம சிந்தனையையும், தயாள குணத் தையும்...'' என்று சொன்னார் ராகவாச்சாரி. எழுதிவிட் டான் மண்டு. வாசகத்தை முடிக்காமல் யோசிக்கலானார்

ராகவாச்சாரி. ''ஏன் மாமா, தயாள குணத்தையும் எழுதி விட்டேன்'' என்றான் மண்டு. ''இரடா! ஸ்துதி எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. அதிலும், அந்தப் பயலுக்கு உச்சி குளிரும், தர்ம சிந்தனை, தயாளகுணம், போதாது; இன்னும் ஏதாவது சேர்க்கணும்; என்ன போடலாம், சொல்லேன் நீதான்'' என்று மண்டு எவயே கேட்டார். ''பிராமண பக்தின்னு போடுவமா?'' னென்று யோசனை சொன்னான் மண்டு. ''பித்துக்குளி! அந்த வார்த்தையைப் போடவே படாது. இப்போ பிராமண பக்தின்னாலே,கேலி பேசறவா ஊரெல்லாம் அதிகமாகிவிட்ட காலம். இவன் கூடத்தான், ஏதோ நமக்குச் சமயா சமயத் திலே ஒத்தாசை செய்கிறானே தவிர, மத்தவாளிடம் பேசற போது ''இந்தப் பார்ப்பாரப் பயலுக'' என்றுதான் நம்ம சமூகத்தையே வைகிற வழக்கம்! ஒரு தடவை, 'அவன் திமி ரைப் பார்டா, என் எதிரிலேயே வைதான்' என்று திவான் பகதூரின் குணத்தை விளக்கினார் ராகவாச்சாரி. ''உம்ம எதிரிலேயா? சும்மாவா இருந்தீர் மாமா?'' என்று கேட் டான் மண்டு. ''சும்மா இராமே அவனிடம் சண்டைக்கு நிற்பாளா? காரியம் பெரிசா? வீரியம் பெரிசா?நான் பேசாமே கேட்டுண்டுதான் இருந்தேன். அவனுக்கே பிறகு, நான் இருக் கிறேனே ஒரு சமயம் கோபிப்பேனோன்னு சந்தேகம்.உடனே என்னைப் பார்த்தான். சிரிச்சுண்டே, ''ஏன் சாமீ! நம்ம சமூகத்தைக் கொறை பேசறானே இவன்னு கோவமா?'' என்று கேட்டான். ''அதெல்லாம் இல்லை, முதலியார் வாள்! லோகாச்சாரப்படிதானே சொன்னேள்'' என்று ஒரு போடு போட்டேன். பயலுக்குப் பிரமாதமான திருப்தி. ''உங்க விஷயம் தனி, சாமீ, உங்களைப் போலவே குண மும், மனமும் உள்ள பிராமணாளைக் குறை சொல்லலே; மத்ததுகளைத்தான் திட்டினேன்'' என்று சமாதானம் பேசி னான். வழக்கமாகத் தருவதைவிட அன்று ஒரு பத்து ரூபாய் அதிகமாகத் தந்தான். அதாவது, நம்ம நரசிம்மாச்சாரியார் இங்கே ''இராமாயணம்'' படித்தாரே, அந்தப் பட்டாபி ஷேகச் செலவுக்கு. அப்படிப்பட்டவன் அந்தத் திவான்பகதூர் என்று கூறினார் ராகவாச்சாரி. மேலும் சிறிது யோசனைக்

குப் பிறகு, 'தரும சிந்தனை, தயாள குணத்துடன், பகவத் கடாட்சம் பெற்ற' என்ற பதத்தைச் சேர்த்தார். வாசகத்தைப் பூர்த்தி செய்ய ''பகவத் கடாட்சம் பெற்ற தங்களைப் போன்றவாளுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை'' என்று கூறினார். கடிதம் முடிந்தது. மண்டு சோம்பல் முறித்தான்.

ராகவாச்சாரி, ''கையோடுகையா இன்னும் ஒரு லெட்டர் எழுதிவிடு, பஞ்சுவுக்கு'' என்றார். மண்டு, எழுத உட்கார்ந்தான். ''ஜர்னலிஸ்டு லெட்டர் பேப்பர் எடுடா'' என்றார். ''சிரஞ்சீவி பஞ்சநாதனுக்கு, ஆசீர்வாதம். இன்று இதே தபாலில், திவான்பகதூர் தீர்த்தகிரி முதலிக்கு ஒரு லட்டர் எழுதி இருக்கேன், உனக்கு அவசரமாக ஐம்பது ரூபாய் தரும்படி! தருவான். அதை வாங்கிக் கொண்டு, உனக்கு ஐந்தோ பத்தோ செலவுக்குத் தேவையானால் எடுத்துக் கொண்டு, மீதிப் பணத்துக்கு, ஆறு கெஜத்தில் ஆரஞ்சு கலரில், பெங்கால் சில்க் சேலை விற்கறதாமே சைனாபஜாரில், அதை உன் அக்காவுக்காக உடனே வாங்கி அனுப்பவும். அடுத்த வியாழக் கிழமை இங்கே ஜில்லா கலெக்டர் வருகிறார். என்னமோ, சைன்யத்துக்கு நிதி திரட்டவாம். அதிலே நம்ம ருக்கு, எதிராத்து ராஜம், நம்ம கோடிவீடு செவிட்டுச் சீமாவின் பார்யா இருக்காளே சண்பகம், இவாளெல்லாம், பெங்கால் டான்ஸ் ஆடப்போறாளாம். ஆனதாலே, புடவை அவசரம். தீர்த்தகிரி முதலி கொஞ்சம் முன்கோபி. வள்ளுன்னு விழுவன். சட்டை செய்யாமே, கொஞ்ச நேரம் இருந்தா, பணத்தைத் தந்துவிடுவன். பக்குவமாகப் பேசணும் அவனிடம். முகஸ்துதியிலே ரொம்பப் பிரியம். பெரிய கர்மி. இருந்தாலும், நம்மிடம் பணம் தருவதற்கு மறுக்க மாட்டான். அவன்தான் நம்ம ராம பக்த ஜன சபாவுக்கு போஷகன். திவான்பகதூர் பட்டம், அவனுக்குக் கிடைச்சதுக்கே, அதுதான் காரணம்னு சொல்லி வைச்சிருக்கேன். சமயம் வாய்ச்சா நீயும் சொல்லு. எப்படியும் பணத்தை வாங்கிவிடு. அசடாட்டம் இருந்துவிடாதே.''

இது மகனுக்குத் தகப்பனார் அனுப்பும் கடிதம். இதனைச் சிரமமின்றி மண்டு எழுதிவிட்டான், குறுக்குக் கேள்

வியே கேட்காமல். ஏனென்றால் ராகவாச்சாரியாரின் ''முறை''யைப் புரிந்து கொண்டான்.

''அடடே! மறந்துவிட்டேன். இன்னும் ஒரு வரி சேர்க்கணும் பஞ்சு லெடரில்'' என்று சொன்னார் ராகவாச்சாரி.

''சொல்லுமே, இடம் இருக்கு'' என்றான் மண்டு.

''தீர்த்தகிரி வீட்டுக்குப் போகும்போது, கொஞ்சம் உலர்ந்த உதிரி புஷ்பமும், மஞ்சத்தூளும் ஒரு காகிதப் பொட்டலத்தில் மடித்து எடுத்துக் கொண்டுபோய், அப்பா ஊரிலிருந்து அனுப்பினார் என்று கொடு'' என்று கூறிக் கடிதத்தைப் பூர்த்தி செய்தார்

**ரா**கவாச்சாரியாரின் தபால்கள் பயணப்பட்டன. பெங்கால் சில்க் சேலையைப் பற்றிய நினைப்புடன் ருக்கு, நடை பழக ஆரம்பித்தாள். அதுவே ஒரு புது தினுசு டான்சாக இருந்தது. தபால்கள் போய்ச் சேர்ந்தன. ஆனால் முதலியாருக்குச் சேரவேண்டிய கடிதம் பஞ்சுவுக்கும், பஞ்சுவுக்குச் சேர வேண்டிய கடிதம் முதலியாருக்கும் போய்ச் சேர்ந்தன. பெங்கால் சில்க்கா கிடைக்கும்? திவான் பகதூர் தீர்த்தகிரி முதலியார், ராகவாச்சாரியாரை, ''அயோக்யன்! நன்றி கெட்டவன்! நயவஞ்சகன்! அவனை என்ன செய்கிறேன் பார்'' என்று ஏசி, பஞ்சுவையும் உதைப்பதாக மிரட்டியதையும் பற்றி விரிவாக எழுதி, முதலியார் விலாசமிட்ட கவரில் பஞ்சுவுக்கு எழுதிய கடிதத்தையும், பஞ்சுவுக்கு அனுப்பிய கவரில் முதலியாருக்கு எழுதிய கடிதத்தையும், மண்டுகை தவறி வைத்து அனுப்பிவிட்டதால் நேரிட்ட விபரீதத்தையும் விளக்கி, பஞ்சு, தகப்பனாருக்கு விரிவாகக் கடிதம் எழுதின பிறகே, மண்டுவால் வந்த ஆபத்தை ராகவாச்சாரி உணர்ந்து சோகித்தார்.

''சொன்னதைத்தானே எழுதினேன்'' என்று மண்டு முணுமுணுத்தான். தலையில் அடித்துக்கொண்ட ராகவாச்சாரி, ''நீ இல்லைடா மண்டு. நான் மண்டு. உன்னைக் கொண்டு இந்தக்காரியத்தில் இறங்கினேனே என்னைச்சொல்லணும்'' என்றார். கொஞ்ச நேரம் யோசனையில் ஆழ்ந்துவிட்டு, ''டே, மண்டு! வா! உன்னை விட்டாலும் வேறு கதி

இல்லை எனக்கு. போய் ஜர்னலிஸ்டு லெடர் பேப்பர் எடுத்துவா'' என்று கூப்பிட்டுச் சோகம் கப்பிய குரலிலே, ராகவாச்சாரியார் சொன்னார். மௌனமாக மண்டு எழுதினான்.

ராம பக்த ஜன சபா

''இவ்வூர் ஸ்ரீராம பக்தஜன சபாவின் போஷகராக இருந்து வந்த திவான் பகதூர் தீர்த்தகிரி முதலியார், ஆச்சார விரோதமாக நடந்து வருவதாக, மேற்படி சபா தலைவர் ஸ்ரீமான் ராகவாச்சாரியார் அவர்களுக்கு, மெம்பர்கள் புகார் செய்து கொண்டதன் பேரில், தலைவர் விஷயத்தைப் பரிசிலனை செய்து புகாருக்கு ஆதாரமிருப்பது தெரியவந்ததால், மேற்படி சபாவின் போஷகர் ஸ்தானத்திலிருந்து, மேற்படி தீர்த்தகிரி முதலியாரை நீக்கிவிட்டார். அன்னார் மீது சாட்டப்பட்ட பல குற்றச் சாட்டுகளிலே முக்கியமானது, அவர் ஒரு பிராமண விதந்துவிடம் முறை தவறி நடந்து கொண்டிருக்கிறார் என்பதாகும்.''

''யாருக்கு மாமா அனுப்ப? தெளிவாகச் சொல்லிவிடும்'' என்று பயந்து கேட்டான் மண்டு. ''இது ஒரு பத்து காபி எடுத்து, மித்திரன், இந்து, விகடன், மணி போன்ற சகல பத்திரிகைகளுக்கும் அனுப்பிவிடு,'' என்று உத்தரவிட்டார். மண்டு, அதை நிறைவேற்றினான். பிறகு, மீண்டும் பயந்த குரலில் ராகவாச்சாரியாரை, ''மாமா! கோவிக்காமே, இதை மட்டும் சொல்லிவிடும். அந்தப் பிராமண விதந்து யார்?'' என்று கேட்டான். ''நம்ம கமலிதான்'' என்றார் ராகவாச்சாரியார். கமலி, அவருடைய சகதர்மிணிக்கு ஒன்றுவிட்ட தங்கை.

★

# 7
# தேடியது வக்கீலை

''பலமான அடி! இரத்தம் வெள்ளம்போல வந்தது, டாக்டர்! கொஞ்சம் அவசரமாக வரவேண்டும். ஆசாமி மூர்ச்சையாகி விட்டிருக்கிறான்.''

''ஏன் சார்! அடிபட்டது யாருக்கு?''

''இந்த ஆளுக்கு.''

''இல்லை, நீ போடுகிற கூச்சலைப் பார்த்தால், உனக்குத்தான் அடிபட்டது. அதனாலேதான் அலறுகிறாய் என்று நினைத்தேன். இங்கிதமே தெரிவதில்லை. வேறு எந்த இடத்திலே வேண்டுமானாலும் கூவலாம்; கொக்கரிக்கலாம். டாக்டர்கள் இருக்கும் இடத்திலே நிசப்தம் இருக்க வேண்டும், தெரிகிறதா?''

''சரிதான், சார்!''

டாக்டர், நர்சுக்குச் சாவதானமாகச் சில விஷயங்கள்—வைத்திய சம்பந்தமாகத்தான் கூறிவிட்டு, பிறகு வந்தார். அடிபட்ட ஆசாமி, பலகைமீது படுத்துக் கிடந்தான். சட்டை பூராவும் இரத்தமயம். பக்கத்திலே நின்று கொண்டிருந்தான், டாக்டரை அவசரப்படுத்தியவன்.

''என்ன இது?''...என்று கேட்டார் டாக்டர். யாரோ போலீஸ் அதிகாரி பேசுவதுபோல இருந்தது, அவருடைய குரல், பாவனை, பார்வை!

''இவன் என் நண்பன். எக்கச்சக்கமாக ஒரு இடத்தில் அகப்பட்டுக் கொண்டான்; இப்படி அடித்துவிட்டார்கள்.''

''போலீசுக்கு அல்லவா போக வேண்டும்? அங்கே, சென்று, அடிபட்டவிதம், அடித்த ஆளின் பெயர், இடம் இவைகளைக் கூறிவிட்டு வந்தால், பிறகு அவர்களே என்னை அழைப்பார்கள்.''

''போலீசுக்குப் போவதற்கில்லை.''

''ஏன்? குடித்துவிட்டு ஆடினானா? கூத்தி வீட்டில் அடிபட்டவனா? அல்லது திருடி உதைபட்டவனா? போலீசுக்குத் தெரியக்கூடாத விதத்திலே அடிபட்ட ''மர்மம்'' என்ன?''

''ஐயயோ! நீங்கள் வீணாகவெல்லாம் சந்தேகப்படுகிறீர்களே! அப்படி ஒன்றுமில்லை. இவன், தன்னுடைய உறவினரிடம் அடிபட்டான். அதைப் போலீசுக்குத் தெரிவிப்பதற்கில்லை என்றேன். வேறொன்றுமில்லை.''

இந்தப் பேச்சுக்கிடையிலேயே, டாக்டரின் திட்டப்படி, கம்பவுண்டர், அடிபட்ட இடத்தைச் சுத்தம் செய்து, மருந்து பூசி, கட்டுக் கட்டிவிட்டான். அடிபட்டவனின் கண்கள் கொஞ்சம் திறந்தன; மீண்டும் மூடிக் கொண்டன. டாக்டர், ஒரு முழுங்கு பாலை, அவன் வாயில் கொட்டச் சொன்னார். அந்தச் சடங்கும் முடிந்தது. பிறகு, கம்பவுண்டர் 'பில்'' தயாரிக்கலானார்.

''பெயர்?''

''என் பெயரா?''

''இல்லைய்யா, இவன் பெயர்?''

''இவன் பெயர் இருதயநாதன்!''

''விலாசம்?''

''தற்போது, என் வீட்டு விலாசந்தான். 18—வது பக்கிரிப்பிள்ளை சந்து.''

''உன் பெயர்?''

''எம்பெருமான் பிள்ளை.''

பில் தயாரிக்கப்பட்டது. பணமும் தந்துவிட்டார். பிறகு, பணிவுடன் டாக்டரிடம், எம்பெருமான் பிள்ளை ஒரு விஷயம் கூறினார்.

''இன்று இரவு, இங்கேயே இருக்க வேண்டும். வேறே இடத்திலே சௌகரியம் இல்லை. என் வீட்டிலே ஒரு கலியாணக் கூட்டம் வந்திருக்கிறது'' என்றார். டாக்டர் அதற்கான 'பில்' தயாரிக்கச் சொல்லிவிட்டு, நோயாளிக்கு வேண்டியவைகளைக் கவனித்துக் கொள்ளும்படி கம்பவுண்டருக்குக் கட்டளையிட்டுவிட்டு, கார் ஏறி, பங்களா சென்றார். ஏன் அடிபட்டான்? எப்படி அடிபட்டான்? என்பது பற்றி மேலாள் தகவலும் கேட்கவில்லை. அடி பலம் அல்லது சாமான்யம் என்ற தகவலும் தரவில்லை. இதுபோல எத்தனையோ, கேசுகளைக் கண்டவர், இதிலே அவர் திடுக்கிடவோ ஆச்சரியமோ படுவாரா?

படுக்கையில் புரண்டபடி இருதயநாதன் பிதற்ற ஆரம்பித்தான். எம்பெருமான், ''என்னப்பா இருதயம்! ரொம்ப வலியா?'' என்று கனிவுடன் கேட்டான். ''பால் வேண்டுமா? பழம் வேண்டுமா?'' என்று கேட்டான். இருதயநாதனோ, கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை; ஒன்றுக்கொன்று சம்பந்தமற்ற வார்த்தைகளைக் கூறிக் கொண்டும், மிரட்சியுடன் பார்த்துக் கொண்டும் இருந்தான். கம்பவுண்டரோ ''காலையிலே எல்லாம் சரியாகப் போகும்'' என்ற பாடத்தையே திருப்பித் திருப்பிச் சொன்னான்.

இரவு மணி பனிரண்டுக்கு, இருதயநாதன், கொஞ்சம் பயமாகப் பிதற்றினான். எழுந்தோடிப்போய், ''என்னப்பா இருதயம்'' என்று எம்பெருமான் அன்புடன் கேட்டான். தன்னுடன் பேசுவது எம்பெருமான் என்றுகூட இருதயநாதனால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

''நான் இப்போது எங்கே இருக்கிறேன்?'' என்று கேட்டான்.

''டாக்டர் வீட்டிலே அப்பா!'' என்று எம்பெருமான் பதிலளித்தான்.

''டாக்டர் வீட்டிலா? வக்கீல் வீடல்லவா இது?'' என்று கேட்டான் இருதயநாதன்.

கம்பவுண்டர் அப்போதுதான் கொஞ்சம் பயந்து, ''ஏன் சார்! இந்த ஆசாமிக்குப் பைத்தியமோ?'' என்று கேட்டான் எம்பெருமானை. ''இல்லையே, சார்! அடிபட்ட அதிர்ச்சியிலே ஒரு சமயம் மூளை...'' என்று எம்பெருமான் கலக்கத்தோடு கூறினான். ''இருக்கலாம்! அப்படியும் சில கேஸ் உண்டு!'' என்றான் கம்பவுண்டர்.

''இதைப் போன்ற கேஸ், நீங்கள் கேள்விப்பட்டே இருக்க மாட்டீர்கள் சார். எந்த வக்கீலும கேள்விப்பட்டிருக்க மாட்டார் சார்! இந்தக் கேசை மட்டும் நீங்கள் ஜெயித்துக் கொடுத்தால், ஜகம் புகழும் சார், உங்களை'' என்று இருதயநாதன், உரத்த குரலிலேயே கூறலானான்.

''என்ன சார் இது! வக்கீல், கேஸ் என்று உளறுகிறானே'' என்று கம்பவுண்டர் கேட்டார். எம்பெருமான் இருதயநாதனைச் சாந்தப்படுத்திப் படுக்க வைத்துவிட்டுக் கம்பவுண்டரிடம், ''இவன் வக்கீல் தேடி அலைந்துதான், இந்த வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டான். தேடி வந்தது வக்கீலை; அடைந்ததோ டாக்டர் வீட்டை'' என்றான். கம்பவுண்டருக்குச் சந்தேகம் அதிகரித்தது. 'ஏதடா! இவனும் என்னென்னமோ உளறுகிறானே' என்று பயந்தார். அதைச் சூட்சமமாகத் தெரிந்து கொண்ட எம்பெருமான், புன்னகை செய்து, ''கம்பவுண்டர் சார்! நானும் பைத்தியக்காரனல்ல. என் நண்பனும் பித்தனல்ல. உண்மையில் நடந்ததைத்தான் சொன்னேன். இன்று காலை முதல், வக்கீலைத் தேடித் தேடித்தான் அலைந்தான் என் நண்பன். அவனுக்கு உதவியாக நானும் சென்றேன். வக்கில் தேடிய பலன், மண்டையில் அடி, மயக்கம் என்று ஆயிற்று. அந்தக் கதையைச் சொல்கிறேன் கேளும்'' என்று கூறினான்.

''ஒருநாள் மாலை. நான் வேலை பார்த்துவரும் வைரக் கம்பெனிச் சொந்தக்காரர் சொக்கலிங்க செட்டியார், தமது அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, நான், கடை

விஷயமாக ஒரு முக்கியமான தகவலை விசாரிக்க அங்கே சென்றேன். செட்டியார் அறைக்குள்ளே பேச்சுச் சத்தம் கேட்கவே, வெளியே நின்றேன். செட்டியார் மிகக் கோபத் துடன் பேசிக் கொண்டிருந்தார்.

''முடியுமா? முடியாதா?''

''முடியவே முடியாது!''

''நிச்சயமாக முடியாதா?''

''யாரடா அவன்! சுத்த பண்ணாடையாக இருக்கிறே! என் மகளை ஏதாவது ஒரு பாழுங் கிணற்றிலே பிடித்துத் தள்ளினாலும் தள்ளிவிடுவேனே தவிர உனக்குத் தரமுடி யாது.''

பெண் தரமுடியாது என்று கோபமாகப் பேசினார் செட்டியார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! ஏனெனில், செட்டியாருக்குப் பெண்ணே கிடையாது.

''ஆச்சரியமாக இருக்கிறதே'' என்று கூறினான் கம்பவுண்டர்.

''என் வாழ்நாளிலேயே நான் அதுபோன்ற ஆச்சரி யத்தை அடைந்ததில்லை. செட்டியாருக்கு ஒரே மகன்; பெண் கிடையாது. அவருக்குத் தாசி சினேகம் எதுவும் கிடையாது. ரொம்பக் கர்நாடக பேர்வழி, பக்தர். ஆகவே அவர் யாரிடமோ, ''என் பெண்ணை உனக்குத் தரவே முடி யாது''என்று கூறுவது கேட்டால், எனக்கு எப்படி இருக்கும்? கதவு திறக்கும் சத்தம் கேட்டது; நான் விரைவில் மறைந்து கொண்டேன், ஒரு புறமாக. அறைக்கு உள்ளே இருந்து, இருதயநாதன் வந்தான்—அன்றுதான் நான் இவனை முதன் முறையாகப் பார்த்தது. என்னை அவன் பார்க்கவில்லை. கோபமாக வெளியே போய்விட்டான். நான் கொஞ்ச நேரத் துக்குப் பிறகு செட்டியாரிடம் பேசிவிட்டு, வழக்கப்படி வீட்டுக்குப் போனேன். உள்ளே தாழ்வாரத்திலே, இருதய நாதன் உட்கார்ந்து கொண்டிருந்தான்!''

''அடடே! ஆச்சரியம் வளருகிறதே'' என்றான் கம்பவுண்டர்.

''முடியவில்லை ஆச்சரியம்! கேளுங்கள், மற்ற விஷயத்தை. யார்? பெயர் என்ன? எதற்காக வந்தாய்? எந்த ஊர்?'' என்று கேள்விமேல் கேள்வி பூட்டினேன். அவன் செட்டியாரிடம் பேசிக் கொண்டிருந்தது எனக்குத் தெரியுமென்றே நான் காட்டிக் கொள்ளவில்லை.''

''உங்கள் பெயர்தானே எம்பெருமான் பிள்ளை?'' என்று என்னைக் கேட்டான் அவன். 'ஆமாம்!' என்றேன். ''வைர வியாபாரி சொக்கலிங்கம் செட்டியார் கடையிலே கணக்கு எழுதுபவர் நீங்கள்தானே?'' என்றான். ''ஆமாம்'' என்றேன்;''உங்களால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும்'' என்றான். ''முடிந்தால் செய்கிறேன்; முதலிலே நீங்கள் யார், என்ன விசேஷம், இவைகளைக் கூறுங்கள்'' என்று நான் கேட்டேன். ''என் பெயர் இருதயநாதன். இருப்பிடம் திருநெல்வேலி அருகே ஒரு கிராமம்'' என்றான். ''சரி! என்னால் என்ன ஆகவேண்டும்?'' என்று கேட்டேன். அவன் என்னிடம் ஏதும் கூறுவதற்குள், மற்றொரு கேள்வியும் கேட்டுவிட்டேன். ''இன்று செட்டியாரிடம் ரொம்பக் கோபமாகப் பேசிக் கொண்டிருந்தீரே?''என்றேன்.''அவர் சொல்லவில்லை; நான் தற்செயலாகக் கேள்விப்பட்டேன்'' என்று கூறி அவன் ஆச்சரியத்தைத் தணிய வைத்தேன்.

''நான் கூறப்போவது கேட்டு ஆச்சரியத்தால் திடுக்கிட வேண்டாம்'' என்று அட்டவணை போட்டான், இருதயநாதன். ''கதை இருக்கட்டும். முதலிலே ஒரு விஷயம் கூறிவிடு. செட்டியாருக்குப் பெண் ஏது?'' என்று நான கேட்டேன். கோபமும் வெறுப்பும் வெளிப்படச் சிரித்தான் இருதயநாதன்.

''சொக்கலிங்கம் செட்டியாருக்குப் பெண் கிடையாது; ஒரே ஒரு மகன்தானே இருக்கிறான்'' என்றான்.

''நீ பெண் கொடு என்று கேட்டாய். அவர் என் பெண்ணைக் கிணற்றிலே தள்ளினாலும் தள்ளுவேன்; உனக்குத் தரவே மாட்டேன் என்றும் சொன்னாரே!'' என்று கேட்டேன். ''நான் சொக்கலிங்கம் செட்டியாரைப் பெண் கேட்கவில்லையே; சொரூபானந்தஸ்வாமியைக் கேட்டேன்!'' என்று அவன் சொன்னான். நான் மிரண்டேன், புரியாமல். இருதயநாதன், ''புரியாது உங்களுக்கு. உங்கள் சொக்கலிங்கம் செட்டியார், எங்களுக்குச் சொரூபானந்த ஸ்வாமி. சொக்கலிங்கம் செட்டியாருக்கு ஒரு மகன் இருப்பது போலவே, சொரூபானந்த ஸ்வாமிக்கு ஒரு பெண். பெயர் கருணா! உங்கள் ஆச்சரியம் அதிகமாகிவிட்டிருக்கும். விரைவில் போக்கிவிடுகிறேன். இங்கு வைர வியாபாரம் செய்யும் சொக்கலிங்கம் செட்டியார், பல வருஷங்களுக்கு முன்னால் எங்கள் பக்கத்திலே சொரூபானந்தஸ்வாமியாக உலவி, வைதீகத்தை வியாபாரம் செய்து கொண்டிருந்தார். இப்போது கூட எங்கள் பக்கத்திலே வந்தால் சொரூபானந்த ஸ்வாமிகளின் மடாலயம் இருக்கக் காணலாம். அருள் பெற்றவர் என்று, அவரை வணங்காதவர்கள் கிடையாது. வருஷத்துக்கு ஒருமுறைதான் வருவார்; இரண்டொரு மாதங்களே தங்குவார்; காணிக்கை குவியும்; பூஜைகள் பலமாக நடக்கும்; சர்வமதச் சம்மதத்தைப் போதிப்பார். பிறகு போய்விடுவார். 'எங்கிருந்து வருகிறார், எங்கே தங்குகிறார், இங்கே வராத சமயத்தில் என்பது யாருக்கும் தெரியாது. வருஷத்தில் பத்து மாதம் வனாந்தரங்களிலே வாசம் செய்கிறார் என்றே சகலரும் கூறினர். இப்போதும் கூறுகின்றனர். சித்து விளையாடுபவர் என்று சொல்வார்கள். அவர்கள் அறியமாட்டார்கள், உங்கள் சொக்கலிங்கம் செட்டியாரே தான் பத்து மாதம் வைர வியாபாரம் செய்து கொண்டிருப்பதும், பாக்கி நாட்களிலே எங்கள் பக்கங்களில், சொரூபானந்தராக இருப்பதுமான 'சித்து' விளையாடுகிறார் என்று. அவருடைய தரிசனத்தால் பலன் கிடைக்குமென்று வந்தவர்களிலே, விதவை ஜோதியும் ஒருத்தி. ஜோதி கிறிஸ்துவ மார்க்கத்தைத் தழுவிய பிறகு வந்த பெயர். முதல் பெயர், முத்தாயி. ஜோதியின் விதவைத்தனம் சொரூபானந்

தரால் போக்கப்பட்டது. கருணா பிறந்தாள். ஊரார் இதை அறியமாட்டார்கள். ஜோதியும், சொரூபானந்தரே, நாட்டிலே இந்தப் பக்கத்திலே சொக்கலிங்கம் செட்டியாராக இருப்பதைத் தெரிந்து கொண்டவளல்ல. ஜோதி, கருணாவைக் குழந்தையாக இருக்கும் போதே விட்டு, இறந்து போனாள். இப்போது அவளுக்குப் பதினெட்டு வயது. அழகி, அறிவாளி, படித்துத் தேறி இருக்கிறாள். இனிமையாகப் பாடுவாள். என்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறாள். என் இருதயத்திலே அவளே நாயகி;அவளுக்கு நானே இருதய நாதன்'' என்று கூறி முடித்தான்.

''ஆமாம்! இவ்வளவு 'மர்மமும்' உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று நான் கேட்டேன்.

''அதுவா? அதுவும் ஒரு வேடிக்கைதான்! சொரூபானந்தஸ்வாமி என்ற வேஷத்திலே சொக்கலிங்கம் செட்டி உலவி, மக்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதற்கு உடந்தையாக இருந்தவன், எங்கள் ஊர் ஆசாமி. அவனே பிரதம சீடனாக இருந்தவன். அவன் மூலமாகவே, சொரூபானந்தரின் புகழ் பரவிற்று''.

''ஸ்வாமி, எப்போது வரும்?'' என்று அவனைத்தான் ஊரிலே கேட்பார்கள்.

''நேற்றிரவு சொப்பனத்திலே தோன்றினார். தோன்றி, இன்னும் பத்து நாளிலே வருவதாகச் சொல்லிவிட்டு மறைந்தார்'' என்பான், சடையன் என்ற பெயரை ஜடாதரஸ்வாமி என்று மாற்றிக் கொண்ட அந்தக் கபடன்.

''ஸ்வாமி! என் மனதை வாட்டும் விஷயமாக...'' என்று பக்தர் கூறவேண்டியதுதான், உடனே சொரூபானந்தர்,

''ஏனப்பா! புதிய வீடு வாங்கி இருக்கிறாயே, அது நல்லதா அல்லவா என்பதுதானே உன் கவலை?'' என்று புன்னகையுடன் கேட்பார். பக்தருக்குப் பரமானந்தம், ஸ்வாமி மனதிலுள்ளதை அறிந்து கூறிவிடுகிறாரே என்று. ஒவ்வொரு

பக்தரின் மனதிலிருப்பதையும் சொரூபானந்தர் அறிந்து கூறு வார். ஏன் முடியாது? அவ்வப்போதுதான், சடையனுக்கும் சொக்கலிங்கம் செட்டியாருக்கும் கடிதப் போக்குவரத்து நடக்கிறதே. இந்நிலையிலே, ஜடாதர ஸ்வாமிக்குச் சீடராக இருப்பது அலுத்துப் போகவே, சொக்கலிங்கம் செட்டியார் இனிமேல் சொரூபானந்த ஸ்வாமியாக வரவேண்டியதில்லை என்று கூறிவிட்டு, ஸ்வாமிகள் ஜோதியில் கலந்து விட்டார் என்று தெரிவித்துவிட்டான். அவனை மீறி, சொக்கலிங்கம் செட்டியாரால் நடந்துகொள்ள முடியாது. அவன் சொன்ன தால்தான் எனக்கு, உங்கள் செட்டியார் விஷயம் தெரியும். எனக்குத் தெரிந்தது ஊராருக்கு இன்னமும் தெரியாது. நான் சொன்னாலும், ருஜூப்படுத்த ஆதாரம் இல்லை. சொரூபானந்தர், தமது கரத்திலே 'ஜோதி' என்று பச்சை குத்திக் கொண்டிருக்கிறார்' என்று ஜடாதரன் சொன்னான்; தற்செயலாக அவருடைய கையைப் பார்த்தேன். 'ஜெக ஜோதி' என்று பச்சை குத்தப்பட்டிருக்கிறது. அது அவரு டைய வைரத்துக்குப் பெயர் என்று விளம்பரம் செய்யப்பட்டி ருக்கிறது. ஆகவே, 'ஜோதி' என்று பச்சை குத்தப்பட்ட ஆதாரமும் எனக்குத் துணை செய்யாது.

''அது கிடக்கட்டும்! கருணா எங்கே இருக்கிறாள்? அவள் உன்னைக் காதலிக்கும்போது, செட்டியாரின் சம்ம தத்தை ஏன் கேட்கிறாய்? கருணாவுக்குச் செட்டியார்தான் தன் தகப்பன் என்பது தெரியுமா?'' என்று நான் பல கேள்வி களைக் கேட்டேன். இருதயநாதன், ''கருணா யார் தெரி யுமா? அதாவது, அவள் எங்கள் ஊர் ஜோதிக்கும் சொரூ பானந்தத்திற்கும் பிறந்தவள். ஆனால் ஊராரின் நினைப்பு என்ன தெரியுமா? இப்போது அவள், எல்லப்ப முதலியாரின் ஏகபுத்ரி! எல்லப்ப முதலியார் நெடுநாட்களாகக் குழந்தை இல்லாமலிருந்தார். அவர் சொரூபானந்தரின் மகிமையைக் கேள்விப்பட்டு, பிள்ளை வரம் கோரி, எங்கள் ஊரில் வந் திருந்து பூஜை நடத்தினார். அந்தச் சமயத்தில்தான், ஜோதிக் குப் பெண் பிறந்திருக்கிறது. அதனை, சொரூபானந்தர் 'கடவுட் பிரசாதம்' என்று சொல்லி, எல்லப்ப முதலியாருக்

குத் தந்தார். கருணா இன்று, எல்லப்ப முதலியாரின் மகளாக இருக்கிறாள். என்னுடன் கல்லூரியில் படித்தாள். காதலித்தோம்; எல்லப்பரையே சென்று கேட்டேன். கருணாவும் தைரியமாகவே அவரிடம் தன் பிரியத்தைச் சொல்லிவிட்டாள். அவரோ, எதற்கும் 'குருதேவரை'க் கேட்டுச் சொல்கிறேன் என்று கூறிவிட்டார். கொஞ்ச நாள் கழித்துச் சென்றபோது, ''முடியாது!'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். என்ன நடந்ததென்றால், எல்லப்ப முதலியார், சொரூபானந்தரின் கடாட்சத்தால் கிடைத்த குழந்தையின் விஷயமாக, அவரிடம் நேரில் கேட்டுச் செய்வதற்கில்லை என்றபோதிலும், சொரூபானந்தருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்திருக்கும் ஜடாதரின் சம்மதமாவது பெற்றுத்தானாக வேண்டும் என்று எண்ணினார். அவருக்குத் தெரியாது, சொரூபானந்தஸ்வாமி என்ற வேஷமே, சொக்கலிங்கம் செட்டியின் புரட்டு என்பது. ஜடாதரர் சம்மதம் தருவதற்கு முன்பு, சொக்கலிங்கம் செட்டியாருக்கு இரகசியமாகத் தகவல் அனுப்பி விசாரித்து இருக்கிறார்.

ஏனெனில், கருணாவின் பிறப்பு, வளர்ப்பு சகலமும் ஜடாதரனுக்குத் தெரியும். சொக்கலிங்கம், ஜடாதரனுக்குச் செய்தி அனுப்பி விட்டார், கருணா கட்டாயமாக இருதயநாதனை மணம் செய்து கொள்ள 'உத்தரவு' தராதே என்று. ஜடாதரர் உத்தரவு கிடைக்காததால், பெண் தரமுடியாது என்று எல்லப்ப முதலியார் சொல்லிவிட்டார். என்ன செய்வேன்! ஜடாதரரின் சம்மதம் கிடைக்காததால்தான், எல்லப்பர் திருமணத்துக்குச் சம்மதிக்கவில்லை என்ற குட்சமத்தை கருணா தெரிவித்தாள். அவளுக்கும் அதுவரையில்தான் தெரியும், சொக்கலிங்கமே சொரூபானந்த ஸ்வாமியாக நாடகம் நடத்திவந்தது. ஜோதியின் கற்பழித்தது, அதன் விளைவாகத் தான் பிறந்தது, எல்லப்பருக்கு வளர்ப்புப் பெண்ணானது இவைகள் கருணாவுக்குத் தெரியாது. எனக்கும் அப்போது தெரியாது. ஜடாதரனிடம் சம்மதம் பெறாததால் தான் கருணாவை எனக்கு மணம் செய்விக்க மறுக்கிறார் என்று தெரிந்ததும், நான் நேரே, எங்கள் ஊர் சென்றேன்.

ஜடாதரரைக் கண்டேன், முறையிட்டேன். அவர் முதலிலே, 'உத்தரவு கிடைக்கவில்லை. பொருத்தம் இல்லை' என்று ஏதேதோ சாக்குச் சொன்னார். நான் விடுவதாக இல்லை.

பிறகு அவருக்கு என்னமோ என்மீது இரக்கம் பிறந்தது. ''கருணாவை நீ பெற வேண்டுமென்றால் வைர வியாபாரி சொக்கலிங்கம் செட்டியாருடைய சம்மதத்தைப் பெற்றுவா. உனக்கு கருணா மீதுள்ள காதலையும் அவளுடைய சம்மதத்தையும் எடுத்துக்கூறி அவரை வேண்டிக்கொள். அவர் சம்மதித்தால், உன் கலியாணத்தை நான் முடித்து வைக்கிறேன்'' என்றான், அந்தச் சன்யாசி வேடக்காரன். 'கருணாவுக்கும் சொக்கலிங்கம் செட்டியாருக்கும் என்ன சம்பந்தம்? யார் வீட்டுப் பெண்ணுக்கு யாரிடம் போய்ச் சம்மதம் தரும்படியாகக் கேட்பது' என்று நான் திகைப்புடன் கேட்டேன். அப்போதுதான் ஜடாதரன், பூரா விவரத்தையும் என்னிடம் சொன்னான். புரட்டின்மேல் புரட்டுச் செய்து கொண்டு பூஜா மடங்களிலே அமர்ந்துள்ள இந்தப் பொய்யர்களைக் கூண்டோடு தொலைக்க வேண்டும் என்று எனக்கு ஆத்திரம் பிறந்தது. ஆனால் என் மனமெல்லாம் கருணா மீது இருந்ததால், புரட்டர்களைப் பிறகு ஒழிப்போம்—முதலிலே சொக்கலிங்கம் செட்டியாரின் சம்மதத்தைப் பெறுவோம் என்று எண்ணி, அவரைப் பலமுறை கண்டு, எனக்கு அவருடைய சூது அவ்வளவும் தெரியும் என்பதையும் கூறி, கருணாவை, எனக்கு மணம் முடித்து வைக்கும்படி கேட்டேன். எச்சரித்தேன்.

செட்டியார் மசிய மறுத்தார். ''ஜடாதரன் ஒரு முட்டாள். உன்னிடம் இரகசியத்தைக் கொட்டிவிட்டான். ஆனால் அந்த இரகசியம் உனக்குத் தெரிந்ததால், என்னை, ஆட்டிப் படைக்கலாம் என்று கனவு காணாதே. அசைக்கக் கூட முடியாது! கருணாவை, உனக்குத் தரமுடியாது. நீ ஒரு கிறிஸ்தவன். என்ன தைரியம் உனக்கு, கருணாவைக் கலியாணம் செய்துவை என்று கேட்க?'' என்பதாகக் கூறி என்னை ஏசினார். பலமுறை கெஞ்சினேன். சில சமயம் மிரட்டியும் பார்த்தேன். ''சொக்கலிங்கமே சொரூபானந்தன்;

சொரூபானந்தருக்கும் ஜோதிக்கும் பிறந்தவளே கருணா. இவைகளெல்லாம் உண்மைதான். ஆனால் இவை உண்மை என்று எப்படி ருஜூப்படுத்துவாய்?'' என்று என்னைக் கேட்டான், அந்தக் கள்ளன். ''ஏன் ஜடாதரனின் சாட்சி இல்லையோ?'' என்று நான் சொன்னேன். 'என்னுடன் சகலத்திலும் பங்கு கொண்டவனும், என் உதவியால் இன்று 'குரு'வாகக் கோலம் கொண்டிருப்பவனுமான ஜடாதரன், உனக்குச் சாட்சியாகவா வருவான்? பைத்யக்காரா! வருவானா? என் கூட்டாளி, பங்காளி, அவன் எனக்கு எதிரியாவானா? ஆனால் அவன் கதி என்னவாகும்? அன்று உன்னிடம் ஏதோ சொல்லிவிட்டான்,பழைய நாள் சம்பவங்களை.போதையாக இருந்திருப்பான். இப்போது போய்ச் சாட்சியாக வரவேண்டும் என்று கூப்பிட்டுப் பார்'' என்றார் உங்கள் செட்டியார். ஜடதாரன், அது போலவே, நான் போய்க் கேட்டபோது, ''நான் என்ன பைத்யக்காரனா?'' என்று சொல்லி அனுப்பி விட்டான். இன்று கடைசி முறையாகச் சொரூபானந்த வேடமிட்ட சொக்கலிங்கத்தைக் கேட்டுவிட்டேன. 'முடியாது' என்று கூறிவிட்டான். இதுதான் என் கதை. எனக்கு என்ன உபகாரம் தேவை என்றால், எப்படியாவது சொக்கலிங்கமே சொரூபானந்தஸ்வாமி என்பதைக் காட்டுவதற்கான ஆதாரம் தேவை. ஜடாதரன் எழுதிய கடிதங்கள் ஏதேனும் கிடைக்குமானால், நமது நாட்டைக் கெடுக்கும் இந்த நயவஞ்சகர்களின் நாடகம் வெளிப்படும். மக்கள் தப்புவார்கள்.'' என்று கூறி, என்னை வேண்டிக் கொண்டான். நான், எப்படி எப்படியோ முயற்சி செய்து பார்த்தேன். ஒரு கடிதம்கூடக் கிடைக்கவில்லை. இருதயநாதன், கருணாவைக்கூட மறந்தான்; காவி உடைக் கள்ளர்களை வெளிப்படுத்த வேண்டும் என்று துடிதுடித்தான். இன்று காலை முதல், பல வக்கீல் வீடுகளுக்கு இருவருமாகப் போனோம். அதாவது, என்னை அழைத்துக் கொண்டு போனான். எந்த வக்கீலிடம் சொன்னாலும் ''நான்சென்ஸ்! ஆதாரம் என்ன? ருஜூ எங்கே? சாட்சி யார்?'' என்றுதான் கேட்டார்கள். சில வக்கீல்கள், ''பிரபல வியாபாரி அவர். அவர்மீது ஆள்மாறாட்டக் குற்றம் சுமத்துவது, எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா?

ருஜூவே இல்லாத விஷயம்; எவனோ ஜடாதரன் சொன் னான் என்கிறாய்; அவனே சாட்சியும் வரமாட்டான் என் கிறாய்; கோர்ட்டிலே எழுந்து நின்று எந்தக் கோமாளியும் இப்படி ஒரு விசித்திரமான வழக்குக்கு வாதாட முன் வரு வானா? மானநஷ்ட வழக்குத் தொடருவார் செட்டியார்'' என்று இருதயநாதனையே மிரட்டியும் அனுப்பினார்கள்.

இருதயநாதன் கூறும் வழக்கு என்ன தெரியுமோ? தெளி வாக இருக்கும்.

''வைரவியாபாரம் செய்யும் சொக்கலிங்கம் செட்டி, இருபது ஆண்டுகளுக்கு முன்பு, சாமியார் வேஷம் போட்டுக் கொண்டு, சொரூபானந்த ஸ்வாமி என்று பெயரிட்டுக் கொண்டு, திருநெல்வேலி பக்கத்திலே, பாமர மக்களை ஏய்த்துப் பணம் பறித்து வந்தான்.

அதுசமயம், ஜோதி எனும் விதவையைக் கற்பழித் தான். ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஜோதி இறந்துவிடவே குழந்தையைப் பக்தியால் ஏமாந்த எல்லப்ப முதலியாருக்கு 'தத்து' ஆக்கினான்.

ஆகவே சொக்கலிங்கம் செட்டியார் ஒரு புரட்டன், காமுகன், காவி வேடத்திலே உலவிய கள்ளன், கற்பழித் தவன். அவனுடைய 'சொத்து' மதவேஷமிட்டு ஊரை ஏய்த்துப் பொருள் பறித்ததன் விளைவு.

இவனுடைய புரட்டு முழுவதும் இவனுக்கு உடந்தை யாக இருந்து பிரதம சிடனாகவும் இருந்து, இப்போது 'குருஸ்தானம்' வகிக்கும் குடிகாரன் ஜடாதரன் என்ற சடை யனுக்குத் தெரியும்.

காருண்ய மிகுந்த சர்க்கார், இந்த வழக்கை விசாரித்து, ஜடாதரனை உண்மையைக் கூறும்படிச் செய்து, காவிபூண்டு உலவும் கள்ளரின் புரட்டை உலகு அறியச் செய்து, ஏழை மக்கள் இவ்விதமான எத்தர்களுக்கு இரையாகாதிருக்கும்படி பாதுகாத்தருள வேண்டும்.''

இதுதான் இருதயநாதன் தொடுக்க விரும்பும் வழக்கு. இதை நடத்திக் கொடுக்கும்படியாகத்தான் இன்று பகல் பொழுது முழுவதும், எத்தனையோ வக்கீல் வீடுகள் ஏறி இறங்கினோம். அவ்வளவு பேரும், சிரிக்கிறார்கள். ருஜு, சாட்சி, ஆதாரம் எடு என்று கேட்கிறார்கள்! ஒரு வக்கீல் சபித்தே விட்டார்.

''அடே மஹாபாபி! சொரூபானந்தரையா இப்படித் தூஷிக்கிறாய்? நான் அவரைத் தரிசித்து இருக்கிறேன். உனக்கு என்னடா தெரியும் ஞானிகளின் குணம்.'' என்று இடித்துரைத்தார். புரட்டு நடத்திய சொக்கலிங்கம் செட்டியும் ஒப்புக்கொள்கிறான்; உடந்தையாக இருந்த சடையனும் ஒப்புக்கொள்கிறான், இருதயநாதனிடம் பேசும்போது! ஊர் ஒப்புக் கொள்ளாதே! கோர்ட்டிலே கேஸ் நிற்காதே! சொரூபானந்த ஸ்வாமிகள், ஜோதியில் கலந்ததற்கு ஆதாரம் இருக்கிறது! அந்தச் சமயத்திலே, பிரசங்கம் செய்பவர்களிலே, இந்த ஊர் நீதிபதியும் ஒருவராம்! இந்த நிலையிலே, இருதயநாதன் எப்படி வழக்குத் தொடுக்க முடியும்? வக்கீலுக்காகத் தேடித் தேடி அலைந்து, ஆத்திரம் அதிகமாகிவிட்டது இருதயநாதனுக்கு. நேரே என்னை அழைத்துக் கொண்டு, கருணா வீட்டுக்குப் போனான். அங்கே, எல்லப்ப முதலியார் எதிரிலேயே, முழுக்கதையையும் கொட்டினான். ''இப்படிப்பட்ட பைத்யக்காரனைக் கலியாணம் செய்து கொள்கிறேன் என்று சொன்னாயே, பாரம்மா, கருணா! பார் இந்தப் பித்தனை'' என்று எல்லப்ப முதலியார் கூறினார். கோபம் தலைக்கேறி விட்டது இருதயநாதனுக்கு. எல்லப்ப முதலியாரைத் தாக்கினான். அவ்வளவுதான்! அவருடைய வேலையாட்கள் கூடி, அடி அடி என்று அடித்தனர். நான் ஓடினேன்; அதனால் தப்பினேன். பலமான அடிபட்டுக் கொண்டு, இரத்தம் ஒழுக ஒழுக இருதயநாதன் எல்லப்ப முதலியாரின் பங்களாவை விட்டு வெளியே வந்தான். நான் சென்று, அவனைத் தாங்கியபடி அழைத்து வந்தேன். வருகிற வழியிலெல்லாம்கூட, ''ஒரு நல்ல வக்கீல் மட்டும் கிடைத்துவிட்டால், இந்தச் சொக்கலிங்கத்தின் வண்டவாளத்தை ஊரறியச் செய்து, பத்து வருஷம் ஜெயிலுக்கு அனுப்பி வைப்பேன்'' என்று

கூறிக் கொண்டே வந்தான். கம்பவுண்டர் சார்! இதுவே பரிதாபத்துக்குரிய என் நண்பனின் கதை,'' என்று எம்பெருமான் கூறி முடித்தார்.

திகைத்துப் போனான் கம்பவுண்டர்.

''ஏன் சார்! உலகிலே இப்படியும் புரட்டுகள் நடக்கின்றனவா என்றா யோசிக்கிறீர்?'' என்று கேட்டார் எம்பெருமான்.

''இல்லை, சார்! இல்லை! காவி போட்ட கள்ளர்கள் பல பேர் இருக்கிறார்கள். ஒவ்வொருவனுடைய கொடிவழி பட்டியையும் பார்த்தால் இப்படி ஏதாவது ஒரு புரட்டாகத் தான் இருக்கும். ஏமாறுகிற ஆசாமிகள் இருக்கிற வரையிலே ஏமாற்றுகிறவர்கள் இருந்துதான் தீருவார்கள். நான் அதற்காக அல்ல யோசித்தது; இருதயநாதன் கூறுவது உண்மையாகத்தான் இருக்கிறது. அவனுக்குச் சொக்கலிங்கத்திடமோ, சடையனிடமோ என்ன பகை? பாவம்! ஆனால் இருதயநாதன் கூறும் உண்மையை, கோர்ட் ஏற்றுக் கொள்ளாதே. வழக்குக்கு ஆதாரமே இல்லை. பொய்யாக சோடிக்கப்பட்ட கேஸ் என்று தள்ளிவிடுவதோடு, இருதயநாதன் மீது மான நஷ்ட வழக்குக்கூடத் தொடுத்துவிடுவார்களே என்பதை எண்ணித்தான் திகைத்தேன்'' என்றான் கம்பவுண்டர்.

பொழுது விடிந்தது. இருதயநாதன், கண்விழித்தான்; களைப்புடன் காணப்பட்டான். டாக்டர், கைபார்த்தார், மருந்து கொடுத்தார். ஒரு வாரத்தில் பழையபடி உலவும் நிலை பெற்றான். ஆனால், பழைய நினைப்பு யாவும்அழிந்து விட்டது. கருணா! எல்லப்ப முதலி! சொக்கலிங்கம்! சொரூபானந்தன்! சடையன்! எல்லாம் மனத்திலிருந்தே மறைந்து போய்விட்டது. எம்பெருமானைக்கூட மறந்து விட்டான். பழைய உருவம், உள்ளம், பிரத்யேகமான மாறுதலை அடைந்துவிட்டது. எம்பெருமானாகச் சென்று, எவ்வளவோ முயன்று, பழைய நினைவுகளைக் கவனப்படுத்தியபோதும், இருதயநாதனால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. கண்களில் நீர் ததும்பிற்று எம்பெருமானுக்கு. மண்டையிலே

பட்ட பலமான அடியினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலே, இருதயநாதனுக்கு மூளை கெட்டுவிட்டது என்று டாக்டர் கூறிவிட்டார். பித்தம் பிடித்தவனென்று, பாட்டு, ஆட்டம், சேட்டை எதனாலும் தெரியவில்லை. இருதயநாதன், தன் எதிரிலே, யாரைக் கண்டாலும், ''வக்கீலா, சார் நீங்கள்?'' என்று கேட்பான். வேறு ஒரு பேச்சும் பேசுவதில்லை! திக்கற்ற இருதயநாதனுக்கு எம்பெருமான்தான் உதவிசெய்து கொண் டிருந்தான். சாப்பிடுவான், உலவப் போவான், உலவிவிட்டு எம்பெருமான் வீடு வந்ததும், ''இருதயம்! எங்கே அப்பா போயிருந்தே?'' என்று எம்பெருமான் கேட்பான். ''வக்கீல் வீட்டுக்கு'' என்று பதில் கூறுவான் இருதயநாதன்.

யார் வருவார்கள், அவனுக்கு வக்கீல் வேலை செய்ய?

✶

# 8
# குமரிக்கோட்டம்

"ஸ்ரீமான் குழந்தைவேல் செட்டியார்வாள், மகா உத்தமர். அவருடைய திவ்ய குணத்தைத் தேசம் பூராவும் போற்றுகிறது. இப்படிப்பட்டவர், ஒரு சிலராவது இருப்பதாலேதான், காலம் கலிகாலமா இருந்தாலும், மழை பெய்யறது! பூலோகத்தைச் சமுத்திராதி உற்பாதங்களால் அழிக்க முடியவில்லை என்று கூறலாம்.

உலகமே தலைகீழாக மாறிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்திலே, பெரியவாளுடைய காரியங்களை நாசம் செய்யறதை, பிரமாதமான சீர்திருத்தம்னு பேசிண்டிருக்கு, ஒரு ராட்சசக் கூட்டம். அப்படிப்பட்டவாளெல்லாம், நம்ம செட்டியாரின் சர்வபரித் தியாகத்தைக் கேட்டாளானா, நடுநடுங்கிப் போவாள். லோகத்திலே, எல்லாவிதமான பாசத்தையும் ஒருவர் அடக்கலாம். ஆனா, இந்தப் புத்ர பாசம் இருக்கே, அதனைச் சாமான்யமா அடக்க முடியாது. சக்ரவர்த்தி தசரதனாலேகூடப் புத்ரசோகத்தைத் தாங்க முடியவில்லை என்பது லோகப் பிரசித்தமான விஷயம். நம்ம செட்டியார், தமது குமாரன், ஒரே மகன், ஆச்சார அனுஷ்டானாதிகளுக்கு விரோதமான காரியம் செய்யத் துணிந்தபோது எவ்வளவோ இதோபதேசம் செய்து பார்த்தும், அவன் பிடிவாதமாக இருக்கக் கண்டு, என்ன செய்தார்? மகன் என்ற பாசத்தைக்கூட உதறித் தள்ளிவிட்டார். அவ்விதமான தவச்சிரேஷ்டராக்கும், நமது செட்டியார்வாள். தமது ஒரே புத்ரன் ஏதோ கால வீத்யாசத்தாலும், கெட்டவா சகவாசத்தினாலும், பொதுவாகவே லோகத்தில் இப்போ தலைவிரித்து ஆடுகிற அதர்மக் கோட்பாடுகளை நம்பியது

னால், உத்தமமான வைசிய பரம்பரையிலே உதித்ததை யும் மறந்து, கேவலமான காமாதி பாசத்திற்குப் பலியாகி, குலதர்மத்தைக் கைவிட்டு, வேறு குல ஸ்திரீயை மணம் செய்து கொள்ளவேண்டுமென்று பிடிவாதம் செய்தது கண்டு, சோகம் கொண்டு, தன் மகனுக்குச் சாஸ்திராதிகளைச் சாங்கோ பாங்கமாக எடுத்துக் கூறித் தடுத்து பார்த்தும் முடியாததால், பெரியவா காலந்தொட்டு இருந்துவரும் புராதன ஏற்பாட்டுக்கு விரோதமாக நடந்துக் கொள்வதைக் கைவிட்டுவிடாத பட்சத்தில், இனித் தன் கிருஹத்தில் காலடி எடுத்து வைக்கவே கூடாது என்று கூறிவிட்டார். உன் முகா லோபனமும் செய்யப் போவதில்லை என்று சொல்லி விட் டார். அவனும் வீட்டைவிட்டுப் போய்விட்டான். புத்ர சோகம் மகா கொடுமை. அதனை நமது செட்டியார் தாங் கிக் கொண்டது, நமக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கு. ஆனா, ராஜரிஷிகளின் மனம் எப்போதும் இப்படித்தான் இருக்கும். அவருடைய தர்ம மார்க்கத்தை எவ்வளவு புகழ்ந் தாலும் தகும். அவருடைய புகழ் பாரத வர்ஷத்துக்கே ஒரு புகழ் என்று சொல்லலாம். அப்படிப்பட்ட தன்யரை, வர வேற்கும் பாக்யம் நமக்குக் கிடைத்தது பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். பகவான், கீதையில் சுதர்மத்தைப் பற்றி அழகாகச் சொல்லியிருந்தார். அந்தச் சுதர்மத்தை, நிலைநாட்டத் தமது சொந்த மகனையும் விட்டுப் பிரியத் துணிந்த, மகானைத் தரிசித்தும், அவருடைய மனஉறுதி யைப் பாராட்டியும், மகாஜனங்கள் சீரும் சிறப்பும் பெறுவார் கள். இவருடைய புத்ரனும், கெட்ட கிரஹம் மாறி நல்ல கிரஹம் உதித்ததும், குலத்தைக் கெடுத்து, உத்தமமான தகப்பனாரின் மனதைப் புண்படுத்திய பாபத்தை எண்ணி வருத்தமடைந்து, பிறகு, தானாக வீடு வந்து சேர்ந்து, தகப்ப னார் காலில் விழுந்து சேவிக்கத்தான் போகிறான். சத்யம் ஜெயிக்கும் என்பது சாமான்யாளுடைய வாசகமோ! ஆகவே உத்தமோத்தமரான சீமான் செட்டியாரை, நான் ஆசீர் வதித்து, இந்த ஊர் சத்சங்கத்தார் சார்பில் அவருக்கு இந்த மாலையைச் சூட்டுகிறேன். ஜே, சீதாராம்! ஜே, ஜே!!''

**ரோ**ஜா மாலை, சாதாரணமாகக் கோயில்களில் மூல வருக்குப் போடுவதுபோல, மிகப்பெரிதாகத்தான் இருந்தது. நெற்றியிலே விபூதி தரித்துக் கொண்டு, மார்பிலே நூலுடன் விலையுயர்ந்த பட்டுக்கரை வேட்டி, உத்தரியம் அணிந்து கொண்டு, அந்த ரோஜா மாலையுடன் நின்று சபையோரை நோக்கிக் குழந்தைவேலச் செட்டியார் கும்பிட்டுக் கொண்டு நின்றபோது, நாயன்மார் போலவே இருந்தது. தாழையூர் சத்சங்கம், சனாதன மார்க்கத்தைப் பாதுகாக்க ஏற்பட்டது. அந்தச் சங்கத்தார், வெளியூரிலிருந்து வரவழைததிருந்த வக்கீல் வாசுதேவசர்மா, உருக்கமான அந்தப் பிரசங்கத் தைச் செய்துவிட்டு, ரோஜா மாலையைச் செட்டியாருக்குப் போட்டதும், அவர் அடைந்த ஆனந்தம், இவ்வளவு என்று அளவிட முடியாது. வார்த்தைகள் சந்தோஷத்தால், சரி யாக வெளிவரவில்லை.

''பிராமணோத்தமர்களே! பிர்ம்ம, க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்ர என்று பெரியவர்கள் ஏற்பாடு செய்திருக்கும் ஜாதி ஆச்சார முறைப்படி அடியேன் வைஸ்யகுலம். இந்தப் பாபி யின் மகனாகப் பிறந்தவன், அந்த ஆச்சாரத்தைக் கெடுக்கத் துணிந்தான். பிரபஞ்சத்துக்கே நாசம் சம்பவிக்கக்கூடியது அதர்மம். அந்த அதர்மத்தைச் செய்ய, ஒரு மகன் எனக்குப் பிறந்தான். நான் என்ன பாபம் செய்தேனோ பூர்வத்தில்? அவள் என்ன ஜாதியோ, என்ன குலமோ, ஒரு பெண், அவளைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்றான், தடுத்தேன். எவ்வளவோ புத்தி சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. கடைசியில், இந்தப் பாபக்கிருத்யத்துக்கு உடந்தையாக இருக்கும் மகாபாபம் நமக்குச் சம்பவிக்கக் கூடாது என்று தோன்றிற்று. நமது சாமா அவர்கள் சொன் னது சத்யவாக்கு. எனக்குப் புத்ரசோகம் தாங்க முடிய வில்லை. ஆனாலும், மனதைத் திடப்படுத்திக் கொண்டு, அவனை வீட்டைவிட்டுப் போய்விடச் சொல்லி விட்டேன். இனி அவன் எக்கேடு கெட்டாலும், உலகம் என்னைத் தூற் றாது. அவனுடைய முகாலோபனம் செய்யப் போவதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டது மட்டுமல்ல, என் சொத்

திலே ஒரு பைசாகூட அந்த நீசன் அடையப் போவதில்லை. ஏதோ பகவத் சங்கற்பத்தால், நான் கொஞ்சம் சம்பத்து அடைந்திருக்கிறேன். அதை இனிச் சத்காரியங்களுக்கு உபயோகித்து, போகிற கதிக்கு நல்லது தேடிக் கொள்வது என்று முடிவு செய்துவிட்டேன். என் சொத்து, சுயார்ஜிதம். ஆகவே அந்தத் துஷ்டன் என்னிடம் வரமுடியாது. என்னைப் பிரமாதமாகப் புகழ்ந்த சத்சங்கத்தாருக்கு, என் நமஸ்காரத்தைக் கூறிக்கொண்டு, இனி உங்களுடைய ஆசீர்வாத பலத்தால் அடியேன், தன்யனாவேன் என்றும் சொல்லிக் கொள்கிறேன். சிலாக்யமான சேவை செய்து வரும் சத்சங்கத்தாருக்கு, என் சக்தியானுசாரம் ஏதாகிலும் தரவேண்டும் என்று ஆசை. ஆகவே ஆயிரம் ரூபாய் கொண்ட இந்தப் பணமுடிப்பை, சத்சங்கத்தாருக்குத் தருகிறேன்'' என்று கூறி பணமுடிப்பையும் தந்தார். அந்தப் பரம பாகவதரை, மறுபடி ஒருமுறை ஆசிர்வதித்தார் வாசுதேவ சர்மா. அன்று தாழையூர் மகாஜனங்கள், செட்டியாரைப் புகழ்ந்தனர். சத்சங்கத்திலிருந்து அவர் மேளதாளத்துடன் ஊர்வலமாக வீடு வரை அழைத்துச் செல்லப்பட்டார்.

**தா**ழையூர் சத்சங்கத்தின் விசேஷக் கூட்டம், அன்று விமரிசையாக நடைபெற்றது. உள்ளூர், வெளியூர் பிராமணத் தலைவர்களும், சனாதனிகளான மற்ற வகுப்புப் பெரியவர்களும், இலட்சாதிகாரியும், வைதிகப் பிரியருமான ஸ்ரீமான் குழந்தைவேல் செட்டியாரைப் பாராட்டக் கூடினர். செட்டியார் மீது சத்சங்கத்தின் ஆசீர்வாதம் விழுந்ததற்குக் காரணம், அவர் சனாதனக் கோட்பாட்டைச் செயல் முறையிலேயே நிலைநாட்ட தம் ஒரே மகனையே, வீட்டை விட்டு வெளியேற்றியதுதான். மகன் பரம சாது. ஆனால் சீர்திருத்தவாதி. வேறோர்குலப் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்றான்; செட்டியார் தடுத்தார். மகன் கேட்கவில்லை. ஜாதி ஆசாரத்தைக் கெடுக்கும் பிள்ளை என் வீட்டுக்குத் தேவையில்லை என்று துரத்தி விட்டார்.

தாழையூர்

அன்புள்ள அம்சாவுக்கு,

உனக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று பல நாட்களாக யோசித்து யோசித்து, கடைசியில் இன்று எழுத உட்கார்ந்தேன். "உனக்காவது, கலியாணம் நடக்கப் போவதாவது. உன்னுடைய கொள்கைகளைக் கட்டிக் கொண்டு நீ அழவேண்டியவளே தவிர, ஊரிலே நாலு பேரைப்போல, காலா காலத்தில் கலியாணம் செய்து கொண்டு சந்தோஷமாக இருக்கப் போவதில்லை. நீதான், எந்த ஜாதியானாக இருந்தாலும் சரி, காதலித்தவனைத்தான் கலியாணம் செய்து கொள்வது; அதிலேயும், ஐயர் இல்லாமல் செய்து கொள்வது என்று கூட்டங்களிலே பேசுகிறாயே! அது எப்படியடி நடக்கும்" என்று என்னைக் கேலி செய்தபடி இருப்பாயல்லவா. அடி முட்டாளே, கேள்! உனக்குக் காதலைப் பற்றிக் கடுகுப் பிரமாணமும் தெரியாது. இப்போதாவது தெரிந்து கொள்; என் சபதம் நிறைவேறிவிட்டது. அடுத்த வெள்ளிக் கிழமை எனக்குக் கலியாணம்! ஐயர், நுழையவே முடியாத இடத்தில், சிங்காரபுரிச் சேரியிலே உள்ள சீர்திருத்தச் சங்கத்திலே கலியாணம்! யார் தெரியுமா? என் மாமனாரைப் பார்த்தால், பக்தையான நீ கீழே விழுந்து விழுந்து கும்பிடுவாய் - அவ்வளவு சிவப்பழமாக இருப்பார். தாழையூர் தனவணிகர் குழந்தைவேல் செட்டியார் என்றால் எந்தக் கோயில் அர்ச்சகரும், "மஹா பக்திமானல்லவா" என்று ஸ்தோத்தரிப்பார்கள். அப்படிப்பட்டவர் தவம் செய்து பெற்ற பிள்ளைதாண்டி, என் கணவர். பெயர் பழனி!

அவர் என்னை வெற்றி கொள்ள அதிகக் கஷ்டப்படவில்லை. எப்போதாவது ஒரு தடவை, சீர்திருத்தச் சங்கத்துக்கு வருவார். அதிகம் பேசமாட்டார். மற்றவர்கள் பேசும்போது, மிகக் கவனமாகக் கேட்பார். அதிலும் நான் பேசும்போது, ஆனந்தம் அவருக்கு. மெள்ள மெள்ள நான் அவரைச் சீர்திருத்தக்காரராக்கினேன். ஆரம்பத்தில் அவர் ஜாதிச் சண்டை, குலச்சண்டை கூடாது; வேறு வேறு ஜாதியாக இருந்தாலும், சண்டை சச்சரவு இல்லாமல் வாழ வேண்டும்

என்று மட்டுமே கூறிவந்தார். நாளாக நாளாக, தீவிரவாதி யானார். நான் என் பேச்சினால் அவரை வென்றுவிட்டேன். அந்தப் பெருமையும், சந்தோஷமும் எனக்கு! அவரோ தன் பார்வையாலேயே என்னை வென்றுவிட்டார். குழந்தை போன்ற உள்ளம் அவருக்கு. சாதாரணமாகப் பல ஆட வருக்கு உள்ள குறும்புப் பார்வை, குத்தலான பேச்சு இவை கிடையாது. ''மிஸ்டர் பழனி'' என்று நான் தைரியமாக அவரைக் கூப்பிடுவேன். அவரோ நாகவல்லி என்றுகூடத் தைரியமாக என்னைக் கூப்பிடமாட்டார். புன்சிரிப்புடன் என் அருகே வருவார். அவ்வளவு சங்கோஜம். ஆனால் அவரு டைய காதலைக் கண்கள் நன்றாக எடுத்துக் காட்டியபடி இருந்தன. துணிந்து ஒரு தினம் கேட்டார். நான் திடுக்கிட் டேன்! அவர் கேட்டாரே என்பதால் அல்ல; அந்தக் கேள்வி என் மனதிலே எழுப்பிய களிப்பைக் கண்டு!

'நான் என்ன ஜாதி? நீங்கள் சைவச் செட்டிமார் குலம்!' என்று நான் கூறினேன். அவர், நான் அடிக்கடி சங்கத்திலே ஜாதியைக் கண்டித்துப் பேசுவேனே, அந்த வாதங்களை எடுத்துக் கூறினார். அன்று மாலை மணி ஆறு இருக்கும். ''அம்சா! என்ன இருந்தாலும் இந்த ஆண்களே கொஞ்சம் அவசரக்காரர்கள்தான். பேச்சு நடந்துகொண்டே இருக் கையில் அவர், திடீரென்று என்னை ஆரத் தழுவிக் கொண் டார். எதிர்ப்பவர்களின் வாதங்களைக் கண்டு தவிடு பொடி யாக்கும் திறமை கொண்ட நான், பைத்தியம்போல 'ஐயோ! விடுங்கள்! யாராவது வந்துவிட்டால்!' என்று குழைந்து கூறினேன். நல்ல வேளை, பழனி, என் பேச்சைக் கேட்க வில்லை! எனது அதரங்கள்...சகஜந்தானேடி! பிறகு அவர் ஒவ்வொரு மாலையும் வர ஆரம்பித்தார். காலையிலே நான் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக் கும்போதெல்லாம் அன்று மாலை அவர் என்ன பேசுவார், என்னென்ன விதமாக விளையாடுவார்என்றுநினைத்தபடியே இருப்பேன். வங்காளத்துக்குத் தலைநகரம் எது என்று கேட்க வேண்டும்; நானோ கல்கத்தாவுக்குத் தலைநகரம் எது என்று கேட்பேன். என் வகுப்பிலேயே புத்திசாலி வனிதா.

அவள் எழுந்திருந்து ''கேள்வியே தவறு'' என்றாள். எனக்குக் கோபம் பிரமாதமாக வந்தது. பிறகு, என் தவறை உணர்ந்து நானே சிரித்துவிட்டேன். சிரித்ததும் எனக்கு அவருடைய கவனம்தான் வந்தது. ஏன் தெரியுமா? நீ குறும்புக்காரி; உன்னிடம் கூற முடியாது!

எங்கள் காதல் வளர வளர, அவர் வீட்டிலே, சச்சரவு வளர்ந்தது. ஜாதி, குல ஆச்சாரத்திலே, ஐயர்மார்கள் தவறிவிட்டதாலேயே காலாகாலத்தில் மழை பெய்வதில்லை என்று எண்ணுபவர் என் மாமனார். அதற்குப் பரிகாரமாக மற்ற ஜாதியார் தத்தம் ஜாதியாச்சாரத்தைச் சரியாகக் கவனிக்க வேண்டும் என்று கூறுபவர். அப்படிப்பட்ட கைலாய பரம்பரைக்காரர், சிலுவையின் தயவால் கிருஸ்தவளான சேரிப் பெண்ணைத் தன் மகன் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதிப்பாரா? வீட்டிலே புயல் அடித்தது. அவா என் காதலர்; தகப்பனார் போடும் கோட்டைத் தாண்டுபவரல்ல. ஆனால் காதல் ராஜ்யத்திலே, என் மாமனாருக்குக் கோடு போடும் அதிகாரம் ஏது? தமக்குச் சம்பந்தமில்லாத இலாக்கா என்பதை அவர் மறந்துவிட்டார். அதன் விளைவு என்னென்ன தெரியுமா? தந்தை—மகன் என்ற சம்பந்தமே அறுபட்டுப் போய்விட்டது. 'அந்தக் கிருஸ்தவச் சிறுக்கியைக் கல்யாணம் செய்து கொள்வதானால் என் முகாலோபனம் செய்யக்கூடாது. இனி நீ என் மகன் அல்ல. நட, வீட்டை விட்டு.' என்று கூறிவிட்டாராம். பழனி எங்கள் கிராமத்துக்கே வந்துவிட்டார். இரண்டு மைல்தான் இருக்கும் தாழையூருக்கும் சிங்காரபுரிக்கும். ஆனால் இரண்டு மைலை அவர் தாண்டும்போது, ஒரு உலகத்தை விட்டு மற்றோர் உலகுக்கே வந்து சேர்ந்தார் என்றுதான் அர்த்தம். அடி, அம்சா! அந்த உலகிலே, என் காதலருக்கு மாளிகை இருக்கிறது; வைரக் கடுக்கன் இருக்கிறது; தங்க அரைஞாண் இருக்கிறது; இரும்புப் பெட்டியிலே இலட்சக்கணக்கிலே கொடுக்கல் வாங்கல் பட்டி இருக்கிறது. இரட்டைக் குதிரைச் சாரட்டும், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் ஆட்களும் உள்ளனர். இரண்டே மைல் தாண்டி இங்கே வந்தார்.

என்ன இருக்கிறது? என்னுடைய பழைய வீடு! தோட்டத்திலே பூசனிக்கொடி! தெருக்கோடியில் ஒரு வெறி நாய். இவ்வளவுதான்!

'கண்ணாளா! என் பொருட்டு ஏனோ இந்தக் கஷ்டம்?' என்று நான் கனிவுடன் கேட்டேன். அவரோ, ''ஒருவருடன் வாதாடிப் பாதி உயிர்போயிற்று;இனி உன்னிடமும் வாதாட வேண்டுமா?'' என்று கேட்டார். எவ்வளவோ செல்வத்தை என் பொருட்டுத் தியாகம் செய்த அந்தத் தீரரை நான் என்ன போற்றினாலும் தகும். 'உன் அன்புக்கு ஈடாகாது அந்த ஐஸ்வரியம்' என்றார். 'உன் கண்ணொளி முன் வைரம் என்ன செய்யும்' என்று கேட்டார். 'உன் ஒரு புன்சிரிப்புக்கு ஈடோ, என் தகப்பனாரின் பெட்டியிலே கிடக்கும் பவுன்கள்' என்றார். ஒவ்வொரு வாசகத்துக்கும் முத்தமே முற்றுப் புள்ளி! காதலர் இலக்கணம் அலாதி அல்லவா! உன்னிடம் சொல்கிறேன் நான். நீயோ மரக்கட்டை!

கடைசியில், சிங்காரபுரியிலேயே அடுத்த வெள்ளிக்கிழமை கல்யாணம் என்று நிச்சயமாகிவிட்டது. யாராரோ தடுத்துப் பார்த்தார்கள் அவரை; முடியவில்லை. தாழையூர் கொதிக்கிறது. என் மாமனார் தற்கொலை செய்து கொள்ளக்கூட நினைத்தாராம்! ஆனால் ஏதோ ஒரு சிவபுராணத்திலே, ஆண்டவன் கொடுத்த உயிரை அவராகப் பார்த்து அழைக்கும் முன்னம் போக்கிக் கொள்வது மகாபாவம் என்று எழுதியிருக்கிறதாம்! இல்லையானால் இந்நேரம் எனக்கு மாமனாரும் இருந்திருக்க மாட்டார். அவர் காலமாகி ஏறக்குறைய 5 வருஷங்களாகின்றனவாம். பழனிக்கு வயது 22. அதாவது என்னைவிட 3 வயது பெரியவர் (என் வயது 19 என்று அவரிடம் சொல்லி வைத்திருக்கிறேன்!) வெள்ளிக்கிழமை நீ அவசியம் வரவேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு நீண்ட கடிதம். இன்னும்கூட ஏதாவது எழுதலாமா என்று தோன்றுகிறது. முடியாது; அதோ அவர்....

உன் அன்புள்ள,

நாகவல்லி.

"என்னைச் சித்ரவதை செய்வது, அதற்குப் பெயர், காதல்—ஏண்டா தம்பி! காதல்தானே! பெற்றெடுத்த தகப்பனைக்கூட எதிர்க்கச் சொல்கிறதாடா அந்தக் காதல்! ஊரிலே, உலகத்திலே, எவனுக்கும் ஏற்படவில்லை காதல்; உனக்குத்தானே முதலிலே உதித்தது அந்தக் காதல், என் உயிருக்கு உலை வைக்க?

''நான் தங்கள் வார்த்தையை எப்போதாவது மீறி நடந்ததுண்டா?

''மீறி நடப்பவன் மகனாவானா?''

''இது எனக்கு உயிர்ப் பிரச்னையப்பா?''

''படித்ததை உளறுகிறாயா? இல்லை, அந்தக் கள்ளி கற்றுக் கொடுத்த பாடத்தை ஒப்புவிக்கிறாயா? எனக்குக் கூடத் தெரியுமடா அழுவதற்கு! தலைதலை என்று அடித்துக் கொண்டு, ஒரு திருவோட்டைக் கையிலே எடுத்துக்கொண்டு எங்காவது தேசாந்திரம் போகிறேன். நீ திருப்தியாக வாழ்ந்து கொண்டிரு, அந்தத் திருட்டுச் சிறுக்கியுடன். ஈஸ்வரா! எனக்கு இப்படி ஒரு மகன் பிறக்க வேணுமா? மானம் போகிறதே! தாழையூரிலே தலை நிமிர்ந்து நடக்க முடியவில்லையே. அடே! நீ அவளைக் கல்யாணம் செய்து கொள்ளத்தான் வேண்டுமா? ஒரே பேச்சு, சொல்லி விடு! என் சொல்லைக் கேட்கப் போகிறாயா, இல்லை, அவளைத்தான் கலியாணம் செய்தாக வேண்டும் என்று கூறுகிறாயா? இரண்டில் ஒன்று சொல்லிவிடு.''

''நான் நாகவல்லியைத் தவிர வேறோர் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள முடியாதப்பா.''

''செய்து கொண்டால் அவளைக் கலியாணம் செய்து கொள்வது, இல்லையானால் பிரம்மச்சாரியாகவே இருந்து விடப் போகிறாயா? சரி! நீ பிரம்மச்சாரியாகவே இருந்து தொலை. உனக்கே எப்போது பித்தம் குறைகிறதோ, அப்போது பார்த்துக் கொள்வோம்...''

''அப்பா! நான் நாகவல்லிக்கு வாக்களித்துவிட்டேன்''

''தகப்பன் உயிரை வாட்டுகிறேன் என்றா?''

''இன்னும் ஒரு வாரத்தில் அவளைக் கலியாணம் செய்து கொள்வதாக.''

''பழனி! நட இந்த வீட்டைவிட்டு! என்னை இது வரை சம்மதம் தரவேண்டும் என்று ஏன் கேட்டுக் கொண் டிருந்தாய்? அவளுக்கு வாக்குக் கொடுத்தபோது, உன் புத்தி எங்கே போயிற்று? நான் ஒருவன் இருக்கிறேன் என்ற நினைப் புக்கூட இல்லை உனக்கு. இனி நீ என் மகன் அல்ல; நான் உனக்குத் தகப்பனல்ல! அடே பாவி! துரோகி! குலத்தைக் கெடுக்கப் பிறந்த கோடரிக் காம்பே!என்னை ஏன் உயிருடன் வதைக்கிறாய்? நான் தூங்கும்போது பெரிய பாராங்கல்லை என் தலைமீது போட்டுச் சாகடித்துவிடக் கூடாதா? என் சாப்பாட்டிலே விஷத்தைக் கலந்துவிடக் கூடாதா? என் பிணம் வெந்த பிறகு நீ அந்தக் கிருஸ்தவளை மணம் செய்து கொள்ளடா, மகாராஜனாக!''

''அப்பா! நான் இதுவரை தங்களிடம் இப்படிப்பட்ட கடுமையான பேச்சைக் கேட்டதில்லையே!''

''அடே! பேசுவது நீ அல்ல! போதையிலே பேசுகிறாய். நாகத்தைத் தீண்டியதால் மோகம் என்ற போதை உன் தலைக்கு ஏறிவிட்டது.''

''மோகமல்ல அப்பா! காதல்; உண்மைக் காதல்!''

''நாடகமா ஆடுகிறாய்?''

''என் உயிர் ஊசலாடுகிறதப்பா!''

இப்படிப்பட்ட கடுமையான உரையாடலுக்குப் பிறகு தான், பழனி, வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினான், தகப்ப னாரையும் அவருடைய தனத்தையும் துறந்து. நாகவல்லி, தன் சினேகிதை அம்சாவுக்கு,தனக்கு ஏற்பட்ட காதல்வெற்றி யைப் பற்றிக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தபோது, பழனி

நைடதம் படித்துக் கொண்டிருந்தான். நளனும் தமயந்தியும் காதல் விளையாட்டிலே ஈடுபட்ட கட்டத்தைப் படித்த போது அவனுக்கு, செய்யுளின் சுவையை நாகவல்லிக்கு கூற வேண்டுமென்று எண்ணம் பிறந்தது. உள்ளே நுழைந்தான், கடிதத்தை எடுத்தான், படித்தான், களித்தான், பரிசும் தந்தான். வழக்கமான பரிசுதான்! அவனிடம் வேறு என்ன உண்டு தர? குழந்தைவேல் செட்டியார் கலியாணத்துக்குச் சம்மதித்திருந்தால், வைரமாலை என்ன, விதவிதமான கைவளைகள் என்ன, என்னென்னமோ தந்திருப்பான். இப்போது தரக் கூடியதெல்லாம் மணப்பெண்ணுக்கு மாப் பிள்ளை முத்தாரமன்றி வேறோர் ஆபரணம் தரவில்லை. அதுபோதும் என்றாள் அந்தச் சரசி! வயோதிகக் கணவன் தரும் வைரமாலை, இதற்கு எந்த விதத்திலே ஈடு?

நாகவல்லியின் கடிதம் முடிகிற நேரத்தில்தான், ஒரே மகனைக்கூட வீட்டைவிட்டு வெளியேற்றிவிடும் அளவுக்கு வைராக்யம் கொண்ட சனாதனச் சீலர் குழந்தைவேல் செட்டியாரைத் தாழையூர் சத்சங்கம் பாராட்டிக்கொண்டிருந்தது. ஊர்வலமாக அவர் அழைத்துச் செல்லப்பட்டபோது, அவருடைய எதிரிலே, நாகவல்லியும், பழனியும் கைகோர்த்துக் கொண்டு நின்று கேலியாகச் சிரிப்பது போலத் தோன்றிற்று. திடசித்தத்துடன், மகனை வீட்டை விட்டுத் துரத்திவிட்டாரே தவிர, மனது கொந்தளித்தபடி இருந்தது. அவரையும் அறியாது அழுதார். ஆனந்த பாஷ்பம் என்றனர் அன்பர்கள்!

வெள்ளிக்கிழமை, பழனி—நாகவல்லி வாழ்க்கை ஒப்பந்தம் பத்தே ரூபாய் செலவிலே விமரிசையாக நடைபெற்றது. ஜில்லா ஜட்ஜு ஜமதக்னி தலைமை வகித்தார்.

பச்சை, சிவப்பு, ஊதா, நீலம் முதலிய பல வர்ணங்களிலே பூ உதிர்வது போன்ற வாணவேடிக்கை! அதிர்வேட்டு தாழையூரையே ஆட்டிவிடும் அளவுக்கு. அழகான தங்க நாயனத்தை அம்மையப்பனூர் ஆறுமுகப்பிள்ளை, வைர மோதிரங்கள் பூண்ட கரத்திலே ஏந்திக் கொண்டு, தம்பிரான் கொடுத்த தகட்டியை, ஜெமீன்தார் ஜகவீரர் பரிசாகத்

தந்த வெண்பட்டின் மீது அழகாகக் கட்டிவிட்டு, ரசிகர்களைக் கண்டு ரசித்து நிற்க, துந்தபிகான துரைசாமிப் பிள்ளை, விட்டேனா பார் என்ற வீரக் கோலத்துடன் தவுலை வெளுத்துக் கொண்டிருந்தார், பவமறுத்தீஸ்வரர் பிரம்மோத்சவத்தின் ஆறாம் திருவிழாவன்று. அன்று உபயம், ஒரே மகனையும் துறந்துவிடத் துணிந்த உத்தமர் குழந்தைவேல் செட்டியாருடையது. அன்று மட்டுமல்ல, செட்டியார் ஒவ்வொர் நாளும் அதுபோன்ற ஏதாவதோர் "பகவத் சேவா" காரியத்திலேயே ஈடுபட்டுக் கொண்டிருந்தார். பணமும், பகவானுடைய சேவையினால் மளமளவென்று பெட்டியை விட்டுக் கிளம்பியபடி இருந்தது. ஊரெங்கும் செட்டியாரின் தர்ம குணம், பகவத் சேவை இவை பற்றிய பேச்சு. "இருந்தால் அப்படி இருக்கவேண்டும். மகனென்றுகூடக் கவனிக்கவில்லை; ஜாதியைக் கெடுக்கத் துணிந்தான் பழனி! போ வெளியே என்று கூறிவிட்டார். இருக்கிற சொத்து அவ்வளவும் இனிப் பகவானுக்குத்தான் என்று சங்கல்பம் செய்து கொண்டார்" என ஊர் புகழ்ந்தது. பழனியின் நிலைமையோ?

"உன் தகப்பனார் பெரிய வைதீகப்பிச்சு அல்லவா? அவரைத் திருத்த முடியாத நீ, ஊரைத் திருத்த வந்துவிட்டாயே, அது சரியா?"

"தகப்பனார் பேச்சைக் கேட்காதவனுக்குத் தறுதலை என்று பெயர் உண்டல்லவா? நீ ஏன் பழனி என்று பெயர் வைத்துக் கொண்டாய்? தறுதலை என்ற பெயர்தானே பொருத்தம்?"

இப்படிப்பட்ட கேள்விகள், அவற்றுக்கு எவ்வளவு சாந்தமான முறையிலே பதில் கூறினாலும் கலவரம், கல்லடி, இவைதான் பழனி பெற்று வந்த பரிசுகள். பல இலட்சத்தைக் கால் தூசுக்குச் சமானமாகக் கருதி, தன் கொள்கைக்காக, காதலுக்காக, தியாகம் செய்த அந்தத் தீரன், சீர் திருத்தப் பிரசாரத்தில் ஈடுபட்டு, ஊரூர் சென்று சொற்பொழிவு செய்வதை மேற்கொண்டான், ஒரு வேலைக்கும் போகாமல்! அவனுக்கு "மகாஜனங்கள்" தந்த பரிசுகள்

இவை. காதலின் மேம்பாட்டை உணர மறுத்து, கலியாணம் என்பது, கட்டளையாக இருக்கக் கூடாது, நிர்ப்பந்தமாக இருத்தலாகாது, பரஸ்பர அன்பும், சம்மதமும் இருக்க வேண் டும், காதலர் கருத்து ஒருமித்து வாழ்வதே இன்பம் என்பன போன்ற கொள்கைகளை ஏற்க மறுத்து, ஜாதீப்பீடையை ஆண்டவன் ஏற்பாடு என்று விடாப்பிடியாகக் கொண்டு, ஒரே மகனை உலகில் பராரியாக்கிவிட்டு, பகவத் கைங்கரியம் என்ற பெயரால், சொத்தை விரயம் ஆக்கிக் கொண்டிருந்த குழந்தைவேல் செட்டியார், ''தர்மிஷ்டர், சனாதன சீலர், பக்திமான்,'' என்று கொண்டாடப்பட்டார். கோயில் மாலை அவருடைய மார்பில்! ஊர்க்கோடியில் உலவும் உலுத்தர்கள் வீசும் கற்கள், பழனியின் மண்டையில்! பழனி மனம் உடைய வில்லை. நாகவல்லியின் அன்பு அவனுக்கு, எந்தக் கஷ்டத் தையும் விநாடியிலே போக்கிவிடும் அபூர்வ மருந்தாக இருந் தது.

''இன்று எத்தனை கற்கள்?'' என்றுதான் வேடிக்கை யாகக் கேட்பாள் நாகவல்லி.

''பெரிய கூட்டம். வாலிபர்கள் ஏராளம். நாகு! பெண் கள்கூட வந்திருந்தார்கள்!'' என்று கூட்டத்தின் சிறப்பைக் கூறுவான் பழனி. இவ்விதமாக வாழ்க்கை ஒரே ஊரில் அல்ல! நாகவல்லி ஆறு மாதத்துக்குள் ஒரு ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு மாற்றப்படுவது வழக்கமாகிவிட்டது. அவள் மேல் குற்றம் கண்டு பிடித்ததால் அல்ல; கணவன், சூனாமானாவாமே என்ற காரணத்தால். கஷ்ட ஜீவனந் தான். ஆனால், மற்றக் குடும்பங்கள், வீடு வாங்கினோம், நிலம் வாங்கினோம், இரட்டை பேட்டைச் செயின் செய் தோம். இரண்டுபடி கறக்கும் நெல்லூர்ப் பசு வாங்கினோம் என்று பெருமை பேசினரே தவிர, வாங்கின வீட்டுக்கு மாடி இல்லையே, நிலம் ஆற்றுக்கால் பாய்ச்சல் இல்லையே, செயின் எட்டுச் சவரன்தானே—பசு வயதானதாயிற்றே என்ற கவலையுடனேயே இருந்தன. நாகவல்லி பழனி குடும் பத்துக்கு அத்தகைய பெருமையும், கவலையும் கிடையாது.

''நாகு! தெரியுமா விசேஷம்?''

''என்ன, எந்தக் கோட்டையைப் பிடித்துவிட்டீர்கள்?''

''இடித்துவிட்டேன், கண்ணே!''

''எதை?''

''மருங்கூர் மிராசுதாரரின் மனக்கோட்டையை! அவர் தன்னுடைய கிராமத்திலே எவனாவது சீர்திருத்தம், சுய மரியாதை என்று பேசினால் மண்டையைப் பிளந்துவிடுவேன் என்று ஜம்பமடித்துக் கொண்டிருந்தாரல்லவா? நேற்று, அந்த மனக்கோட்டையை இடித்துத் தூள்தூளாக்கிவிட்டேன். பெரிய கூட்டம்! பிரமித்துப் போய்விட்டார்,''

''சரியான வெற்றி! எப்படி முடிந்தது.''

''ஒரு சின்னத் தந்திரம்! மிராசுதாரர் மருமகன் இருக்கிறானே, அவனுக்கும் மிராசுதாரருக்கும் மனஸ்தாபமாம். யுக்தி செய்தேன். அந்த மருமகனைத் தலைவராகப் போட்டுக் கூட்டத்தை நடத்தினேன். மிராசுதாரர் 'கப்சிப்' பெட்டிப் பாம்பாகிவிட்டார்.''

''அவன் நமது இயக்கத்தை ஆதரிக்கிறானா?''

''இயக்கமாவது, அவன் ஆதரிப்பதாவது, அவனுக்கு என்ன தெரியும்? ஒப்புக்கு உட்கார வைத்தேன்.''

''என்னதான் பேசினான்?''

''அவனா? நாகா! நீ வரவில்லையே! வந்திருந்தால், வயிறு வெடிக்கச் சிரித்துவிட்டிருப்பாய், அவன் பேச்சைக் கேட்டு.''

''ரொம்ப காமிக் பேர்வழியோ?''

''காமிக்குமில்லை, கத்தரிக்காயுமில்லை! அவன் உலக மறியாதவன். ஆரம்பமே, எப்படித் தெரியுமோ? ''ஏலே! யார்டா அவன், காத்தானா? உட்காரு கீழே. இப்ப, பிர

சங்கம் நடக்கப் போவுது. கப்சிப்னு சத்தம்செய்யாமே கேட்க வேணும். எவனாவது ஏதாச்சும் சேஷ்டை செய்தா தோலை உரிச்சுப் போடுவேன். ஆமாம்!''—இதுதான், நாகு! அவன் பிரசங்கம்.''

''அட இழவே! இந்த மாதிரி ஆட்களைச் சேர்த்தால் இயக்கம் கெட்டுத்தானே போகும்.''

''சேர்க்கறதாவது! நடக்கறதாவது! கூட்டம் நடத்தவே வழி கிடைக்காமே இருந்தது. அதற்காக அந்த ஆளை இழுத்துப் போட்டேன். கூட்டம் முடிந்ததும் பத்துப் பேருக்கு மேலே, மிகத் தீவிரமாகிவிட்டார்கள். இனி, யார் தயவும் வேண்டாம்; நாமே கூட்டம் போடலாம் என்று சொன்னார்கள்.''

இப்படிப்பட்ட பேச்சுத்தான், பழனி—நாகவல்லிக்கு! வேறு என்ன பேச முடியும்? புதிய பங்களாவைப் பற்றியா, பவள மாலையைப் பற்றியா?

''எங்கே நாகு, செயின்?''

''பள்ளிக்கூடத்தில்!''

''என்ன விளையாட்டு இது? கழுத்தே அழகு குன்றி விட்டது, அந்தச் செயின் இல்லாமல். எங்கே செயின்?''

''சேட் லீலாராமிடம் 25—க்கு அடகு வைத்திருக்கிறேன்.''

''ஏன்?''

''சும்மா, தமாஷுக்கு! அந்த மிராசுதாரின் மருமகனைச் சொல்லிவிட்டீர், உலகமறியாதவன் என்று. இன்னும் மூன்று மாதத்திலே தகப்பனாராகப் போகிற விஷயம் கூட உங்களுக்குத் தெரியவில்லை. இருபத்து ஐந்து ரூபாய் வாங்கித்தான், இரண்டு மாத டாக்டர் பில் கொடுத்தேன். மிச்சமிருந்த பத்து ரூபாய்க்கு பெர்னாட்ஷா வாங்கினேன்.''

பழனியின் குடும்பக் கணக்கு இவ்விதம் இருந்தது. அதே நேரத்தில், குழந்தை வேலச்செட்டியார் தன் குமாஸ்தாவிடம் சொல்லிக் கொண்டிருப்பார், கணக்கு:

| | ரூ. | பை |
|---|---|---|
| வட்டி வரவு வடிவேல் பிள்ளை மூலம் | 650 | 00 |
| வாடகை வரவு வில்வசாமி மூலம் | 400 | 00 |
| நெல் விற்ற வகையில் வரவு | 2600 | 00 |
| நேத்திரானந்தர் மடத்துக் கைங்கரியச் செலவு | 600 | 00 |
| பிக்ஷாண்டார் கோயில் வாகன கைங்கரியச் செலவு | 1260 | 00 |
| பிடில் சுந்தரேச ஐயர் மகள் கலியாணச் செலவு | 302 | 00 |
| வாணக் கடைக்கு | 46 | 00 |
| பூப்பல்லக்கு ஜோடிக்க | 260 | 00 |

என்று இவ்விதம், செட்டியார் வீட்டிலே சூடிக் கொள்வதற்கு ஆளில்லாததால் மூலையில் குவிந்த மலர் மாலைகள். பழனியின் மடியில் மலர்ந்த தாமரை போன்ற முகம், அதிலே ரோஜா போன்ற கன்னம், முத்துப்பற்கள், அவைகளைப் பாதுகாக்கும் பவள இதழ், பவுன்நிற மேனி...ஏழ்மை, ஆனாலும், கொள்கையின்படி வாழ்வு அமைந்ததால் இன்பம் அங்கே. செல்வம், ஆனால் மனம் பாலைவனம்—செட்டியார் வீட்டில்.

பழனி பராரியாகி, சோற்றுக்கே திண்டாடி, மனைவியால் வெறுக்கப்பட்டுத் தன் வீட்டு வாயிற்படிக்கு வந்து நின்று, ''அப்பா! புத்தியில்லாமல் ஏதோ செய்து விட்டேன். பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்று கெஞ்ச வேண்டும். ''சீ நீசா! என் முகத்தில் விழிக்காதே! உன்னைக் கண்டாலே நரகம் சம்பவிக்கும்'' என்று ஏசவேண்டும்; பழனி கதற வேண்டும்; பிறகு, அவனை மன்னித்து உள்ளே சேர்த்துக் கொள்ளவேண்டும்—இதுவே செட்டியாரின் நித்யப் பிரார்த்தனை. எந்தத் தெய்வத்திடம் மனுச்செய்தும், மகன் வாயற்படி வரவும் இல்லை; வறுமையால் தாக்கப்பட்டதற்காக, மனம் மாறினதாகவும் தகவலில்லை.

''கை கோர்த்துக்கொண்டு கலகலவென்று சிரித்துக் கொண்டே போனார்கள்.''

''பழனி, ராஜா போலத்தான் இருக்கிறான்.''

''ரொம்ப அழகாகப் பேசுகிறான்.''

''நேற்றுக் கூட்டத்திலே கல்விழுந்தபடி இருந்தது. பழனி கொஞ்சம்கூடப் பயப்படாமல் பேசிக் கொண்டே இருந்தான்'' என்றெல்லாம் செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. ஒவ்வோர் செய்தியும் செட்டியாருக்குச் செந்தேள் தான்! துடித்தார், அவன் துயரமின்றிச் சந்தோஷமாக வாழ் கிறான் என்று கேட்டு. தகப்பனார் மகன் விஷயமாக கொள் ளக்கூடிய உணர்ச்சியல்லதான். ஆனால் குழந்தைவேல் செட்டியார், பழனியைத் தன் மகன் என்று எண்ணவில்லை; தன் பணத்தை அலட்சியப்படுத்திய ஆணவக்காரன் என்றே எண்ணினார்.

''இருக்கட்டும், இருக்கட்டும்; அவள் எத்தனை நாளைக்கு இவனிடம் ஆசை காட்டப் போகிறாள்? முத லிலே கோபித்துக் கொண்டாலும் பிறகு சமாதானம் ஆகி விடுவார். அப்போது சொத்து பழனிக்குத் தரப்படும், நாம் சொகுசாக வாழலாம் என்று அந்தச் சிறுக்கி எண்ணிக் கொண்டுதான் என் மகனைத் தன் வலையிலே போட்டுக் கொண்டாள். கடைசிவரை ஒரு பைசாகூட நான் தரப் போவதில்லை என்று தெரிந்தால் ''போய்வாடா'' என்று கூறிவிடுவாள்! பயல், வந்து சேருவான்! பணத்தாசையால் தானே அவள் அவனை மயக்கி வைத்தாள்'' என்று எண்ணி, மனதைத் தேற்றிக் கொள்வார். அவருக்கென்ன தெரியும், அவர்கள் சிருஷ்டித்துக் கொண்ட இராஜ்யத்திலே, பணத் துக்கு அல்ல மதிப்பு என்பது!

**ம**றையூர், நால்வரின் பாடல் பெற்ற ஸ்தலமல்ல. ஆனால் அதற்கு அடுத்த படிக்கட்டிலிருந்த அடியார்கள் பலர் அந்த க்ஷேத்திரத்தைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். அங் கிருந்த ஒரு மண்மேடு; ஒரு காலத்தில் மால்மருகன் கோயி

லாக இருந்ததென்று வைதிகர்கள் கூறுவர். குழந்தைவேல் செட்டியாருக்கு, மறையூர் முருகன் கோயிலை அமைக்கும் திருப்பணியின் விசேஷத்தைத் தாழையூர் சனாதனிகளும், மறையூர் வைதிகர்களும் கூறினர். அவரும் வெகுகாலத்துக்கு முன்பு கலனாகிப்போன திருக்கோயிலை மீண்டும் அமைத்துத் தரும் பாக்கியம் தமக்குக் கிடைத்ததே என்று பூரித்தார். பணத்துக்குக் குறைவில்லை. ஆகவே, நினைத்த மாத்திரத்தில் ஆள், அம்பு, தளவாடங்கள் வந்து சேர்ந்தன. செட்டியார் மறையூர் முகாம் ஏற்படுத்திக் கொண்டு,கோயில் வேலையை ஆரம்பித்து விட்டார். பல ஊர்களிலிருந்து கட்டட வேலைக்காரர்கள், சிற்பிகள், ஓவியக்காரர், கூலிகள் ஆகியோர் மறையூர் வந்து குவிந்தனர். மறையூர் சேரிக்குப் பக்கத்திலே, நூறு குடிசைகள் புதிதாக அமைக்கப்பட்டு, அவைகளிலே கூலி வேலை செய்பவர்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதிகாலை எழுந்திருப்பார். காலைக் கடனை முடித்துக்கொண்டு, திருப்பணியைக் கவனிப்பார். அரைத்த சுண்ணாம்பை எடுத்துப் பார்ப்பார்; செதுக்கிய கம்பங்களைத் தடவிப் பார்ப்பார்; வேலையாட்களைச் சுறு சுறுப்பாக்குவார்; சோலையிலே புஷ்பங்கள் மலரத் தொடங்கியதும் வண்டுகள் மொய்த்துக் கொள்வது போல, மறையூரில் வேலையாட்கள் குழுமிவிட்டனர். ஒவ்வோர் மாலையும், அங்கிருந்த பெரிய ஆலமரத்தடியிலே அமர்ந்து அன்றாடக் கூலியைத் தருவார்.

பழனிமேல் ஏற்பட்ட கோபம், செட்டியாரின் சொத்தை மதிலாகவும், பிரகாரமாகவும், திருக்குளமாகவும், மண்டபமாகவும் மாற்றிக் கொண்டிருந்தது. இந்தக் கோயில் கட்டும் வேலையிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த வேலையாட்களிலே, பெண்களும் ஏராளம். அவர்களிலே குமரி ஒருவள். மாநிறம், ஆனால் உழைப்பால் மெருகேறின உடல். குறுகுறுப்பான பார்வை. இயற்கையான ஓர் புன்னகை தவழ்ந்தபடி இருக்கும். என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் மெல்லிய குரலிலே ஏதாவது பாடிக் கொண்டே இருப்பாள். இருபதுக்குள்தான் வயது. பருவ கெர்வத்துடன் விளங்கும்

அப் பாவையின் பார்வையிலேயே ஒருவித மயக்கும் சக்தி இருந்தது. கொச்சைப் பேச்சோ, வேதாந்திக்குக்கூட இச்சையைக் கிளறிவிடுவதாக இருக்கும். அவள் கோபமே கொள்வதில்லை.

''எலே! குட்டி! என்ன அங்கே குரங்கு ஆட்டம் ஆடறே!'' என்று மேஸ்திரி முத்துசாமி மிரட்டுவான்; குமரி பயப்படவுமாட்டாள்; கோபிக்கவுமாட்டாள். ''அண்ணி, காலையிலே சண்டை போட்டுதா?'' என்று கேலி பேசுவாள். கடைக்கண்ணால் பார்ப்பது குமரிக்கு வழக்கமாகிவிட்டது. கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே, முக வாய்க்கட்டையில் கைவைத்துவிட்டு, கழுத்தை ஒரு வெட்டு வெட்டி, ''அடே, அப்பா! காளை மாடு மாதிரி விழிக்கிறான் பாரு. ஏமாறுகிறவ நான் இல்லை. அதுக்கு வேறே ஆளைப் பாருடா, ராசாதேசிங்கு'' என்று குறும்பாகப் பேசுவாள், யாராவது அவளிடம் கொஞ்சம் அப்படி இப்படி நடக்க நினைத்தால்.''

'குட்டி பார்ப்பதும், சிரிப்பதும், குலுக்கி நடப்பதும், வெடுக்கென்று பேசுவதும் பார்த்தா, தொட்டால் போதும் என்று தோன்றுகிறது; கிட்டே போனாலோ, நெருப்பு. நெருப்பிடம் போவது போலச் சீறி விழுகிறாளே, இப்படி ஒருவள் இருப்பாளா?' என்று பல பேர் தோல்விக்குப் பிறகு பேசிக் கொள்வார்கள். குமரிக்கு அங்கிருந்தவர்களின் சுபாவம் நன்றாகத் தெரியும். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வழியும் தெரியும். அதற்காக வேண்டி, யாருடனும் பழகாமலும் இருக்க மாட்டாள். தாராளமாகப் பழகுவாள். ஆனால் 'கெட்ட பேச்சு' வரும் என்று தெரிந்தால் போதும்; வெட்டி விடுவாள். காற்றிலே அலையும் ஆடையைச் சரிப்படுத்த நிற்பாள், குறும்புக்காரரின் கண்கள் தன்மீது பாய்வதைக் காண்பாள், முகத்தை எட்டுக் கோணலாக்கிக் காட்டுவாள். அண்ட முடியாத நெருப்பு அவள். அவள் அண்ணனோ, மகா கோபக்காரன். குமரியைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற நாணயமான கருத்தைக் கொண்டவர்கள்கூடச் சொக்கனிடம் (குமரியின் அண்ணனிடம்) கேட்கப் பயப்படுவார்

கள். தாய் தந்தை இருவரும் இல்லை. தங்கைக்கு அண்ணன் துணை; அண்ணனுக்குத் தங்கை துணை. இருவருக்கும் ரோஷ உணர்ச்சியே பலமான கவசம்.

குமரி, வேலை செய்யுமிடத்திலே இருந்தவரனைவரையும் 'எடை' போட்டு விட்டாளே தவிர, செட்டியாரை அவள் சரியாக எடை போடவில்லை. பாவம், பெரிய மனுஷர்! மெத்தாதி, உபகாரி, ஏழைகளிடம் இரக்கம் உள்ளவர் என்றுதான் குமரியும், மற்றவர்களைப் போலவே அவரைப் பற்றித் தெரிந்திருந்தாள். மற்றவர்களிடம் பேசுவதைவிட, அவரிடம் கொஞ்சம் அடக்கமாகவே பேசுவாள். "யாரங்கே! மணல் ஏன் இப்படிச்சிதறி இருக்கு? பகவானுக்கான காரியம். பாவ புண்யம் பார்த்து வேலை செய்யுங்கள். கேவலம், பணத்தை மட்டும் கவனித்தால் சரி இல்லை" என்று செட்டியார் சொல்வார். மற்றவர்கள் முணுமுணுத்தாலும் குமரி மட்டும் குறைகூறமாட்டாள். ஓடிப்போய், மணற் குவியலைச் சரிசெய்வாள்.

மீனா, ஒரு குறும்புக்காரி; கொஞ்சம் கைகாரியுங்கூட! அதற்காகவே அவளுக்கு, மேஸ்திரி ஒருநாள் தவறாமல் வேலை கொடுப்பான். இடுப்பிலே கூடை இருக்கும்; அது நிறைய மணல் இருக்காது. ஒய்யார நடை நடப்பாள். 'பாக்கு இருக்கா அண்ணே! ஒரு வெத்திலைச் சருகு கொடுடி முனி!' என்று யாரையாவது ஏதாவது கேட்டபடி இருப்பாள். கொடுத்தாக வேண்டுமென்பதில்லை; மேஸ்திரியிடம் பேசுவதிலே ரொம்ப குஷி அவளுக்கு. அவனுக்கும்தான்.

"மேஸ்திரியாரே! இருக்குதா?"

"கருக்கு மீசைக்காரனை, இருக்குதான்னு கேக்கறியே!"

"நான் எதைக் கேக்கறேன்? நீ எதைச் சொல்கிறே!"

"கேட்டதற்குப் பதில். நீ என்ன இருக்கான்னு கேட்டே."

"கொஞ்சம் புகையிலை கேட்டேன்."

"காரமா இருக்கும்."

''பரவாயில்லை. அந்தக் காரத்தைக் காணாதவளா நானு? கொடுங்க இருந்தா''—இப்படிப் பேச்சு நடக்கும். இருவரும் பேசும்போது மற்றப் பெண்கள் இளித்துக் கொண்டு நிற்பார்கள். விடமாட்டாள் மீனா.

''ஏண்டி! என்னமோ காணாததைக் கண்டவங்க மாதிரி முழிச்சிக்கிட்டு இருக்கறிங்க.''

''ஒண்ணுமில்லையே அக்கா.''

''அக்காவா நானு? இவ கொழந்தை! வயது பதனாறு.''

இவ்விதம் வேடிக்கையாகப் பேசுவாள், மற்றப் பெண்களிடம். சிறுங்கல், தலையில் கட்டிய பாகை, வெத்திலைப்பை இவைகள் அடிக்கடி, மீனாமீதுதான் விழும். மேஸ்திரி இவைகளை அடிக்கடி வீசுவார்; அவள் ஏசமாட்டாள். அவளுக்கு அவன் கொடுத்து வந்த எட்டணா கூலி, இந்த விளயாட்டுக்கும் (விபரீதமற்ற) சேர்த்துத்தான்.

ஒரு கெட்ட வழக்கம் மீனாவுக்கு! முடிபோட்டு விடுவாள்! திடீர் திடீரென்று தன் மனம் போன போக்கிலே ஜோடி சேர்த்து விடுவாள்—கற்பனையாகவே! அவளுடைய 'ஆருடம்' பல சமயங்களிலே பலித்ததுண்டு, ''உன் பல் ரொம்பப் பொல்லாதது. ஒன்றும் சொல்லிவிடாதேடியம்மா'' என்று கெஞ்சுவார்கள் மற்றவர்கள். 'இல்லாததை நான் சொல்லமாட்டேன்' என்று கூறுவாள் மீனா.

மீனாவின் கண்களுக்குத்தான் முதலில் தெரிந்தது, குமரியின் மீது செட்டியாரின் நோக்கம் செல்வது! குமரிக்குத் தெரிவதற்கு முன்பே மீனாவுக்குத் தெரிந்துவிட்டது! குமரி, எந்தப் பக்கத்திலே வேலை செய்து கொண்டிருந்தாலும் அந்தப் பக்கம்தான செட்டியார் அடிக்கொரு தடவை வருவார். மற்றவர்களை, 'இதைச் செய், அதைச் செய்' என்று நேரிலே கூப்பிட்டுச் சொல்வதற்குப் பதில், குமரியைக் கூப்பிட்டனுப்பி அவள் மூலமாகவே சொல்லி அனுப்புவார். அதாவது, குமரியை அடிக்கடி தன் பார்வையிலே வைத்துக் கொண்டி

ருக்கச் செட்டியார் ஆசைப்பட்டார். எத்தனை நாளைக்குச் செடியிலே இருக்கும் மலரைப் பார்த்து மகிழ்வதோடு இருக்க முடியும்? ஒருநாள் பறித்தே விடுவது என்று தீர்மானமாகித் தானே விடும்! உலகமறிந்தவள் மீனா. ஆகவே உருத்திராட்சம் அணிந்தால் என்ன, விபூதி பூசினாலென்ன, நல்ல முக வெட்டுக்காரியிடம், மனம் தானாகச் சென்று தீரும். அதிலும், கள்ளங்கபடமற்ற குமரியிடம் காந்த சக்தி இருக்கிறது என்பதை அவள் அறிவாள். ஆகவே செட்டியார், குமரியைக் கூப்பிட்டு அனுப்புவது போதாதென்று, மீனாவே சில சமயங்களிலே, குமரியை, ''செட்டியாரிடம் போய் 'சுண்ணாம்பு அறைத்தது சரியா இருக்கா என்று கேட்டுவா, நாளைக்குப் பிள்ளையார் பூஜைக்கு மகிழம்பூ வேண்டுமா என்று கேட்டுவா'' என்று ஏதாவது வேலை வைத்து அனுப்புவாள்.

பாபம்! ஒவ்வொரு தடவையும் குமரி தபால் எடுத்துக் கொண்டு மட்டும் போகவில்லை, மையலையும் தந்துவிட்டு வந்தாள்—அந்தப் பக்தருக்கு, தன்னையும் அறியாமல். அவள் சேதியைக் கூறுவாள். அவரோ அவளுடைய சுந்தரத்தைப் பருகுவார். எவ்வளவு இயற்கையான அழகு! கண்களிலே என்ன பிரகாசம்! உடல் எவ்வளவு கட்டு! இவ்வளவுக்கும் ஏழை! அன்றாடம் வேலை! அழுக்கடைந்த புடவை! உப்பிரஜாதி (ஒட்டர்) மாளிகையிலே உலவவேண்டிய சௌந்தரியவதி என்று எண்ணிப் பரிதாபப்படுவார். ஒருநாள், கையில் சுண்ணாம்புக்கறை படிந்திருந்ததைக் கழுவ எண்ணி, 'குமரி! கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரச் சொல்லு'' என்றார் செட்டியார். வழக்கமாக, மேஸ்திரிதான் தண்ணீர் கொட்டுவார். அவர் முதலியார் வகுப்பு. அன்று மேஸ்திரிக்கும் மீனாவுக்கும் பலமான பேச்சு, ''ஆண் உசத்தியா, பெண் உசத்தியா'' என்று. ஆகவே குமரி கூப்பிட்டும அவர் வரவில்லை. சரேலெனத் தண்ணீர்ச் செம்பை எடுத்துக் கொண்டு குமரியே போனாள். செட்டியாரும் எங்கேயோ கவனமாக இருந்ததால், தண்ணீர் எடுத்து வந்தது யார் என்றுகூடக் கவனிக்காமல், கையை நீட்டினார். குமரி தண்ணீர் ஊற்றினாள். ''போதுண்டா'' என்றார் செட்டியார். அவருடைய

நினைப்பு தண்ணீர் கொட்டியது மேஸ்திரிதான் என்பது. குமரி களுக்கென்று சிரித்துவிட்டாள். செட்டியாருக்கு அப்போதுதான் விஷயம் விளங்கிற்று. அதுவரை அவர் உப்பிர ஜாதியாள் தொட்ட தண்ணீரைத் தொட்டதில்லை. என்ன செய்வது, அவள் அன்போடு அந்தச் சேவை செய்தாள். எப்படிக் கோபிப்பது! ''நீயா?'' என்று கேட்டார். ''ஆமாங்க! மேஸ்திரிக்குத்தான் வேலை சரியாக இருக்கே, அதனாலேதான் நான் எடுத்து வந்தேன். தப்புங்களா? கையைத்தானே கழுவிக் கொண்டீங்க; உள்ளுக்குச் சாப்பிட்டாதானே தோஷம்?'' என்று கேட்டாள். தொட்ட நீரைத் தொடுவதுகூடத் தோஷம் என்பதுதான் செட்டியாரின சித்தாந்தம். ஆனால் அந்தப் பெண், சூதுவாதறியாது சொன்னபோது என்ன செய்வார். செட்டியார் ஒருபடி முன்னேறினார். ''உள்ளுக்குச் சாப்பிட்டாத்தான் என்னாவாம். குடலா கருக்கும்!'' என்றார். ''எல்லாம் மனசுதானுங்களே காரணம்!'' என்று கொஞ்சும் குரலில் கூறினாள் குமரி. ''அதுசரி! ஆமாம்!'' என்று கூறிவிட்டு, விரைவாக உள்ளே போய்விட்டார். அவள் விட்டாளா! கூடவே சென்று செட்டியாரின் நெஞ்சிலே புகுந்து கொண்டாள். எல்லாம் மனம் தானே! சிவப்பழமாக இருந்தால் என்ன? மனந்தானே அவருக்கும்.

''**யா**ரை நிறுத்தினாலும் நிறுத்திவிடுவார். குமரியை மட்டும் நிறுத்தவே மாட்டார்.''

''ஏன்? என்னா விஷயம்?''

''செட்டியாருக்கு அவளைப் பார்க்காவிட்டால், உசிரே போய்விடும்.''

''அம்மா! அவ்வளவு சொக்குப்பொடி போட்டுவிட்டாளா அந்தச் சிறுக்கி?''

''பொடியுமில்லை, மந்திரமுமில்லை! அவளைக் கண்டவன் எவன்தான் தேனில் விழுந்த ஈ போலாகாமலிருக்கிறான்? அவகூடக் கிடக்கட்டும், கொஞ்சம் மூக்கும் முழியும் சுத்தமா ஒரு பெண் இருந்தா எந்த ஆம்பிள்ளை, விறைக்க விறைக்கப்

பார்க்காமே இருக்கிறான்? செட்டியார், என்னமோ கோயில் கட்டலாமென்றுதான் வந்தார். அவர் கண்டாரா, இங்கே இந்த ''குண்டு மூஞ்சி'' இருப்பாளென்று!

''செட்டியார் மேலே பழி போடாதே. அந்த ஆசாமி ரொம்ப வைதீகப் பிடுங்கல். அவ, கைபட்ட தண்ணீரைக் கூடத் தொடமாட்டார். ஒரே மகன் அவருக்கு. ஜாதியை விட்டு ஜாதியிலே சம்பந்தம் செய்கிறானென்ற உடனே, போடா வெளியே என்று கூறிவிட்டவர்.''

''மவனுக்குச் சொன்னாரு, அப்பாவா இருந்ததாலே! இவருக்கு எந்த அப்பன் இருக்காரு, போ வெளியேன்னு சொல்ல?''

மேஸ்திரி, மீனாவிடமிருந்து தெரிந்து கொண்ட இரக சியத்தைச் சமயம் வரும்போது தனக்குச் சாதகமாக உப யோகித்துக் கொள்ளலாம் என்று எண்ணி, மேற்கொண்டு தகவல்களைக் கேட்டறிய விரும்பினான். மீனா, மேஸ்திரி யின் ஆவலைத் தெரிந்து கொண்டு சிரித்தபடி, ''செச்சே! நீ அதுக்குள்ளே எல்லாம் முடிஞ்சு போச்சின்னு நினைக்காதே. செட்டியாருக்கு அவகிட்ட கொள்ளை ஆசை இருக்கு. ஆனா பயமோ மலையத்தனை இருக்குது. மேலும், குமரி வேடிக் கையாகப் பேசுவாளே தவிர, ரொம்ப ரோஷக்காரி. அத னாலே, செட்டியார் ஏதாவது இளிச்சா, அவ அண்ணனிடம் சொல்லிவிடுவா. சும்மா பார்க்கறதும், சிரிச்சிப் பேசறதுமா இருக்க வேண்டியதுதான்'' என்று கூறினாள். உண்மையும் அதுதான். செட்டியார் குமரியின் பார்வையையே விருந் தாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். ஜாதி குல பேதங்கள் அர்த்தமற்றவை என்று பழனி எவ்வளவோ ஆதாரத்தோடு கூறியும், கேட்க மறுத்த செட்டியாரின் மனதிலே, அந்தப் பெண்ணின் ஒரு புன்னகை எவ்வளவோ புத்தம் புதுக் கருத் துக்களைத் தூவிவிட்டது. ஜாதியாம், மகாஜாதி! இந்தப் பெண்ணுடைய இலட்சணத்துக்கும் குணத்துக்கும் ஒருவன் இலயிப்பானே தவிர, இவள் ஜாதியைக் கண்டு பயப்படு வானா என்ன என்றுகூட நினைத்தார். ஒரு கணம் அவ்விதம்

நினைப்பார். மறுகணமே மாறிவிடும். இதுதான் சோதனை! மாயை என்னை மயக்க வந்திருக்கிறது—இதிலிருந்து தப்பித் தாக வேண்டும் என்று தீர்மானித்து, தேவார திருவாசகத் தையும், அடியார்கள் கதைகளையும், முன்பு படித்ததைவிட மேலும் சற்று அதிக ஊக்கமாகப் படிக்கத் தொடங்கினார். அந்தப் பாவையை மறந்துவிட வேண்டும் என்ற திட்டம் அவருடையது. பாவம், அவருக்கு (அதுவரை)த் தெரியாது, காதல் பிறந்தால், அதன் கனலின் முன்பு எந்தத் திட்டமும் தீய்ந்து போய்விடும் என்ற உண்மை.

''தோடுடைய செவியன்'' என்ற பதிகத்தை அவர், அதற்கு முன்பு எத்தனையோ நூறு முறை படித்ததுண்டு. அப்போதெல்லாம், ரிஷபம் ஏறிக்கொண்டு, ஜடையில் பிறை யுடன் சிவனார் வருவது போலவே, அவருடைய அகக்கண் முன் சித்திரம் தோன்றும். பரமனுக்குப் பக்கத்திலே, பார் வதி நிற்பதும் தெரியும். ஆனால், அப்போதெல்லாம், ஐயனுடைய அருள் விசேஷத்தைப் பற்றியே செட்டியார் கவனிப்பார். குமரியின் மீது 'ஆசை' உண்டான பிறகோ, பதிகம் பாடியானதும், பார்வதியும் பரமசிவனும் அவர் மனக்கண்முன் தோன்றுவதும், பார்வதி பரமசிவனை அன் புடன் நோக்குவதும், அந்த அன்புப் பார்வையால் ஐயனு டைய அகமகிழ்ந்து முகம் மலர்வதும் ஆகிய காதல் காட் சியே அவருக்குத் தெரியலாயிற்று. பதிகம் பாடி, பிரேமையை மாய்க்க முடியவில்லை—வளர்ந்தது. ஏகாந்தமாக இருந்து பார்த்தார். தீ கொழுந்துவிட்டெரியத் தொடங்கிற்று. அவரையும் அறியாமல் அவர் மனதிலே ஒரு வகை அச்சம் குடிபுகுந்துவிட்டது. எப்படி நான் தப்ப முடியும்? என்ற அச்சம் அவரைப் பிடித்துக் கொண்டது. துறைமுகத்தருகே நின்றுகொண்டு, தன் கப்பலின் வரவுக்காக காத்துக் கொண் டிருக்கும் வணிகர் போல, அவர் மனம் பாடுபட்டது. குமரி யின் கள்ளங்கபடமற்ற உள்ளம் அவருக்குத் தெரியும். பணி வுள்ளவளாக அவள் தன்னிடம் நடந்து கொள்கிறாள். பசப்பு அல்ல என்பதையும் அறிவார். தன் மனதிலே மூண்டு விட்ட தீயை அவள் அறியாள்; அறிந்தால் திகைப்பாள் என் பதும் தெரியும்.

கொடியிலே கூத்தாடும் முல்லையைப் பறிக்கும் நேரத்தில், வேலிப் பக்கமிருந்து தோட்டக்காரன், ''ஏ! யாரது? கொடியிலிருந்து கையை எடு'' என்று கூவினால், எவ்வளவு பயம் பிறக்கும்? தோட்டக்காரன் கூவாமல், முல்லையே ''நில், பறிக்காதே! உனக்காக அல்ல, நான் பூத்திருப்பது'' என்று கூறினால், பயம் எவ்வளவு இருக்கும். அவ்விதமான அச்சம் செட்டியாருக்கு. அடக்க முடியவில்லை, அவளோ அணுவளவும் சந்தேகிக்கவில்லை. செட்டியாரின் உண்மை நிலை தெரிந்தால் அவள் உள்ளம் எவ்வளவு வாடும், எவ்வளவு பயப்படுவாள், மதிப்பு துளியாவது இருக்குமா? கொடியிலிருந்து முல்லை பேசுவது போல, அந்தக் குமரி, ''ஏனய்யா! இதற்குத்தானா கோயில் கட்டுகிறேன், குளம் வெட்டுகிறேன் என்று ஊரை ஏய்த்தாய்? கட்டு கட்டாக விபூதி,காலை மாலை குளியல்—கழுத்திலே உருத்திராட்சம்—கந்தா, முருகா என்று பூஜை! கல் உடைக்க வருபவளைக் கண்டால், கைபிடித்து இழுப்பது, இதுதான் யோக்யதையா? ஊருக்கெல்லாம் உபதேசம் செய்கிறாயே, உன்னுடைய வெளி வேஷத்தை நானும் நம்பினேனே! ஏதோ, வயிற்றுக்கில்லாத கொடுமையால் கூலி வேலை செய்ய வந்தேன். என்ன தைரியம் உனக்கு, வேலை செய்ய வந்தவளை வாடி என்று அழைக்க!'' என்று கேட்டுவிட்டால்? செ! பிறகு இந்த ஜென்மத்தை வைத்துக் கொண்டும் இருப்பதா? குளம் குட்டை தேட வேண்டியதுதான். ஆண்டவனே, என் சபலம் போக ஒரு வழியும் இல்லையா?'' என்று செட்டியார் சிந்திப்பார். சிவனாரைத் துதிப்பார். நாளாகவாக, காதல் தன்னைப் பித்தனாக்கிக் கொண்டு வருவதைத் தெரிந்து பயந்தார்.

ஏதுமறியாத குமரி, செட்டியார் ஏதோ கவலையாக இருக்கிறார் என்பதை மட்டும் தெரிந்து கொண்டு வருந்தினாள்.

''என்னாங்க உடம்புக்கு? ஒரு மாதிரி இருக்கறிங்க?''

''ஏன்! அதெல்லாம் ஒண்ணுமில்லையே!''

''ரொம்ப களைச்சாப்போலே இருக்கறிங்க.''

''எனக்கென்ன களைப்பு! நான் என்ன, உன்போல வெய்யிலிலே வேலை செய்கிறேனா?

''உங்களுக்கு ஏனுங்க, தலை எழுத்தா என்ன, கூலி வேலை செய்ய? நீங்க மகாராஜா.''

''உனக்கு மட்டும் தலை எழுத்தா, இவ்வளவு இளம் பிராயத்திலே சேற்றிலேயும், மண்ணிலேயும் இருக்க? குமரி! உனக்கு ஒரு பணக்காரனாப் பார்த்துக் கலியாணம் செய்து விட்டா, கூலி வேலை ஏன் செய்யப் போறே? பிறகு.''

''வேடிக்கையாப் பேசறிங்க. அது அதுக்குன்னு ஆண்டவன் அளவு போடாமலா அனுப்புவாரு.''

இப்படி ஏதாவது பேசுவாள் குமரி. மாடிக்குச் செல்வதற்கு, ஒவ்வோர் படிக்கட்டாகக் கால் வைப்பது போலச் செட்டியாரும், ஒவ்வோர் தடவை பேசும்போதும், ஒவ்வொரு வாசகமாகத் தன் நிலையை உணர்த்துவிக்கக் கூறி வந்தார். குமரி, செட்டியாரிடம் இப்படிப்பட்ட நிலை ஏற்படும் என்று துளியும் எதிர்பார்த்தவளல்ல. ஆகவே அவர் பேசினதன் உட்கருத்தை அவள் உணர்ந்து கொள்ளவே இல்லை.

ஒருமுறை செட்டியார், தன் சோக நிலைமையைக் கூறினார். அவருக்குப் பரிந்து பேச விரும்பிய குமரி,

''ஆமாங்க! எனக்குக்கூடச் சொன்னாங்க, உங்க மகன் கதையை. யாரோ ஒரு துஷ்டமுண்டே, அவரைக் கெடுத்துவிட்டாளாம்,'' என்றாள்.

''குமரி! அந்தப் பெண்ணைத் திட்டாதே. பெண்கள் என்ன செய்வார்கள். அவன் அவள்மீது ஆசை கொண்டால், அவள் என்ன செய்வாள் பாவம்?'' என்று செட்டியார் தன் மருமகள் சார்பிலே ஆஜரானார்! மற்றோர் நாள் ''உன் அழகுக்கும் குணத்துக்கும், நீ எங்க ஜாதியிலே பிறந்திருந்தா உன் தலையிலே மணல் கூடையா இருக்கும்?'' என்று சொல்லிப் பெருமூச்செறித்தார். மற்றும் ஓர்நாள், மார்வலிக்குத்

தைலம் தடவும்படிச் சொன்னார். கொஞ்சம் கூச்சம்! இருந்தாலும் 'கல்மிஷம்' அற்ற மனதுடன் அவருடைய மார்புக்குத் தைலம் பூசினாள் குமரி. சதா சர்வகாலமும் அவள் நினைப்பு நெஞ்சிலே இருந்ததே தவிர, ஒருநாளும் அவள், அன்று அமர்ந்திருந்ததுபோலத் தன் அருகே உட்கார்ந்ததேயில்லை. அவள் கை, செட்டியாரின் மார்பிலே பட்டபோது, புளகாங்கிதமானார். கண்களை மூடிக் கொண்டார். அவளுடைய ''மூச்சு'' அவருக்குத் தென்றல் வீசுவது போலிருந்தது. என்னென்னமோ எண்ணினார். உடலே பதறிற்று அவருக்கு. மார்வலி மட்டுமில்லை, செட்டியாருக்குக் குளிர் ஜுரம் என்று குமரி எண்ணிக் கொண்டாள், அவருடைய உடல் பதறுவதைப் பார்த்து. ஜுரம், ஆம்—ஆனால், அந்த நோயைக் கிளறியது அவளுடைய அழகு என்பதை அவள் அறிந்து கொள்ளவில்லை. ஆபத்து வேளை, ஆனால் தப்பித்துக் கொண்டார் செட்டியார், மீனா அங்கு வந்ததால். ''மார்வலி தைலம் தடவினேன். ஜுரம் வரும் போலிருக்கு'' என்றாள் குமரி. ''பார்த்தாலே தெரியுதே'' என்று பச்சைச்சிரிப்புடன் கூறிக் கொண்டே போய்விட்டாள் மீனா.

தைலம் பூசிக் கொண்ட பிறகு, செட்டியாரின் தாபம் பன்மடங்கு அதிகமாகி விட்டது. இனி இங்கிருந்தால், எந்த நேரத்தில் என்ன ஆபத்துநேரிடுமோ, வெறிமீறிஎன்ன விபரீதமான செயல் புரிந்துவிடும்படி நேரிட்டுவிடுமோ என்ற திகில் அதிகரித்தது. இனி இங்கிருக்கக்கூடாது. இரண்டோர் நாட்கள், வெளியூர் போய் வருவது நல்லது என்று எண்ணி, மறையூரைவிட்டுக் கிளம்பினார். மனச்சாந்திக்காக இம்முறையைக் கையாண்டார். ஆனால் எந்த ஊர் சென்றாலும் அவள் பின்தொடர்ந்தாள். அதோ செட்டியார், அந்தியூர்க் கடைவீதியில் அருணாசலச் செட்டியார் கடையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். புதிதாக வந்த பம்பாய் சில்க் சேலையின் நேர்த்தியை அருணாசலச் செட்டியார் வாடிக்கைக்காரருக்குக் கூறுகிறார். குழந்தை வேலச் செட்டியாரோ அந்தச் சேலையைக் கண்ட உடனே, அதைக் குமரிக்குக் கட்டி அழகு பார்க்கிறார்! அதாவது, அந்தச் சேலையைக் கட்டிக்

கொண்டு குமரி, தன் எதிரில் நின்று காட்சி தருவது போலத் தோன்றுகிறது செட்டியாருக்கு. எங்கே போனாலும், எதைச் கண்டாலும், விநாடிக்கு விநாடி அவள் வருகிறாள்; ஒவ் வோர் தடவையும் ஒவ்வோர் படி அதிகரிக்கிறது அவருடைய ஆசை. பித்தம் பிடித்தவர்போல மீண்டும் மறையூர் வந்து சேர்ந்தார்.

செட்டியாரின் நிலையை மீனா நன்றாக உணர்ந்து கொண்டாள். சமயமறிந்து, செட்டியாரைத் தனியாகச் சந்தித்து, வெளிப்படையாகவே கேட்டுவிட்டாள். அவர் முதலில் நடுநடுங்கிப் போனார். பிறகு இல்லை என்று கூறிப் பார்த்தார். கடைசியில் கண்களில் மிரட்சியுடன், ''ஆமாம்! எனக்கு அந்தப் பெண்மீது அமோகமான ஆசைதான். ஆனால்...'' என்று பிச்சை கேட்பதுபோலப் பேசினார்.

''பயப்படாதீங்க செட்டியாரே! அந்தப் பெண் ஒரு மாதிரி.இந்த மாதிரி காரியத்துக்குத் தலைபோனாலும் ஒப்ப மாட்டாள்'' என்றாள் மீனா.

''அது தெரிந்துதானே, நான் இப்படி பைத்தியம் பிடித் தது போலாகிவிட்டேன்'' என்று செட்டியார் கூறினார்.

''அவள் சம்மதிக்கவே மாட்டாள். நாம்தான் சாமர்த் தியமாக நடந்து கொள்ளவேண்டும். நாளை இரவு, சொக் கனை, ஏதாவது வேலையாக வெளியூருக்கு அனுப்பிவிடுங் கள். நான் முடித்துவிடுகிறேன்'' என்றாள் மீனா. இஷ்ட தேவதை பிரசன்னமாகி வரம் கொடுத்தால் எவ்வளவு சந் தோஷம் வருமோ அவ்வளவு ஆனந்தம் செட்டியாருக்கு. சொக்கனை வெளியூர் அனுப்புவது சிரமமில்லை. அனுப்பி னார். மீனா ஏற்பாட்டின்படி, செட்டியாரிடம் வந்தாள்; கச்சக்காய் அளவுக்கும் குறைவு, ஏதோ லேகியம். அதைக் கொடுத்தாள் செட்டியாரிடம். ''குமரியைக் கூப்பிட்டனுப்பி இந்த லேகியத்தைத் தின்றுவிடும்படிச் செய்யுங்கள். பிறகு, அவள் உங்கள் பொருள். விடிஞ்ச பிறகுதானே சொக்கன் வருவான்!'' என்று யுக்தியும் சொல்லித் தந்தாள். நடுங்கும் கரத்திலே லேகிய உருண்டையை வாங்கிக்கொண்ட செட்டி

யார், ''இது என்ன மருந்து? ஆபத்து கிடையாதே?'' என்று கேட்டார். ''இது என்ன மருந்து என்று நீங்கள் நாளை காலையிலே என்னிடம் சொல்வீர் செட்டியாரே! நான் போய் குமரியை அனுப்புகிறேன். லேகியம் செய்யும் வேடிக்கையைப் பார்த்துக் கொள்ளுங்கள் நீங்களே'' என்று மீனா கூறிவிட்டுப் போய்விட்டாள்.

அரைகுறையாகக் கட்டப்பட்டிருந்த கோயிலிலேயே ஒரு சிறு அறை செட்டியார் தங்கி இருந்த இடம். அகல் விளக்கு அதிகப் பிரகாசமின்றி எரிந்து கொண்டிருந்தது. வேலையாட்கள் தூங்கும் சமயம். குமரி, அவசரமாக ஓடி வந்தாள் கோயிலுக்கு. அறையிலே செட்டியார் உலவிக் கொண்டிருக்கக் கண்டு, 'என்னாங்க உடம்புக்கு! என்னமோ நொப்பும் நுரையுமா தள்ளுது, போய்ப் பாருடி! யாரையும் எழுப்பாதே, யாருக்கும் சொல்லாதே என்று மீனா அக்கா சொன்னாளே'' என்று கேட்டாள்.

செட்டியார், மீனாவின் தந்திரத்தைத் தெரிந்து கொண்டார்.

''ஆமாம் குமரி! மயக்கமாக இருந்தது, இப்போது இல்லை. மணி பத்து இருக்குமே! பாவம், நீ தனியாகவா இங்கு வந்தே?'' என்று கேட்டார்.

''ஆமாங்க! மீனா சொன்னதும் எனக்கு வந்து பார்த்து விட்டுப் போகணும்னு தோணவே, ஒரே ஓட்டமாக ஓடி வந்தேன். நான் போகிறேனுங்க'' என்றாள் குமரி. செட்டியாருக்கு ஆபத்து என்ற உடனே ஓடிவந்துவிட்டாளே தவிர, அவருக்கு ஒன்றுமில்லை என்று தெரிந்ததும், தனியாக அந்த நேரத்தில் அவருடன் இருப்பது சரியல்லவே என்று தோன்றிற்று.

''ஏன், இந்த வேளையிலே தனியாக இருக்க...'' என்று செட்டியார் கேட்டு முடிப்பதற்குள், குமரி வெட்கத்துடன், ''அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க, நாம்ப இங்கே களங்கமற்றுத்தான் இருக்கிறோம். ஆனா மத்ததுங்க அப்படி

நினைக்காது பாருங்க'' என்றாள். களங்கமற்ற நிலையில் தான் அவள் இருந்தாள். ஆனால் செட்டியாரின் மனநிலை அவளுக்குத் தெரியாது!

''வந்தாகிவிட்டது, குமரி! கொஞ்சம் அறையைச் சுத்தம் செய்'' என்று கூறினார் செட்டியார். குமரி உடனே அந்தக் காரியத்தைச் செய்தாள். ''செட்டியாரே! நெல் மூட்டைகளை ஏன் இங்கேயே போட்டிருக்கிறீர்கள்? எலிகள் அதிகமாகுமே'' என்று கேட்டுக் கொண்டே, மூட்டைகள் இருந்த இடத்தைச் சுத்தம் செய்தாள். எலிகளைக் காண வேண்டும் என்ற அவசரத்திலே செல்பவர் போலச் செட்டியார், மூட்டைகள் இருக்குமிடம் போனார், குமரி மீது உராய்ந்தபடி! அதிலே அவருக்கு ஒரு ஆனந்தம். அவள் கொஞ்சம் அஞ்சினாள். சுத்தமாக்கிவிட்ட பிறகு, வியர்வையை முந்தானையால் துடைத்துக்கொண்டு நின்றாள். செட்டியார், ''குமரி! இந்தா, உனக்குப் பரிசு! சாப்பிடு, ருசியாக இருக்கும். உடம்புக்கும் நல்லது'' என்றுகூறி லேகியத்தைக் கொடுத்தார்.

''என்னதுங்க அது? நாவப்பழமாட்டம்!'' என்று கேட்டாள் குமரி, லேகியத்தைப் பணிவுடன் பெற்றுக்கொண்டு.

''அது மீனாட்சி பிரசாதம்'' என்றார் அவர்.

''அப்படின்னா?'' என்று குமரி கேட்டாள்.

''மீனாட்சி கோயிலில், சாமிக்குப் படைத்தது. சாப்பிடு, நல்லது'' என்று கூறிவிட்டு,வேறு ஏதோ வேலையைக் கவனிக்கப் போகிறவர்போல அறைக்கு வெளியே சென்றார். குமரி, லேகியத்தைத் தின்றாள். சுவையாகவே இருந்தது. எப்போதும் அவள் கண்டதில்லை அதுபோல. லேகியத்தைத் தின்றுவிட்டு, செட்டியார் வந்ததும் சொல்லிவிட்டுப் போகலாம் என்று நெல் மூட்டைமீது சாய்ந்தபடி நின்றுகொண்டே அந்த அறையிலே இருந்த படங்களைப் பார்த்தபடி இருந்தாள்.திடீரென்று அந்த அறையிலிருந்து விளக்கு மிகப்பெரியதாகவும், மிகப் பிரகாசமாகவும் அவளுக்குத் தெரிந்தது.

கொஞ்சம் ஆச்சரியத்துடன், மறுபடி விளக்கைப் பார்த்தாள். ஒரு விளக்கல்ல, பல விளக்குகள் இருக்கக் கண்டாள்! எலி, மூட்டைகளிடையே ஓடக் கண்டாள். குனிந்து கோல் ஒன்றை எடுத்து விரட்டினாள். எலி ஒருபக்கமிருந்து மற்றோர் பக்கம் ஓடிற்று. குமரி, ''ஓடினா விடுவேனா! அம்மாடி! எவ்வளவு சாமர்த்திபம்? ஆனா, இந்தக் குமரியிடமா நடக்கும்'' என்று கூறிக்கொண்டே எலியை வேட்டையாடினாள். கடைசியில் எலி தப்பித்துக் கொண்டே ஓடிவிட்டது. ''ஒரு சுண்டெலிக்கு எவ்வளவு சாமர்த்திபம் பார்த்தாயா?'' என்று கேட்டாள். யாரும் எதிரிலே இல்லை. 'சே! யாரும் இல்லை. இங்கே, யாரிடம் பேசுகிறோம்' என்று நினைத்தாள். சிரிப்பு பொங்கிற்று; சிரித்தாள். மேலும் மேலும் சிரித்தாள். உரத்த குரலிலே சிரித்தாள். இடையிடையே பாடவுமானாள். அறை முழுவதும் ஜோதி மயமாக அவளுக்குத் தெரிந்தது. குதூகலம் ததும்பிப் பொங்கி வழிந்தது. ஆடை நெகிழ்வதையும் கூந்தல் சரிவதையும் கவனியாமல், சிரித்துக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தாள். குமரியின் கண்கள், உருள ஆரம்பித்தன! தூக்கம் வருவது போன்ற உணர்ச்சி—கருமணி மேல் இரைப்பைக்குள்ளே போய் புகுந்து கொள்வதுபோல, மேலுக்குப் போகிறபடி இருந்தது. என்றுமில்லாத அசட்டுத் தனமான தைரியம்! லேகியம் அவளை ஆட்டி வைக்க ஆரம்பித்தது. வார்த்தைகள் குழைந்து குழைந்து வெளிவரத் தொடங்கின. செட்டியார், அந்தச் சமயமாகப் பார்த்து உள்ளே நுழைந்தார்.

''குமரி!''

''செட்டியாரே!''

''ஏன் இப்படி இருக்கறே?''

''ஏன் செட்டியாரே, ஆடிக்கிட்டே இருக்கறே. ஆமாம், ஏன் இத்தனை விளக்கு?''

ஒரு சமயம் குமரிக்குப் பைத்யம் பிடித்துவிட்டதோ, என்று செட்டியாருக்குத் திகில் உண்டாகிவிட்டது.

''குமரி உட்கார்.''

''எங்கே உட்காரவாம்?''

அங்கே இருந்த நாற்காலியிலே செட்டியார் உட்கார்ந்து கொண்டு, ''குமரி! இங்கே வா! இப்படி உட்கார்'' என்று கொஞ்சினார்.

குமரி, ''என்னா அது? ஏனய்யா, செட்டியாரே! விளையாட்டா செய்யறே?'' என்று மிரட்டினாள். செட்டியார், லேகியம் குமரியின் புத்தியைக் கெடுத்துவிட்டது. ஆனால், அந்த நிலையிலும் அவளை இணங்க வைக்கவில்லை என்று நினைத்து மேலும் பயந்தார். மறுவிநாடி, குமரி கலகல வெனச் சிரித்தாள். செட்டியார் அருகே போய், அவருடைய முகவாய்க்கட்டையைப் பிடித்தாட்டி,'செட்டியாரே! செட்டியாரே!' என்று ஏதோ பாடத் தொடங்கினாள். அதற்கு மேல் செட்டியாரால் பயத்துக்குக் கட்டுப்பட்டிருக்கவும் முடியவில்லை. ''கண்ணு! குமரி!'' என்று கொஞ்சியபடி, அவளை அணைத்துக் கொண்டு, முகத்தோடு முகத்தைச் சேர்த்தார். இதழையும்...

''சே, கட்டேலே போறவனே?'' என்று கூவிக் கொண்டே, செட்டியார் பிடியிலிருந்து திமிரிக்கொண்டு கிளம்பினாள் குமரி. இதற்குள், ஆடை நெகிழ்ந்து புரண்டிடவே, காலிலே புடவையின் ஒரு முனை சிக்கிக் கொள்ள, இடறிக் கீழே வீழ்ந்தாள். செட்டியார், அவளைத் தூக்கி நிறுத்தினார். அவள் துவண்டாள்.அவளுக்கு மேலும் மேலும் மயக்க உணர்ச்சி அதிகரித்தது. எதிர்க்கும் போக்கும் போய் விட்டது. அவளும், அணைப்புக்கு அணைப்பு, முத்தத்துக்கு முத்தம் என்ற முறையில் விளையாடத் தொடங்கினாள்.

''கண்ணு!''

''ஏன், மூக்கு!''

''இதோ பார்!''

''மாட்டேன், போ.''

''ஒரே ஒரு முத்து.''

''வெவ்வெவ்வே.''

இன்ப விளையாட்டு! செட்டியார் பல நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்ததைவிட, மிக ரம்மியமாகி விட்டது.

செட்டியார் மடிமீது தலைவைத்து அவள் சாய்வாள்; செட்டியார், குனிந்து ஒரு முத்தம் தருவார்; தலையைப் பிடித்து அவள் ஓங்கிக் குட்டுவாள். பிறகு, திமிரிக் கொண்டு எழுந்திருப்பாள். செட்டியாரைப் பிடித்திழுத்துத் தன் மடியில் தலையைச் சாய்த்துக் கொள்ளச் சொல்வாள். செட்டியாருக்கு மூச்சுத் திணறும்படி முத்தங்கள் சொரிந்தாள். ஒரு ஆண்பிள்ளையின் பார்வை சற்று வேகமாகப் பாய்ந்தால் கோபிக்கும் குமரிக்கு, இவ்வளவு ''சரசத் தன்மை'' இருக்குமென்று செட்டியார் நினைத்ததில்லை! செட்டியாருடைய முழுக்கு, பூச்சு, பக்தி, பாராயணம், ஆச்சாரம், சனாதனம் ஆகியவற்றைக் கண்ட எவர்தான், நள்ளிரவில், அவர் கல் உடைக்க வந்த கன்னியின் கன்னத்தைக் கிள்ளிக் கொண்டும், கூந்தலைக் கோதிக் கொண்டும், காமுகக் குமரன்போல ஆடிக்கிடக்கக் கூடியவர் என்று எண்ணியிருக்க முடியும்? காலைமுதல் வேலை செய்த அலுப்பினால் அவள் குடிசையிலே, கையே தலையணையாகக் கொண்டு தூங்கி இருக்க வேண்டியவள், ஒரு இலட்சாதிகாரியின் மடியிலே ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டு இருக்கிறாள்! கைலாயக் காட்சியைக் கனவிலே கண்டு இரசிக்க வேண்டிய நேரத்திலே பக்திமானான செட்டியார், தன்னுடைய வாலிப மகன், காதலித்தவளைக் கடிமணம் புரிவேன் என்று சொன்னதற்காக,'காதலாம், காதல்! ஜாதியைக் கெடுத்துக் கொள்வதா, குலம் நாசமாவதா, ஆச்சாரம் அழிவதா, ஒரு பெண்ணின் சினேகத்துக்காக?' என்று கனல் கக்கிய செட்டியார், ஒரு பெண்ணை, கூலிவேலை செய்ய வந்தவளை, நடுநிசியில், கட்டி முடியாத கோயிலில், 'கண்ணே! மணியே!' என்று கொஞ்சிக் கட்டித் தழுவிக் கொள்கிறார்! அதுவும், அவள் தன்னுடைய நிலையை இழந்துவிடும்படியாக மயக்கம் தரும் லேகியம் சாப்பிடும்படிச் செய்து. செட்டியாருக்கு இவைகளை எண்ணிப் பார்க்க நேரமில்லை. அவருக்கு அளவில்லாத ஆனந்தம்!

எத்தனையோ நாட்களாகக் கொண்டிருந்த இச்சை, பூர்த்தியாயிற்றே என்ற என்ற சந்தோஷம்! இன்ப இரவு அவருக்கு.

இன்ப இரவுக்குக் கடிகாரம் ஏது? கோட்டான் கூவினால்கூடக் குயிலின் நாதமாகவன்றோ அந்த நேரத்தில் தொனிக்கும். கருத்த மேகம் சூழ்ந்த வானமுங்கூட, அன்று தனி அழகாகத்தானே காணப்படும். இன்பத்துடன் அளவளாவும் நாள், அமாவாசையாக இருந்தாலும், பௌர்ணமியாகிவிடுகிறது என்பார்கள். செட்டியாரின் நிலை அதுதான். அவர் மனதிலே அந்த நேரத்தில் கொஞ்சமும் பயமில்லை. என்ன காரியம் செய்தோம்! நமது வயது என்ன! வாழ்க்கை முறை எப்படிப்பட்டது. எவ்வளவு பாசுரம் படித்தோம்! எத்தனை திருக்கோயில் வலம் வந்தோம். காமத்தின் கேடு பற்றி எத்தனை புண்ய கதை படித்திருக்கிறோம். ஒரு கன்னியை—அவள் நிலை தவறும்படிச் செய்து—தகுமா—இவ்வளவு மோகாந்தகாரத்தில் மூழ்குவது சரியா என்று சிந்திக்கத் துளியும் முடியவில்லை.

அவளுடைய அதரம், அதன் துடிப்பு! அவளுடைய விழிகள், அவை கெண்டைபோல ஆடுவது! அவளுடைய துடியிடை, குழையும் பேச்சு! இவைகளைக் கண்டு, ரசித்துக் கொண்டிருந்த நேரத்தில் அவருக்கு வேறு விதமான நினைப்பு வருமா!

எந்த வாயால், ''காமத்துக்குப் பலியாகி ஜாதியைக் கெடுக்கத் துணிந்தாயே, நீ என் மகனல்ல. என் முகாலோபனம் செய்யாதே. போ வீட்டைவிட்டு'' என்று கூறினாரோ, அந்த வாயால், செட்டியார், அழகுக்கு அர்ச்சனை செய்து கொண்டிருந்தார், காதல் கீதம்பாடிக் கொண்டிருந்தார். இது இதழல்ல, கனி; கன்னமல்ல, ரோஜா; கண்ணல்ல, தாமரை என்று கவிதைகளைப் பொழிந்து கொண்டிருந்தார். தூங்கிக்கிடந்த ரசிகத் தன்மை முழுவதும் வெள்ளமெனக் கிளம்பிற்று. இன்ப இரவு அவருக்கு! அவளுக்கோ, ஏமாந்த இரவு! அவள் அறிய மாட்டாள், காமத்துக்குத் தான் பலியாக்கப்படுவதை. அவள் ஏதோ ஓர் உலகிலே சஞ்சாரம்

செய்து கொண்டிருந்தாள். அந்த உலகிலே, நிற்க முடிய வில்லை, நடக்க முடியவில்லை, கண்கள் சுழன்றபடி உள்ளன. ஏதோ ஓர் வகை களிப்பிலே மூழ்கி மூழ்கி எழுந்திருக்க வேண்டி இருக்கிறது. காரணம் தெரியவில்லை களிப்புக்கு. ஆடலும் பாடலும் திடீர் திடீரென்று கிளம்புகிறது. லாகிரி யால் ஏற்பட்ட ஆனந்த நிலைமையிலே அவள் இருந் தாள். அவள் நிலை இழந்தாள்; அவர் இன்பம் பெற்றார். தான் சூது செய்து அந்தச் சுந்தரியை அடைந்ததாகவே அவர் எண்ணவில்லை. எப்படியோ ஒன்று எதிர்பார்த்தது கிடைத்துவிட்டது என்ற திருப்தி. அதுமட்டுமில்லை, சாமர்த்தியமாக அந்தச் சரசியைப் பெற்றுவிட்டோம் என்று சந்தோஷம். மதில் சுவரின் மீது ஓசைபடாமல் ஏறி, மேல் வேட்டியை வீசிக் கிளையை இழுத்து, கிளையிலே கூத்தாடிய மாங்கனியை மெள்ளப் பறித்தெடுத்து, முகர்ந்து பார்த்துத் தின்னும்போது அதன் சுவையிலே இலயித்துவிடும் கள்ள னுக்கு; கனி திருடினோம் என்ற கவனங்கூட வருவதில்லை. மீறி வந்தாலும், தன் சாமர்த்தியத்தைத் தானே புகழ்ந்து கொள்வானே தவிர, செச்சே! எவ்வளவு சூதாக நடந்து கொண்டோம் என்று எண்ணிச் சோகிக்கமாட்டானல்லவா? கனியைக் களவாடுபவனைவிட, கன்னியரைக் களவாடுபவன், கட்டு—திட்டம், சட்டம்—சாத்திரம், பதிகம்—பாசுரம் ஆகிய வைகளின் பிடியிலா சிக்குவான்? முள்வேலியைத் தாண்டி விட்டோம் என்று கருதிக் களிப்பான். இன்ப இரவு, அவ் வளவுதான் அவருக்குத் தெரியும்! அவள் ஓர் அழகி, அவ் வளவுதான் அவருக்குத் தெரியும். அவளை அடைந்தாகி விட்டது. அதுபோதும் அவருக்கு. குறும்புப் பார்வைக்கும் கேலிப் பேச்சுக்கும்கூடக் கோபித்துக் கொள்ளும் குமரி, குழந்தை போலத் தூங்கிவிட்டாள், குழந்தைவேலச் செட்டி யாரின் மடியில் சாய்ந்தபடி. செட்டியார், மடியில் சாய்ந் திருந்த மங்கையைப் பார்த்தபடி இருந்தார். நெடுநேரம் தூங்கவில்லை. பிறகு, அப்படியே அவரும், நெல் மூட்டைமீது சாய்ந்தபடி நித்திரையில் ஆழ்ந்தார். ஆதவன் உதித்தான்!

கதிரவனைக் கண்டு கமலம் களிக்கும் என்பார்கள். காமத்துக்குப் பலியான குமரியின் முகத்திலே காலைக் கதிரவன் ஒளிபட்ட போது, இரவு நேரிட்ட சேஷ்டையின் அடையாளங்கள், கன்னத்தில் வடுக்களாகத் தெரிந்தனவேயன்றி, முகம் மலர்ச்சியாகத் தெரியவில்லை. கண் திறந்தாள். புதியதோர் இடமாகத் தோன்றிற்று. திகைப்புடன் பார்த்தாள், செட்டியார் மீது சாய்ந்து கொண்டிருப்பதை! ''ஐயோ,'' என்று அலறியபடி எழுந்திருக்கலானாள். செட்டியாரோ, ''அன்பே!'' என்றுகூறி, அவளை மீண்டும் தன் மீது சாய்த்துக் கொண்டார்.

''பாதகா! பாவி! மோசம் போனேனே! என்னமோ தின்னக் கொடுத்துவிட்டு, என்னை இக் கதிக்கு ஆளாக்கினாயே, நீ நாசமாகப் போக'' என்று வசை மொழியை வீசியபடி, கைகளைப் பிசைந்து கொண்டு கலங்கினாள் குமரி. செட்டியார் முகத்திலே அச்சமோ, கவலையோ தோன்றவில்லை. பரிபூரணத் திருப்தி தாண்டவமாடிற்று.

''குமரி! கூச்சலிடாதே. உனக்குத்தான் தீமை அதனால். நடந்தது நடந்து விட்டது'' என்றார் அவர்.

''அட பாதகா! பதைக்காமல் துடிக்காமல் பேசுகிறாயே, ஒரு ஏழையின் வாழ்வை அழித்துவிட்டு. இதற்கா நீ பக்திமான் வேஷம் போட்டாய்? கோயில் கட்டினாய்? கதியற்ற பெண்களைக் கற்பழிக்கத்தானா, கோயில் கட்ட ஆரம்பித்தாய்? ஐயோ! நான் என்ன செய்வேன். நீ கொடுத்த லேகியம் என் புத்தியைக் கெடுத்து, உன் மிருகத்தனத்துக்கு என்னைப் பலியாக்கிவிட்டதே'' என்று பதறினாள் குமரி.

''குமரி! நானும் இதுவரை இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட்டவனல்ல. யாரை வேண்டுமானாலும் கேட்டுப்பார்! என்னமோ விதிவசம் இப்படி நேரிட்டுவிட்டது'' என்றார் குழந்தைவேலர்.

'விதி! என்னைக் கெடுத்துவிட்டு, நிலைதவறச் செய்து, என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டு, விதியின் மீதா பழி

போடுகிறாய்? உன் மகளை, இப்படி ஒருவன் கெடுத்தால், நீ எப்படித் துடிப்பாய்? எனக்கு இனி என்ன வழி? நீ செய்து விட்ட அக்ரமத்தை ஆண்டவனும் கேட்கமாட்டாரா? பாவி! கோயிலிலே, இந்த அக்ரமத்தை நடத்தினாயே, உனக்கு நல்ல கதி கிடைக்குமா?'' என்று அழுது கொண்டே கேட்டாள் குமரி.

''ஆண்டவன் கேட்பானேன்? இதோ, நான் கேட்கிறேன்'' என்று ஒரு குரல் கேட்டு, இருவரும் திடுக்கிட்டுப் பார்க்க, அறை வாயிற்படியில் கோபமே உருவெடுத்து வந்ததுபோல சொக்கன் நின்று கொண்டிருந்தான்.

''அண்ணா! மோசம் போனேன்'' என்று அலறித் துடித்துக் கொண்டு, அவன் கால்களைப் பிடித்துக் கொண்டாள் குமரி.

''சீ! நாயே! குலத்தைக் கெடுத்த கழுதே'' என்று கூவி, காலை உதறினான். குமரி ஒரு பக்கம் போய் வீழ்ந்தாள்.

''நடந்தது நடந்துவிட்டது. ஏனய்யா செட்டியாரே! அவ்வளவுதான் உனக்குச் சமாதானம் கூறத் தெரிந்தது? எவ்வளவு திமிர் இருந்தால், ஒரு கன்னிப் பெண்ணைக் கற்பழித்துவிட்டு, ஏதோ கைதவறிக் கீழே உருண்டுவிட்டதால் செம்பிலே இருந்த பால் கீழே கொட்டிவிட்டதற்குச் சமாதானம் சொல்வது போல, நடந்தது நடந்துவிட்டது என்று கூறத் துணிவு பிறக்கும் உனக்கு? என்னை வெளியூர் போகச் சொல்லிவிட்டு, விடிவதற்குள், இவளை விபச்சாரியாக்கி விட்டாய்! நடந்தது நடந்துவிட்டது. நாயே! இனி நடக்க வேண்டியதைச் சொல்'' என்று செட்டியார் மீது பாய்ந்தான். அவர் அவன் காலில் விழுந்து, ''அப்பா! நீ என்னை எது செய்தாலும் தகும். நான் செய்துவிட்ட அக்ரமத்துக்கு எவ்வளவு வேண்டுமானாலும் என்னைத் தண்டிக்கலாம். காமாந்தகாரத்தால் நான் இந்த அநியாயத்தைச் செய்துவிட்டேன்''" என்று புலம்பினார்.

''காமாந்தகாரம்! அதை இந்த ஏழைப் பெண்ணிடம் காட்டவா, கோயில்? ஊரெல்லாம் உன்னை உத்தமன் என்று புகழ்கிறது. பாவி, நீ! என் குடும்பத்துக்குச் சனியனாக வந்தாயே. நடந்தது நடந்துவிட்டது என்கிறாயே! நினைத்துப் பாரடா பாதகா, நீ செய்த காரியத்தை. ஏமாளிப்பெண் ஒருவளை, ஏழையை, கூலிவேலை செய்ய வந்தவளைக் கற்பழித்திருக்கிறாய். நீ ஆயிரம் கோயில் கட்டி என்ன பிரயோஜனம்? உனக்குத் தாய், தங்கை, அக்கா யாரும் கிடையாதா? குமரி, எவ்வளவு களங்கமற்றவள்; கொடியவனே! அவளை இக்கதிக்குக் கொண்டு வந்தாயே!'' என்று சொக்கன் ஆத்திரத்துடன் பேசிக் கொண்டே செட்டியாரைத் தாக்கினான்.

''சர்வேஸ்வரா! ஐயோ, அப்பா! வேண்டாமடா, சொக்கா, நான் தாளமாட்டேன்டா, உயிர் போகிறதடா! உன் காலைக் கும்பிடுகிறேனடா, நீ என்ன செய்யச் சொல்கிறாயோ அதைச் செய்கிறேண்டா, அப்பா, சொக்கா! நான் பாவிதான், என்னைக் கொல்லாதே'' என்று செட்டியார் கூவினார்.

''சொல்வதைச் செய்கிறாயா? ஆனால் கேள், குமரியைப் பலரறியக் கலியாணம் செய்துகொள்'' என்று கர்ஜித்தான் சொக்கன்.

''கலியாணமா? ஐயோ, அடுக்காதே'' என்றார் செட்டியார். கீழே வீழ்ந்து கிடந்த குமரியின் கூந்தலைப் பிடித்து அவளைத் தூக்கி நிறுத்தி, ''இது அடுக்குமா? இவளைக் கெடுத்துவிட்டு, பிறகு யார் தலையிலாவது கட்டுவது அடுக்குமா?'' என்று சொக்கன் கேட்டான். குமரியின் கண்களிலே வழியும் நீரையும் கண்டார் செட்டியார். இங்கே புனல். சொக்கனின் கண்களிலே அனல். ''ஆண்டவனே! நான் என்ன செய்வேன்'' என்று அழுகுரலுடன் கூறிக்கொண்டே தலையில் அடித்துக் கொண்டார்.

''அக்ரமக்காரா! அடிக்கடி ஆண்டவனை ஏன் கூப்பிடுகிறாய்? அனாதைப் பெண்களை ஆலயத்திலே கற்பழிக்கும்

உனக்கு ஆண்டவன் பெயரைக்கூடச் சொல்லத் தோன்று கிறதா? இனி நடக்க வேண்டியதைச் சொல்'' என்று சொக்கன் சீறினான்.

''அப்பா! என் பேச்சைக் கொஞ்சம் கேள். நான் ஏதோ புத்தியில்லாமல் இக் காரியம் செய்துவிட்டேன். நான் குமரியைக் கைவிடுவதில்லை. கடைசிவரை காப்பாற்றுகிறேன்.''

''உன் கூத்தியாளாகச் சொல்கிறாயா? என் எதிரிலே என் தங்கையை வைப்பாட்டியாக்கு என்று கேட்குமளவு உனக்குத் துணிவு பிறந்ததா?''

''வேறென்ன செய்வது, சொக்கா! நான் வைசியகுலம். ஊருக்கெல்லாம் ஜாதியாச்சாரத்தைப் பற்றிப் பேசுபவன்! வேறு ஜாதிப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டதற்காகச் சொந்த மகனையே வீட்டைவிட்டுத் துரத்தினவன்..''

''அதனால்?''

''எங்கள் குலத்தவர் ஆச்சாரம் கெடக்கூடாதே, உலகம் என்னைப் பழிக்குமே, குடும்பமே இழிவாக்கப்படுமே.''

''என் குடும்பத்திலே நீ செய்து வைத்த காரியத்துக்கு, ஊரார் எங்களுக்கு மகுடம் சூட்டுவார்களா? மடையா! ஒரு பெண்ணின் கற்பை அழிக்கத் துணிந்துவிட்டு, குலப்பெருமை —குடும்பப் பெருமைகளைக் கூறுகிறாயே, மானமின்றி, ஈவு இரக்கமின்றி.''

''நான் வைசியகுலம்...''

''நான் உப்பிரஜாதி...''

''உப்பிரஜாதியில் பெண் கொள்ளும் வழக்கம், வைசிய குலத்திலே கிடையாதே. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த குடும்பம். எங்கள் குடும்பத்திலே ஜாதியை விட்டு ஜாதியில் கலியாணம் செய்வதில்லையே.''

''எங்கள் குலத்திலும் குடும்பத்திலும் காமப்பித்தம் பிடித்தவர்களுக்குப் பலியாவதற்காகப் பெண்களைப் பெற்

றெடுக்கிறார்களா? என்ன திமிர் உனக்கு? உன்னிடம் அதிகம் பேசப் போவதில்லை. ஒரு வாரத்துக்குள் முடிவு சொல்லியாக வேண்டும். இல்லையானால், உன்னையும் இந்தக் கள்ளியையும் கொன்றுவிட்டு, நானும் சாக வேண்டியதுதான். சொக்கன் சொன்னால் சொன்னதுதான்.''

சொக்கன் குமரியை இழுத்துக் கொண்டு வெளியே சென்றான், புலிபோல. செட்டியார் கவிழ்ந்து படுத்துக் கொண்டு கதறினார்.

இச்சம்பவம், ஜாடைமாடையாகக் கூலியாட்களுக்குத் தெரிந்துவிட்டது. கோபத்தால் சிவந்த கண்களுடன் சொக்கன் இருந்தது கண்டு, சகலருக்கும் பயம் பிடித்துக் கொண்டது. ஒரு வார்த்தை கேலி பேசினாலும் போதும்; சொக்கன் கொன்றுவிடுவான் என்று அஞ்சினர். மீனா வேலைக்கே வரவில்லை. குமரிக்கோ காய்ச்சல்! செட்டியாரோ, சாவு வரவில்லையே என்று தவித்தபடி இருந்தார். ஒன்று, இரண்டு, மூன்று என்று நாட்களை எண்ணிக் கொண்டிருந்தான் சொக்கன்.

ஐந்தாம் நாள் அதிகாலையில், சொக்கன் திடுக்கிட்டுப் போனான், குமரியைக் காணாமல். எங்கெங்கோ தேடிப் பார்த்தான், கிடைக்கவில்லை. செட்டியாரிடம் சென்றான். ''குமரி எங்கே?'' என்று கேட்டான். ''தெரியாதே'' என்று குளறினார். ''கற்பழித்ததுமன்றிக் கொலையும் செய்துவிட்டாயா? குமரியை எந்தக் குளத்திலே தள்ளிவிட்டாய்? சொல், உன்னைவிடமாட்டேன். பழிக்குப் பழி வாங்கியே தீருவேன்'' என்று ஆத்திரமாகப் பேசிச் செட்டியாரின் கழுத்தை நெரிக்கலானான் சொக்கன். செட்டியார் ''சிவனாணையாக எனக்கொன்றும் தெரியாதே. நான் இன்றுதான், அவளைக் கலியாணம் செய்து கொள்வது, ஜாதி பேதத்தைப் பற்றிக் கவலை இல்லை என்று தீர்மானித்தேன்'' என்று கூறிக் கதறினார். செட்டியாரை விட்டுவிட்டு, சொக்கன் ஓடினான் வெளியே. உலகில் எந்தக் கோடியிலிருந்தாலும் குமரியைக் கண்டு பிடித்துவிடுவது என்ற உறுதியுடன்.

சொக்கனுடைய சுபாவம் நன்கு தெரியும் குமரிக்கு. ஆகவே எங்காவது ஓடிவிடவேண்டும்;அப்போதுதான் செட்டியார் தப்புவார் என்று எண்ணிய குமரி, இரவு நடுநிசிக்குப் பிறகு, சொக்கனுக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு ஓடிவிட்டாள். செட்டியார் தன்னைக் கலியாணம் செய்து கொள்வதென்பது முடியாத காரியம் என்பது அவள் எண்ணம். பொழுது விடிவதற்குள்,இரண்டோர்கிராமங்களைத்தாண்டி விட்டாள். பாதையிலே நடந்தால் யாராவது தெரிந்தவர்கள் பார்த்து விடுவார்கள் என்று பயந்து, வயலோரம் ஒத்தையடிப்பாதை, கொடிவழி இவைகளாகப்பார்த்து நடந்து, மறுதினம் இரவு ஒரு பெரிய கிராமம் போய்ச் சேர்ந்தாள். பசியால் களைத்துக் கீழே வீழ்ந்தாள். அந்தப் பரிதாபக் காட்சியைக் கண்ட கிராமத்தானொருவன், அவளுக்குக் கஞ்சி கொடுத்து, 'யார், என்ன' என்று விசாரித்தான்.''ஓடி வந்து விட்டேன்—குடும்பச் சண்டை'' என்றாள் குமரி. ''தாலி இல்லையே'' என்று அவன் கேட்டான். ''கட்டவில்லை'' என்று குமரி கூறிவிட்டு அழுதாள்.

''அழாதே பெண்ணே! இந்தப் புத்தி முதலிலேயே இருக்க வேண்டும். போனது போகட்டும்; என் வீட்டுக்கு வா. அங்கே ஊருக்கு உபகாரம் செய்யும் உத்தமர் ஒருவர்வந்திருக்கிறார். அவரிடம் நியாயம் கேட்போம் வா'' என்று ஆறுதல் கூறிக் குமரியை அவன் அழைத்துச் சென்றான். குமரிக்கு அவன் பேச்சும் ஒருவிதமான லேகியமோ என்று பயமாகத் தான் இருந்தது. அவன் குறிப்பாக அதை உணர்ந்து ''நான் உன் தகப்பன்போல. பயப்படாமல் வா'' என்று தைரியம் கூறி வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அவன் வீட்டுத் திண்ணையிலும், மேடையிலும், கிராமத்து மக்கள் ஐம்பது அறுபது பேருக்குக் கூடியிருந்தார்கள். அவர்களிடம் அன்புடன் பழனி பேசிக் கொண்டிருந்தான்.

''ஐயாவுக்குத்தானே சொல்வது. உலகத்திலே நடக்கிற அநீதிகளை எல்லாம் சொல்லி வர்றீங்களே. இதோ, இந்தக் கொழந்தை சொல்ற அன்யாயத்தைக் கேளுங்க. கேட்டு விட்டு ஒரு வழி சொல்லுங்க'' என்று கிராமத்தான் பழனி

யிடம் கூறினான். பல பேர் எதிரிலே தன் கதையைக்கூற, அவள் கூச்சமடைவது தெரிந்த பழனி, கூட்டத்தைக் கலைந்து போகச் சொல்லிவிட்டு, குமரியின் 'சேதி'யைக் கேட்டுத் தெரிந்துகொண்டு திகைப்படைந்தான்.

'அம்மா, நீ எனக்குச் சிற்றன்னை' என்று பழனி சொல்லக் கேட்டு, மெய் சிலிர்த்தது குமரிக்கு. 'வேடிக்கை அல்ல; அவர் என் தகப்பனார்தான்' என்றான் பழனி. ''நீங்கதானே யாரோ பெண்ணுடன்...'' என்று கேட்டாள் குமரி. ''ஓடி விட்டேன். என் மனைவி சேரிப்புறம் போயிருக்கிறாள், வந்து விடுவாள். நீ கவலைப்படாதே. நான் உன் பொருட்டு என் தகப்பனாரிடம் சென்று வாதாடத் தீர்மானித்துவிட்டேன். 'காதல்' என்பது மகாபாதகம்; ஜாதிக்கட்டுப்பாடே பெரிது என்று சொல்லி வந்தவர், தனக்கே ஒரு காலத்தில் 'காதல்' ஏற்படக்கூடும் என்று எண்ணியிருக்கமாட்டார். இதமாகச் சொன்னால், எல்லாம் நன்மையாகவே முடியும். நீ சோகிக்காதே, தைரியமாக இரு'' என்று கூறினான்.

மறுதினம், பழனி, தன் மனைவி நாகவல்லியுடன் குமரியையும், கிராமப் பெரியவர்கள் பத்துப் பேரையும் அழைத்துக் கொண்டு, மறையூர் சென்று, தந்தையைச் சந்தித்தான். வெட்கம், துக்கம், பயம் என்னும் பலவித உணர்ச்சிகளால் தாக்கப்பட்ட குழந்தைவேல் செட்டியாரால் பழனியிடம் பேசவும் முடியவில்லை.

''பழனி! எனக்கு, என்ன சொல்வதென்றே புரியவில்லை. உன்னை நான் கொடுமைப்படுத்தினேன், குமரியைக் கெடுத்தேன், நான் எவ்வளவு தண்டனைக்கும் தயாராக வேண்டியவன்! அவ்வளவுதான் பேசமுடியும் என்னால்'' என்றார். பழனி, தகப்பனாரைச் சமாதானப்படுத்திவிட்டு, சொக்கனைக் கண்டுபிடித்து வருமாறு சிலரை அனுப்பிவிட்டு, தந்தையின் கலியாணத்துக்கான ஏற்பாடுகளைத் துவக்கினான். ஜாதியைப் பற்றிய பேச்சையே செட்டியார் எடுக்கவில்லை. குமரிக்கு, ஏதோ ஒரு கனவுலகில் இருப்பதுபோலத் தோன்றிற்று.

மறையூர் வைதிகர்கள் பதை பதைத்தனர். 'வைசியகுல திலகர், பக்திமான், செட்டியார், உப்பிரஜாதிப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதா? அடுக்குமா இந்த அனாச்சாரம்? அது, நமது திவ்ய க்ஷேத்திரத்தில் நடப்பதா...?' என்று கூக்குரலிட்டனர். செட்டியாரைச் சபித்தனர். ஊரிலே இந்தக் கலியாணம் நடைபெற்றால், பெரிய கலகம் நடக்கும் என்று கூவினர். பழனி, மறையூரிலும் சுற்றுப் பக்கத்திலும் சென்று ஜாதிகுலம் என்பதெல்லாம், வீணர்களின் கட்டுக்கதை என்பதை விளக்கிப் பேசினான், கலகம், கல்லடி இவைகளைப் பொருட்படுத்தாமல். அதிகார பூர்வமாக அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு பெரும்பாலான மக்கள், அவனுக்கு ஆதரவு தர முன்வந்தனர். வைதீகர்கள் பயந்து போயினர். ஜனசக்தி, பழனி பக்கம் குவிவது கண்டு. ''இதுபோன்ற இனிமையான அறிவுக்கு விருந்தான பிரசங்கத்தை நான் இதுவரை கேட்டதே இல்லை. உன்னை மகனாகப் பெற்ற நான் உண்மையிலேயே பாக்கியசாலி'' என்று கூறிப் பூரித்தார், குழந்தைவேல் செட்டியார். தாழையூர் சத்சங்கத்தின் தூதர் ஒருவர், மறையூர் வந்து சேர்ந்து, செட்டியாரைச் சந்தித்து, அவருடைய செயலைத் தடுக்க முயற்சித்தார். செட்டியாரோ, பழனி பிரசங்கத்திலே கூறின வாதங்களை வீசி, அந்த வைதிகரை விரட்டினார். வெகுண்ட வைதிகர்கள், கோயிலை இடிப்போம் என்று ஆர்ப்பரித்தனர். கூலிமக்களும், தாழ்த்தப்பட்டவர்களும், கலப்பு மணம் செய்து கொள்ளச் சம்மதித்த செட்டியாருக்குப் பட்டாளமானது கண்டு, கோபம் கொண்டு, ஓர் இரவு, அவர்கள் வசித்த குடிசைகளுக்குத்தீயிட்டனர். குய்யோ முறையோ என்று கூவி மக்கள் ஓடிவந்தனர். எங்கும் தீ! பசு, கன்று, வெந்தன. பாண்டம், பழஞ்சாமான் தீய்ந்தன. பழனியும் அவன் நண்பர்களும் தீ விபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றி, வீடுவாசல் இழந்தவர்களனைவரையும், அரைகுறையாக இருந்த கோயிலுக்கு அழைத்துச் சென்று, இனி அங்கேயே இருக்கலாம் என்று கூறினர்.

கலியாணம் சிறப்பாக நடைபெற்றது. சொக்கன் சந்தோஷத்தால் மெய்மறந்தான். குமரிக்கு, நடப்பது உண்

மையா, கனவோ என்று அடிக்கடி சந்தேகம் வந்தது. மறையூர் வைதிகர்கள் அன்று ''துக்க தினம்'' கொண்டாடினர்.

நாகவல்லி, குமரிக்கு ஆசிரியையானாள். குமரியின் மனம்,மொட்டு மலர்வது போலாகிவிட்டது.கோயில் வேலை நின்று இருந்தது. என்ன செய்வது இனி என்று பழனியைச் செட்டியார் யோசனை கேட்டார். ''என்ன இருக்கிறது செய்ய?'' என்று பழனி கேட்டான். ''ஆலயத் திருப்பணி அரைகுறையாகவே இருக்கிறதே''என்று செட்டியார் சொன்னார். ''கட்டிடம் அரைகுறையாக இருக்கிறது. ஆனால், ஆண்டவன் இங்கே கோயில் கொண்டுவிட்டார், ஏழைகளின் இல்லமாக இந்த இடம் ஆக்கப்பட்டபோதே. இங்கு இறைவன், அபிஷேகமின்றி, ஆராதனையின்றி, வேதபாராயணமின்றி, தானாக, சந்தோஷத்துடன் வந்துவிட்டார்'' என்றான் பழனி. மகனைக் கட்டி அணைத்துக்கொண்டு, ''உன் அறிவே அறிவு! இப்படிப்பட்ட உத்தமனை நான், ஊரிலே உலவும் சில வைதீக உலுத்தர் பேச்சைக் கேட்டுக்கொண்டு இம்சித்தேன்; நற்குணம் படைத்த நாகவல்லியைத் துன்புறச் செய்தேன்.'' என்று உருக்கமாகச் செட்டியார் பேசினார்.

''அப்பா! தாங்கள் தீர்மானித்தபடி சொத்து முழுவதும் கோயில் காரியத்துக்கே செலவிடப்பட வேண்டியதுதான். ஆலயம் கட்டும் வேலையும் தொடர்ந்து நடத்த வேண்டியதுதான்...'' என்று பழனி கூறிக்கொண்டே இருக்கையில், குழந்தை வேலர் குறுக்கிட்டு, ''நம் சொத்தைப் பாழாக்கிக் கோயில்கட்டி, குலம் ஜாதி பேசி சமூகத்தைக் குலைத்துவரும் வைதிகர்களிடம் கொடுப்பதா?'' என்று கோபத்துடன் கேட்டார். குழந்தைவேலர், சுயமரியாதை இயக்க வக்கீலானது கண்டு பழனி களித்தான்.

''ஆலயம் கட்டவேண்டியதுதான் அப்பா. ஆனால் அதன் அமைப்பிலே சில மாறுதல்கள் செய்துவிட வேண்டும். ஆயிரம் கால் மண்டபத்துக்கு ஆரம்ப ஏற்பாடாகிவிட்டது. அது கட்டி முடிக்க இன்னும் கொஞ்சம் வேலைதான் பாக்கி.

முடிந்தபிறகு, அதனை வௌவால் வாழுமிடமாக்கிவிடாமல் சிறுவர்களுக்கு அதனைப் பள்ளிக்கூடமாக்கிவிடலாம். நாகா வேறு பள்ளிக்கூடம் தேட வேண்டியதில்லை. பிரகாரம், சிறுசிறு விடுதிகளாகட்டும்; பாட்டாளி மக்கள் குடிஇருக்க! குளம், இங்கே வாழும் மக்கள் குளிக்குமிடமாகும். இங்கு அபிஷேகமும், உற்சவமும் நடப்பதற்குப் பதில், அன்பும், அறிவும் பரப்பும் பிரச்சார ஸ்தாபனம் அமைப்போம். அப்பா! தாங்கள் குமாரக் கோட்டம் கட்ட ஆரம்பித்தீர்கள். அது குமரிக்கோட்டமாக மாறிவிட்டது. ஜாதி பேதம் ஒழிந்த இடமாக, காதல் வாழ்க்கைக் கூடமாக மாறுகிறது. இதுதான் இனி, இந்த மாவட்ட சுயமரியாதைச் சங்கக் கட்டடம்; நமது 'பிரச்சார இலாக்கா' என்றான்.

''பேஷ் பழனி! அற்புதமான யோசனை. ஆலயம் அமைத்து அதிலே வைதிகர்கள் ஊர் சொத்தை விரயம் செய்வதற்கு வழி செய்யும் வழக்கத்தை நாம் ஒழித்துவிடுவோம், முதலில். இது அறிவாலயமாக, அன்பு ஆலயமாக மாறி விட்டது'' என்று செட்டியார் சந்தோஷத்துடன் கூறினார்.

''குமரக்கோட்டம் அமைத்தால், இங்கு கொட்டு முழக்கும், குருக்களின் தர்பாரும் இருந்திருக்குமேயொழிய பலன் ஏதும் இராது. குமரியின் அன்புக்குக் கட்டுப்பட்டு, ஜாதியை குலத்தைத் தள்ளிவிட்ட தாங்கள், இப்போது, குமரிக்கோட்டம் அமைத்து விட்டீர். நமது குலத்தவர் இதுவரை எத்தனையோ கோட்டங்கள் அமைத்தனர். ஒருவரேனும், இது போன்ற குமரிக்கோட்டம் கட்டினதில்லை. அந்தப் பெருமை தங்களுக்கே கிடைத்தது'' என்றான் பழனி.

''பழனி! என் கண்களைத் திறந்தவன் நீ,'' என்று கனிவுடன் கூறினார் செட்டியார்.

வேறோர் புறத்திலே, நாகவல்லி, குமரியின் கன்னத்தைக் கிள்ளிக் கொண்டே ''பலே பேர்வழி நீ குமரி. உன் பெயரால் கோயிலே கட்டுகிறார்கள் பாரடி'' என்று கேலி செய்து கொண்டிருந்தாள்.

''அவர்கள் சொல்வது தவறு அம்மா! இதற்குப் பெயர் பழனி ஆண்டவர் கோயில் என்று இருக்க வேண்டும்'' என்று சாமர்த்தியமாகப் பதிலுரைத்தாள் குமரி.

''அப்படிப் பார்க்கப் போனால், அதுகூடப் பொருந்தாது. 'லேகிய மண்டபம்' என்ற பெயர்தான் ரொம்பப் பொருத்தம்'' என்று கூறிவிட்டு ஓடினாள் நாகவல்லி. அவளைத் துரத்திக்கொண்டு குமரி ஓடினாள். தந்தையும் மகனும் அந்தக் காட்சியைக் கண்டு ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்தனர்.

★

# 9
# செல்லப்பிள்ளை

*[இது சீமான் உலகில் காணக்கூடிய ஒரு சிறு சித்திரம்! படக்காட்சியாக வெளிவந்ததல்ல; காமிராவுக்குத் தப்பிய காட்சிகளிலே இது ஒன்று]*

நம் நாட்டுக் காமிராக்கள்தான் இன்னமும் கைலாய வைகுந்தக் காட்சிகளைப் படம்பிடிக்கும் சத்காரியத்திலேயே ஈடுபட்டுள்ளனவே! சமூகத்தைப் படம் பிடிக்க நேரம் ஏது?

காமிராவுக்கு இவை தப்பிவிட்டன. ஆனால் கருத்துள்ளவர்கள், அவைகளைக் காணமுடியும்.

எங்கு? குறிப்பிட்டு ஒரு இடத்தைச் சொல்ல முடியுமா? காட்சி, சீமான்கள் உலகில் காணக்கூடியது என்று மட்டுந்தான் சொல்ல முடியும்.

*　　　*　　　*

இடம்: சீமான் வீடு—முன்புறம்.

உறுப்பினர்: சீமான், அவன் நண்பன். (பிறகு) வேலைக்காரக் குப்பன்.

காலம்: மாலை.

நிலைமை: சீமான், வெளியே புறப்பட சித்தமாகி, அதற்கேற்ற அலங்காரத்துடன் விளங்குகிறார். மோட்டார், 'ரிப்பேர் செய்யப்படுவதற்காகச் சொல்லி விட்டான் டிரைவர் மோகன். எனவே, 'பீட்டன்' தயாராக இருக்கிறது, சீமான் செல்ல.

வெளியூரிலிருந்து வந்திருக்கும் நண்பன், சீமானுக்குப் பள்ளிப் பருவ சிநேகிதம். நிம்மதியாக இருந்து படித்து ஒரு புத்தகம் எழுத, சீமான் வீட்டுக்கு வந்திருக்கிறார்.

சீமான், தன் நண்பனை நன்கு உபசரித்து வருகிறார்.

மாளிகை வாயிற்படியை நோக்கி இருவரும் நடந்து வருகின்றனர். அப்போது சீமான் உல்லாசமாக, நண்பனுடன் பேசுகிறார். தன்னை உபசரிக்கும் சீமானின் உள்ளம் குளிரப் பேசுவது தன் கடமை என்ற எண்ணம் நண்பனுக்கு.

நண்பன் எதிரே, தன் செல்வம், அந்தஸ்து, அதிகாரம் ஆகியவைகளைக் காட்டிக் கொள்வதிலே, சீமானுக்கு ஒரு அலாதியான சந்தோஷம்.

[இந்நிலையில், பேச்சு ஆரம்பிக்கிறது இருவருக்கும்]

சீமான்: (தன் நண்பனிடம், எதிரே வரும் தன் ஆளைக் காட்டி) பயலைப் பார்த்தீரா! எப்படி இருக்கிறான்?

நண்: கரிக்கட்டைபோல...

சீமான்: நிறம் கிடக்கட்டுமய்யா! நான்கூடத்தான் கருப்பு.

நண்: (அசட்டுச் சிரிப்புடன்) மறந்துவிட்டேன், மன்னிக்கணும். ஆனா, ஒங்க நிறம் கருப்பு என்றாலும், பளபளப்பு பாருங்கோ! அவன் அப்படி அல்ல...

சீமான்: அது கிடக்கட்டுமய்யா. இந்தப் பய இருக்கிற இருப்புக்கு இவன் இப்ப கலியாணம் வேறு செய்து கொண்டான்.

நண்: என்ன அவசரமாம்?

சீமான்: வயசு ஆச்சு, கிடாப்போல. ஆனா, இதுகளெல்லாம், காலை முதல் மாலைவரை வேலை செய்து கிடக்கணும்; பணம் காசு கிடையாது. என்னமோ கலியாணம், கலியாணம் என்று துடித்துக் கொண்டுபோய், கலியாணத்தை நடத்திக் கொண்டான்.

நண்: ஆமாம், கலியாணமென்றால் ஒரு பெரிய பொறுப் பாச்சே! நமக்கு முடியுமா இப்போது என்கிற கவலையோ முன்யோசனையோ கிடையாது.

[வேலையாள் வந்து கும்பிடுகிறான்.]

சீமான்: ஏண்டா, குப்பா! கலியாணம் செய்துகிட் டாச்சி! சந்தோஷந்தானே?

வேலை: (கூச்சத்துடன்) ஆமாங்க, எஜமான்...

சீமான்: எலே, டே! காதிலே என்னடா.

(நண்பனிடம்) பீடித்துண்டு

[வேலையாள் அதை எடுத்து அவசரமாக மறைக்கிறான்.]

[சீமான் வேலையாளை நோக்கி.]

ஏண்டா, உன் மூஞ்சிக்கும், யோக்யதைக்கும் கலி யாணம் வேறே செய்துகிட்டே! கால்காசுக்கு மதிப்பாளாடா உன்னை, உன் சம்சாரம்?

[வேலையாள் இளிக்கிறான்.]

சீ: என்னடா, பல்லைக் காட்டறே?

(நண்பனைப் பார்த்து) பெண், நல்ல இலட்சணமா இருக்கா சார். கொஞ்சம் சிகப்புக்கூட. (வேலையாளைப் பார்த்து) ஏண்டா, உன் சம்சாரம் சிகப்புத்தானே?

வே: மாநிறமா இருப்பா.

சீ: போடா போ! நல்ல சிகப்புத்தான். நல்ல தேய்ப் பும் மேய்ப்பும் இருந்தா, நல்லத்தான் இருப்பா. அது பாவம், இவனிடம் வந்து சேர்ந்தது.

நண்: ஏழையா இருக்கும்...

சீமான்: இவன் என்ன மகாராஜனோ? அதெல்லாம் இல்லை. ஆசாமி, எப்படியோ கொண்டுவந்துவிட்டான், சரியான குட்டியாப் பார்த்து.

வே: எங்க அத்தை மகதானுங்களே, அவ.

சீமான்: அத்தை மகளோ, மாமன் மகளோ, நல்ல பெண். (நண்பனைப் பார்த்து) நல்ல சினிமா டைரக்டர் கையிலே அகப்பட்டா, ஸ்டார் ஆயிடுவா சார்.

நண்: கிராமப் பெண்களே...

சீமான்: ஒரு தனி அழகுதான்...இவன் எப்படி அவளை வைச்சிக் குப்பை கொட்டப் போறானோ தெரியவில்லை.

நண்: டே, குப்பா! ஐயா, ரொம்பப் புகழ்கிறாரே, உன் சம்சாரத்தைப் பத்தி.

வே: ஆமாங்க.

சீமான்: ஏண்டா, உன்னிடம் ஆசையா இருக்காளா?

வே: (வெட்கத்துடன்) ஆமாங்க...சிறுசுதானுங்களே! புதுசு பாருங்கோ...

சீமான்: சரி! ஜாக்கிரதையாக வைச்சிக் காப்பாத்து. தெரியுதா? டே! அருமையான பொண்ணுடா அது. உனக்குக் கிடைக்கிற வஸ்து இல்லே. தெரியுதா?

வேலை: சரிதானுங்க...

சீமான்: சும்மா, நம்பத்தான் தாலியைக் கட்டிப் போட்டோமென்று இருந்து விடாதே, தெரியுதா? (நண்பனைப் பார்த்து) எனக்குச் சந்தேகம்தான் சார். அந்தக் குட்டி, இந்தப் பயகூடக் காலந்தள்ளுவாளான்னு சந்தேகம்தான். ஏன்னா, இவன் இருக்கிற இலட்சணத்துக்கு இவன் துளிகூட அவளுக்கு ஏத்தவனல்ல. நீங்க வேணுமானா ஒரு நாளைக்கு பாருங்க, அவ, ஒரு நீலக்கலர் சேலையைக் கட்டிக் கொண்டு, கொண்டை போட்டுக்கிட்டு, குடத்திலே தண்ணி எடுத்துக்கிட்டுப் போகிறபோது பார்த்தா...

வேலை: நான் போயிட்டு வரட்டுங்களா?

சீமான்: ஏண்டா, கோவமா? என்னடா இது நம்ம புதுப் பொண்டாட்டியைப் பத்திப் பேசறாங்களேன்னு வருத்தமா?

வேலை: இல்லிங்க...

சீமான்: போ! போ!

[வேலையாள் போகிறான்]

சீமான்: (நண்பனிடம்) பயலுக்குக் கொஞ்சம் கோபம். கிடக்கிறான். சார், உண்மையிலேயே இந்தப் பய அந்தப் பெண்ணுக்கு ஏற்றவனே அல்ல. ரொம்ப அழகு சார்! எப்படித்தான் இவனிடம் தக்குவாளோ, தெரியலை. (கைக்கடியாரத்தைப் பார்த்து) ஓ! நேரமாயிடுத்து! வேலா கோபித்துக் கொள்வாள். நான் வரட்டுமா?

நண்: செய்யுங்க.

சீமான்: நீங்கள் அந்தப் புத்தகத்தைக் கட்டிக்கொண்டு அழப் போகிறீர்களாக்கும்?

நண்: ஆமாம், இன்னும் ஒரு ஐம்பது பக்கம் இருக்கு...

சீமான்: என்ன புராணம்னு பேர் சொன்னீர் அதுக்கு?

நண்: புராணமல்ல, யோக விளக்கம்.

[சீமான் விடைபெற்றுக் கொள்கிறார்.]

[சீமான் போனபிறகு வேலையாள் வருகிறான். நண்பனைப் பார்த்து]

வே: யோக்யதையாய்யா இது?

நண்: என்ன குப்பா! என்ன கோபம்?

வேலை: இல்லையப்பா, என்னமோ வேலை செய்து புழைக்கிறோம், வயித்துக்காக. எங்க அப்பன் ஜெமீன்தாரனா, நான் குடித்துவிட்டுக் கூத்தி வீடுபோக? பாடுபட்டு உழைச்சி நான் குடும்பம் நடத்தறேன். ஏழைன்னா எது வேணுமானாலும் பேசிடலாமா சீமானுங்க?

நண்: என்ன திட்டினார் இப்போ?

வே: திட்டவேணுமா? கழுதே நாயேன்னு ஆயிரம் தடவை திட்டிப் போட்டாக்கூடப் பரவாயில்லையேய்யா. அந்த ஆள், என்னாத்தான் பணத்திமிரு இருந்தாலும், என் கிட்டவே, என் பொண்ஜாதியைப் பத்தி எதுவோ தெருவிலே சுத்தற பொம்பளையைப் பத்திப் பேசறதுபோலப் பேசறதும், உனக்கு ஏத்தவளில்லை, ஜாக்ரதையாக காப்பாத்த வேணும், சினிமாக்காரி போல இருக்கா என்று, எவ்வளவு தலை இறக்கமான பேச்சு பேசினான் அந்த மனுஷன். சோத்துக்காக உழைக்கறதுக்கு இந்த உடலை ஒப்புவிச்சேன். மான ஈனத்தைக் கூடவாய்யா? ஒரு புருஷன்கிட்ட அவன் பெண்ஜாதியைப் பத்தி இப்படியாய்யா பேசச் சொல்லுது, என்னாத்தான் பணம் இருந்தாலும்...

ந: கோபிக்காதே குப்பா! அடடே, என்னடா இது அழறே. சும்மா தமாஷ் செய்தாரு...

வேலை: இதுதான் தமாஷாய்யா, தமாஷு? ஏழையைக் கூப்பிட்டு வைச்சிக்கிட்டு அவன் பொண்சாதியைப் பத்தி அவன் எதிரிலேயே, கேவலமாகப் பேசிக் கேலி செய்யறது தமாஷா? என்னென்னமோ, பெரிய பெரிய புஸ்தகமெல்லாம் படிக்கிறயே நீ!

நண்: நீ இவ்வளவு வருத்தப்படுவேன்னு, நான் எண்ணலை...

வேலை: நீ எப்படி எண்ணுவே? நீத்தான், அவன்கூடச் சேர்ந்துகிட்டு, அகப்பட்டவரைக்கும் அனுபவிக்கறேயே, உனக்கு மாத்திரம் எப்படி ஏழைக வயிறு எரியறது தெரியப் போவுது? 'அவனுக்கு ஏத்தவளா நீ? உனக்குத் தக்கு

வாளா அவ?' என்று அவன் கேட்டான்; நீ அவர் தமாஷ் பேசினாரு என்று சொல்கிறே. நியாயமாகப் பேசு, இதுவா தமாஷு?

நண்: விளையாட்டு விபரீதமாகப் போச்சு...

வே: அட யாரடா அறிவு கெட்டவனா இருக்கறே. நீ படிச்சது எதுக்கு? அந்தப் பண மூட்டைக்குப் பக்கமேளம் அடிக்கிறதுக்கா? நியாய அன்யாயம் பார்த்துப் பேசறதே இல்லை என்று சத்தியம் செய்துகிட்டுத்தான் அந்தப் பெரிய புஸ்தகத்தைப் படிக்கறயா? என்னடா இது, ஒரு மனுஷனை அவன் எதிரிலேயே அவமானப் படுத்தறாங்களேன்னு கொஞ் சம்கூட இரக்கம் வரலை...

நண்: நான் என்னப்பா செய்வது? அவனுங்க சுபாவம் அது.

வேலை: ஏழைக மனசு பதறப் பதறப் பேசறது, அதுக்கு நீ தமாஷ்னு பேரு வைக்கறது...நல்லா இருக்கய்யா உங்க நியாயம்.

நண்: கிடக்கிறான், விட்டுவிடு! பதறாதே...

வேலை: வேணுமானா வாய்யா, இப்பக் காட்டறேன், உன் கண்ணாலேயே பாரு...

நண்: எதை?

வே: என்னைச் சொன்னானே, அந்தப் பெண்ணு இவன்கிட்டத் தக்குவாளான்னு, அவன் பெண்ஜாதி நடத் தையைக் காட்டுகிறேன் வா.

[வேலைக்காரக் குப்பன் கோபத்தோடு, சீமானின் நண்பனின் கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு, வேகமாகச் செல்கிறான், சீமான் வீட்டுப் பின்புறம் உள்ள மோட்டார் ஷெட்டுக்கு.]

('ஷெட்டு' கதவு முழுவதும் மூடப்படவில்லை; கொஞ்சம் திறந்திருக்கிறது.கதவோரமாக நிற்கிறார்கள் இருவரும். உள்ளிருந்து பேசும் குரல் வருகிறது.)

பெண்: எனக்குத் துளிகூட நிம்மதி இல்லை மோகன்! நான் சொல்வதைக் கேள். நாம் பேசாமல் வெளியே போய் விடுவோம்.

ஆண்: உனக்குப் பைத்யம்...

பெண்: என்னால் அவனோடு இருக்க முடியாது இனி மேல்.

ஆண்: என்ன உனக்கு இப்போது கஷ்டம்?

பெண்: விளையாடாதே. எனக்கு ஏற்றவனா அவன்?

[வளை ஒலி, முத்தமிடும் சத்தம்,பெருமூச்சு,இலேசான சிரிப்பு, மீண்டும் வளை ஒலி, மெல்லிய குரலில் பாட்டு, மோட்டார் ஊதுகுழல் மெல்லிய நாதமாக்கப்படுகிறது.]

[சீமானின் நண்பன், வேலையாளின் வாயைத் தன் கைகளால் பொத்தியபடி, அங்கிருந்து இழுத்துக் கொண்டு போகிறான்.]

[கொஞ்ச தூரம் சென்றதும், வேலையாள், ஆவேசம் பிடித்தவன்போலக் கூச்சலிட்டு...]

வேலை: என் மனைவியை என் எதிரிலே இழிவாகப் பேசினானே, எப்படி இருக்கிறது அவன் தர்மபத்தினியின் வேலை! பார்த்தாயா?

நண்: பார்த்தேன், என்ன செய்வது?

வேலை: இப்படிப்பட்ட உலகைப்பற்றி நீ படிக்கும் புத்தகத்திலே ஒரு வரி கூடவா இல்லை?

நண்: ஏராளமாக இருக்கிறது...படித்ததை எல்லாம் சொல்லப்போனால்...

வேலை: சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளையாக இருக்க முடியாது.

[நண்பன், வெட்கத்தால் தலைகுனிந்து கொள்கிறான். வேலையாள், கோபமாகப் போய்விடுகிறான்.]

*

# 10
# நெற்றியில்...நெஞ்சில்?

“என்னடி அது, கூட்டுகிற சத்தத்தைக் காணோம்?”

“இதோ, பெருக்கிக்கிட்டுதானேம்மா இருக்கிறேன். பீரோ கண்ணாடியைத் துடைச்சேன்.”

“கண்ணாடியைத் துடைச்சியா, கண்ணாடியை! கண்ணாடி எதிரே நின்று கொண்டு, அழகைப் பார்த்துக்கிட்டே போலிருக்கு. வரவர உனக்கு ‘ராங்கி’ அதிகமாகுதடி நண்டு”

“நண்டு” என்று அழைக்கப்பட்ட வேலைக்காரியின் உண்மையான பெயர் மீனாட்சி. வேலைக்கு வந்த அன்று, “என்னடி பெயர்?” என்று எஜமானி கேட்டபோது, ‘மீனாவுங்க’ என்று பணிவுடன் பதில் சொன்னாள் வேலைக்காரி. “மீனும், நண்டும்” என்று கூறிக் கொண்டே மின்னல்கொடியாள் சிரித்தாள். மீனாவுக்குத் தெரியுமா, அந்தச் சிரிப்பு எவ்வளவு அழுத்தக்காரர்களின் பெட்டிகளை எல்லாம் திறந்திருக்கிறது என்று. அவள் மரம்போல நின்றாள். அன்று முதல் மின்னல் கொடியாள், மீனாவை ‘நண்டு’ ஆக்கினாள்.

அன்று மின்னல் கொடியாளுக்குப் பிரத்யேகமான சந்தோஷம். ஜெமீன் குடிகளின் பாதுகாப்புச் சங்கத் தலைவர் ஜெயச்சந்திரர், மின்னல் கொடியாளின் முதலியாரிடம் ஒரு பந்தயம் கட்டினார். அதாவது, முதலியாருக்கு ஆண் குழந்தை பிறக்குமென்று—இல்லை; பெண்தான் என்று முதலியார் கூறினார்.

“ஆண்” என்றார் ஜெயச்சந்திரர்.

''பந்தயம் என்ன?'' என்று மின்னல் கொடியாள் கேட்டாள்.

''ஒரு வைர திருகுபில்லை'' என்றார் ஜெயச்சந்திரர்.

ஒரு வாரத்திற்கெல்லாம், முதலியாருக்கு 'பெண் குழந்தை' பிறந்தது! (வீட்டில் முதலியாரின் மனைவிக்கு) ஜெயச்சந்திரர் தோற்றார். அதற்காக அவர் வருத்தப்படவில்லை—கொஞ்சம் முந்திக் கொண்டதால், அவள் முதலியாரின் பொருளாகிவிட்டாள். இல்லாவிட்டால் ஜெயச்சந்திரன்...

மின்னல் கொடியாளுக்காகப் போட்டியிட்டவர் பலர். ஏழாவது கீர்த்தனை முடிப்பதற்குள் பாட்டு வாத்தியாருக்கும் பக்க வாத்தியாருக்குமே பலமானபோட்டி. சங்கீத விஷயமாக அல்ல—மின்னல் கொடியாள் விஷயமாகத்தான்!

ஒருமுறை மின்னல் தாளம் தவறிவிட்டாள்—பாட்டு வாத்தியாருக்கு, அது ஓர் அற்புதமான சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது.

'தக்க தக்கிட்டா...தக்க தக்கிட்டா' என்று உச்சரித்தபடி சிட்டிகை போட்டுக் காண்பித்தார். பிறகு மின்னலின் தொடையிலே அவரே அந்தத் தாளத்தைப் போட்டுக் காட்டினார். பாட்டு வாத்தியாருடன் ஒவ்வொரு நாளும் தவறாமல் வந்து மின்னலின் கீதப் பயிற்சியைக் கவனித்து வந்தபிடில் முத்தையாவுக்குப் பிரமாதமான கோபம். ''எப்படியய்யா...மின்னல் கொடியாளைத் தொட்டுத் தாளம் போட்டுக் காட்டலாம்? ஏன், சொன்னால் போதாதா?'' என்று கேட்டார்.

''அட, அபசுரமே! நீயா என்னுடைய ஞானத்தைக் குறைகூற வந்துவிட்டாய்?'' என்று பாட்டு வாத்தியார் கண்டித்தார்.

''ஏனய்யா! உங்க ரெண்டு பேருடைய வித்துவத்தைப் பற்றி விவாதித்துக் கொள்ள என் வீடுதானா இடம்? இதற்குத்தானா...மாதம் பதினைந்து?'' என்று, மின்னலின் தாயார் முருகாயி கூறி பபிறகுதான், தாளச்சண்டை ஓய்ந்தது. இப்படிப் பலருக்குள் போட்டியை, சண்டையை மூட்டி விட்ட மோகனச் சிரிப்புக்காரி அந்த மின்னல்கொடியாள்.

ஜெயச்சந்திரர் பரிசாகக் கொடுத்த வைரத் திருகுபில்லையை வைத்துக்கொண்டு கூடத்திலே ஐவ்வாது பொட்டைச் சரிபார்த்துக் கொண்டிருந்த சமயம் அது. படுக்கையறையைக் கூட்டப்போன மீனா, நிலக்கண்ணாடி முன் நின்று கொண்டிருந்தாள், இரண்டொரு நிமிஷம்! கூட்டும் சத்தம் கேட்காது போகவேதான், மின்னல் 'நண்டு'வைக் கூப்பிட்டாள். கூப்பிட்டு, ''அழகைப் பார்த்துக் கொள்கிறாயாடீ!' என்று கேட்டாள். இல்லையென்று சொன்னாள் மீனா. அது, உண்மை—பொய் இரண்டும் கலந்த பேச்சு. மீனா கண்ணாடியைத் துடைக்கவில்லை—பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்—ஆனால் அவள் தன் அழகைப் பார்த்துக் கொள்ளவில்லை. நெற்றியிலே இருந்த வீக்கத்தைப் பார்த்துக் கொண்டாள். அவளுக்குக் கிடைத்த பரிசு அது.

அவள் கணவன், ''கோழிச் சண்டை'' விடுபவன்! எத்தனையோ விதமான தொழில் செய்து பார்த்து, கடைசியில், அவன் இந்தத் தொழிலைக் கண்டுபிடித்தான். நாளும் பள்ளிக்கூடத்துக்கு முன்புறம் கோழிச்சண்டை விடுவான்—காசு திரட்டுவான். பந்தயம்கூடக் கட்டுவார்கள் சிலபேர். கோழியை, மில்டரி ஓட்டல் சின்னான் வாடகைக்குத் தந்து வந்தான். அதாவது, வாரத்துக்கு ஒரு ஜதை கோழி தருவான். எப்படியோ பாடுபட்டு, அந்தக் கோழிகளுக்குச் சண்டை போடக் கற்றுக்கொடுத்து விடுவான், கொண்டான். 'கொண்டைய நாயுடு' என்று கையிலே—பெரிய எழுத்திலே 'பச்சை' குத்திக் கொண்டுதான் இருந்தான். ஆனால்

ஊரார் அவனை, 'கொண்டான்' என்றுதான் அழைப்பார்கள். கோழிக்கும் சண்டை போடும் திறமை வரும். ஞாயிற்றுக்கிழமையும் வந்துவிடும்—அன்று ஸ்பெஷல் கோழிப்புலவு தயாராகிவிடும்—புதிய கோழிகள் கொடுப்பான் சின்னான், திங்கட்கிழமை. இப்படியே கோழிகள் மாறிக் கொண்டே இருக்கும், கோழிகளின் திறமைக்குத் தக்கபடி. கொண்டானுடைய போதை ஒரு நாளைக்குக் கைலாயம் வரை அழைத்துச் செல்வதாக இருக்கும். ஒரு நாளைக்கு எறும்பு கடித்த மாதிரி மட்டுமே இருக்கும். இந்த போதையின் அளவிலே அவன் அக்கரை காட்டி வந்ததால் வாடகைக்குப் பெறுவதை விட, சொந்தத்திலே வாங்கி விடலாமே என்ற எண்ணம் பிறக்கவில்லை. பிறந்தாலும், 'மாலையிலே அந்தச் சோலையிலே உள்ள மயக்க மருந்து' அந்த எண்ணத்தைக் கொன்றுவிடும்.

வாடகைப் பணத்தைச் சரியாகச் சிலசமயம் கொடுக்க மாட்டான் கொண்டான். கெஞ்சிப் பழக்கமில்லாதவன். எனவே, கோபமாகவே வீட்டுக்கு வருவான். மிகவும் கஷ்டப்பட்டு விஷயத்தைத் தெரிந்து கொள்வாள் மீனா. பிறகு அந்த மீல்டரி ஓட்டல் அண்ணனைப் பார்த்து, நல்லதனமாகப் பேசி, கோழிகளைக் கொடுக்கும்படி சொல்வாள். அவனும் கொடுப்பான். மீனாவின் நடை, நொடி, பாவனை, முகவெட்டு எல்லாம் சின்னானுக்குப் பிடித்திருந்தது.ஆனால் 'அண்ணேன்' என்று அவள் கூப்பிடும்போது மட்டும் அவனுக்குக் கண்ணில் 'சால்னா'த் துளி விழுந்த மாதிரி எரியும். 'அண்ணே' என்று மீனா சொன்ன உடனே, சின்னான், ''ஏண்டியம்மா தங்கச்சி.'' என்று கேலியாகப் பதிலளிப்பான். முன் வார்த்தை தூது; பின்னால் வரும் வார்த்தைகள் சும்மா ஒப்புக்குக் கூறுவது என்பது அவன் எண்ணம். மீனாவுக்கு அவனுடைய போக்கு புரியாமல் போகவில்லை.ஆனால் கொண்டானுக்குத் துரோகம் செய்ய அவள் மனம் ஒப்புவதில்லை. கோழி வாங்கிப் போக வரும்போது, ஒரு 'கப்' சாயாவும் சின்னான் தருவான். ''ஏண்ணே! அவருக்கு ஒரு ஜதை கோழியை விலைக்கேதான் வாங்கிக்கொடேன்.

நீதான் பகவான் புண்ணியத்தாலே நல்லா சம்பாதிக்கிறீயே. இந்த உபகாரம் செய்யறதானே அண்ணே.'' என்று மீனா கேட்பாள். சின்னான் பரம திருப்தி அடைவான்.

''ஆவட்டும் தங்கச்சி! செய்வோம்...எனக்கும் ரொம்ப நாளா...மனசிலே எண்ணம் உண்டு. எதுக்கும் வேளை வர வேணுமில்லே'' என்று கூறுவான். மீனா அவன் எதற்கு வேளை தேடுகிறான் என்பதைப் புரிந்து கொள்ளாமலில்லை. அவளுடைய எண்ணமெல்லாம் எப்படியாவது தட்டிக் கொடுத்துக் கொண்டே சின்னான் உதவியைப் பெற்றுத் தன் புருஷனை ஒருவழிக்குக் கொண்டுவரவேண்டும் என்பதுதான். சின்னானின் நோக்கம் வெளிப்படையாகத் தெரிகிறது... இஷ்டமில்லை—அத்தகைய சுபாவக்காரியல்ல...ஆனாலும், அவனிடம் சண்டை போட்டுக் கொள்ளவும் இஷ்டமில்லை. என்னமோ ஒழிந்து போகிறான்—நம் வரையில் நாம் ஜாக்கிரதையாக இருப்போம் என்று அவள், பாவம், எண்ணிக் கொண்டிருந்தாள்.

மின்னல் கொடியாளுக்குப் பரிசு கிடைத்த அன்றுதான், வழக்கத்துக்கு மாறாகச் சின்னான், கோழி கேட்க வந்த மீனாவை, ''தங்கச்சி! நல்ல சமயத்திலே வந்தே! வா, வா!'' என்று அழைத்தான்—கபீரென்று இருந்தது மீனாவுக்கு; ஒருவிதமாகிவிட்டது..இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''என்னாண்ணே! அவ்வளவு அக்கரையாக என்னைத் தேடின காரணம்?'' என்று கேட்டாள்.

''தா! இத பாரு மீனா...நான் எப்பவும் மனுஷாளை மறக்கற வழக்கம் கிடையாது!'' என்று பொதுவான தத்துவம் பேசினான் சின்னான்.

இவ்வளவும் கடையின் தாழ்வாரத்தில் நடக்கிறது.

கடை அமைப்பே அவளுக்கு அன்றுதான் கொஞ்சம் பயம் தந்தது. தாழ்வாரத்துக்கும், உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும் கொஞ்ச தூரம்தான் இருந்தது. ஒருவருக்கொருவர் தெரிய முடியாது; குறுக்கே இருந்த

சுவரை எடுக்கும் விஷயமாக, கட்டடக்காரருக்கும் சின்னா னுக்கும் தகராறு.

''கொஞ்சம் மாவு இடிக்க வேணும் மீனா. ஆள் வர வில்லை'' என்று சேதியை ஆரம்பித்தான் சின்னான்.

''அடேயப்பா! இதுக்கா...தேடினேன், தேடினேன்னு சொன்னே! அதுக்கென்ன, இடித்துத் தர்ரேன். எங்கே உரல் இருக்கு?'' என்று கேட்டாள், மீனா.

''புழக்கடை நடையிலே இருக்கு. நீ போ. நான் ஆளை அனுப்புகிறேன்'' என்றான்.

உண்மையாகவேதான் அரிசியை ஆள் கொண்டு வந்து கொடுத்தான் –மகிழ்ச்சியாகவே மீனா மாவு இடித்துக் கொண்டிருந்தாள். ஓட்டலில் கூட்டம் குறைந்தது. குறும்புக் காரராக இருந்த இரண்டோர் ஆட்களை, கடைவீதிக்கு வேறு வேலையாக அனுப்பிவிட்டான் சின்னான். முஸ்தீபு செய்து கொண்டு,'கல்லா'வில் வேறு ஆளை உட்காரவைத்து விட்டு, மாவிடிக்கும் இடம் சென்றான். அவன் வந்த பிறகு தான் அந்த இடமும் ஒரு குகைபோல இருப்பது தெரிந்தது, மீனாவுக்கு! கொஞ்சம் பயந்தாள். சின்னான் அவளருகே சென்று கொஞ்சநேரம் நின்று கொண்டிருந்தான். அவளும் அவனைக் கவனிக்காதவள்போலவே மாவிடித்துக் கொண்டி ருந்தாள். ''வேலை நடக்கட்டும்!'' என்று கூறிக் கொண்டே அவளை அவசரமாக ஒரு முத்தமிட்டான். அவன் பிடியிலி ருந்து விலகினாள் வேகமாக. அந்த வேகத்திலே,எதிரிலிருந்த சுவரிலே மோதிக் கொண்டாள். நெற்றியில் சிறிது காயம்; வீக்கம்! சின்னான் சரேலென அந்த இடத்தைவிட்டுப் போய் விட்டான். வழக்கமாக உட்காரும் இடத்தில் சென்று, சோக மாக உட்கார்ந்து கொண்டான்.

அவள் மாவு இடித்துவிட்டு, அதனை ஒழுங்காகத் தட்டிலே கொட்டி, ஓட்டல் ஆளிடம் கொடுத்துவிட்டு வீடு வந்தாள். வரும்போது அவளும் சின்னானிடம் ஒன்றும் பேச வில்லை; சின்னானும் அவளைக் கவனிக்காதது போலிருந்து விட்டான். கோழிகளை மட்டும் ஓட்டல் ஆள் கொடுத்தான்.

அந்த நெற்றி வீக்கத்தைத்தான் மீனா, மின்னல்கொடியாளின் படுக்கையறைக் கண்ணாடி முன்பு பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான்கு வருடங்களாகிவிட்டன. நானாவிதமான மாறுதல்கள்! கொண்டான் சிறை சென்றுவிட்டான். சின்னான் பெரிய ஓட்டல்காரனாகிவிட்டான், குடிவகையும் கொடுத்து வாடிக்கைக்காரரைப் பெருக்கிக் கொண்டு. முதலியாரை தேர்தல் சுரண்டிவிட்டது! ஜெயச்சந்திரருக்குத் தோல்வியும் தேய்பிறையும், சொத்தில்— செல்வாக்கில் சகலத்திலும் மின்னல் கொடியாளிடம்!

இப்போது மீனா பணிப்பெண் அல்ல; பிரபல ஓட்டல் முதலாளி சின்னானின் வைப்பு. குதிரை வண்டியில் வந்து இறங்குகிறாள், மின்னல் வீட்டுக்கு. ''வாடிம்மா மீனா!'' என்று வரவேற்கிறாள் மின்னல். ''என்னக்கா, உடம்புக்கு?'' என்று சுகம் விசாரிக்கிறாள் மீனா. பழைய பீரோவும்— நிலக்கண்ணாடியும் இப்போது அங்கு இல்லை. மீனாவின் நெற்றியில் திலகம் கொஞ்சம் கலைந்திருக்கிறது. மின்னல், அதனைச் சரிசெய்து விடுகிறாள். அவள் கையில் அந்தத் தழும்பு தென்படவில்லை. நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன அல்லவா! மேலும், மீனாவின் தழும்பு நெற்றியிலிருந்து மறைந்து இருதயத்தில் பதிந்துவிட்டது.

அவள் விபச்சாரியாகிவிட்டாள். அக்காவுக்கு மற்றொரு தங்கை! ஆண்களின் காமப்பசிக்கு மற்றோர் இரை! சமுதாயத்துக்கு மற்றோர் சனியன்! வறுமையில் புழுத்த புழு!

★

---

இந்தக் கதை 1962-ல் 'இனமுழக்கம்' பொங்கல் மலரில் வெளிவந்தது.

XA:192
192



# பேரறிஞர் அண்ணா

"அண்ணாவின் [illegible] கை [illegible] ஒளிர்ந்த [illegible] யாவும் [illegible] மலரச் செய்யும் [illegible] என்பதை அறிய [illegible] சுவை குன்றாது, [illegible] நிறைவுறும் வண்ணம் [illegible] லும் எழுதும் திறன் [illegible] எழுத்துக்கு ஒரு நடை [illegible] முடியாது. இருந்தால் [illegible] வீர சாலமோசுந்தரன் [illegible]

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, [illegible], சென்னை 600 001